கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–14, இதழ் – 3 Volume - 14, Issue - 3	மாசித் திங்கள் February 2023	விலை ரூ. 25/– Price Rs. 25/-	ஆண்டு சந்தா ரூ. 300/– Annual Subscription Rs. 300/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழா 08.01.2023

"Delivered by India Post"

www.indiapost.gov.in

SAPPIDA VANGA CATERERS

PURE VEGETARIAN

சாப்பிட வாங்க

சுத்த சைவம்

திருமணம், வரவேற்பு, வீட்டு வைபவங்கள்
மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும்
கூப்பிடுங்க சாப்பிட வாங்க

இப்பொழுது இன்னும் புது பொலிவுடன்

Contact: 9176657165, 9176657136,
9884302456, 6385732827, 9176657108,
hotelvassi123@gmail.com

சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழா காட்சிகள்

ஒரு வருட பலனுக்கு நெல்லை நடுங்கள் !
முப்பது வருட பலனுக்கு மரங்களை நடுங்கள் !!
நூற்றாண்டு பலனுக்கு கல்வியை கொடுங்கள் !!!

N.M.P அறக்கட்டளை

கல்வி உதவித்தொகை வழங்கும் விழா

இயற்கை விவசாய உணவு திருவிழா

என்றும் உங்கள் ஆதரவுடன்

NMP
CHARITABLE TRUST
giving is living

கஸ்தூரிபாய் ®
கம்பெனி – NMP ரெடிமேட்ஸ்
Since 1943, Chidambaram.

32,33,34 மேல ரத வீதி, சிதம்பரம்.
போன்: 04144 – 222 228 | cc@kasthuribaicompany.com

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

சிதம்பரம் கஸ்தூரிபாய் கம்பெனி NMP ரெடிமேட் & பலகாரம் . காம், NMP **தொண்டு சார்பு அறக்கட்டளை** மூலம் ஆண்டு தோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் விழா 11.01.2023 அன்று பலகாரம்.காம் ஆனந்தலஹரி ஹாலில் நடைபெற்றது. விழாவிற்கு சிதம்பரம் **சார் ஆட்சியர்** திருமதி. **ஸ்வேதா சுமன்** IAS, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உதவிதொகை வழங்கினார். அறக்கட்டளை தலைவர் திரு **வி.முத்துக்குமார்** வாழ்த்துரை வழங்கினார். திருமதி **ஸ்ரீவித்யா முத்துக்குமார்** அனைவரையும் வரவேற்றார். மேலும் **தேசிய விவசாயிகள் தினம்** அன்று மாவட்ட அளவில் விவசாயிகள் ஒன்றிணைக்கப்பட்டு **இயற்கை விவசாய உணவு கண்காட்சி திருவிழா** 21.12.2022 முதல் 23.12.2022 வரை விவசாயிகள் மற்றும் பொது மக்கள் ஆதரவோடு இயற்கை விவசாயத்தின் மகத்துவத்தை உணர்த்தும் வகையில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

KASTHURIBAI Company - NMP Readymades
Since 1943. Chidambaram.
Palagaram.com HIGH CLASS PURE VEG RESTAURANT
156, West car Street, Chidambaram.
PAKSHANAM.COM sweets & savouries
The taste of tradition

மணமகள் தேவை

பெயர் செல்வன் **S. கணபதி சுப்ரமணியன்**
படிப்பு B.E., (I & C.E) PSG College Coimbatore
வேலை Software Architect, Robert Bosch,
பெங்களூரு
Rs. 1.5 Lakhs/PM
பிறந்த தேதி 23.10.1990
உயரம் 173cm
நட்சத்திரம் கேட்டை
கோத்திரம் காருட
பூர்வீகம் இடைக்கட்டு (அரியலூர் மாவட்டம்)
தகப்பனார் **R. சுவாமிநாதன்,** B.Sc., BL., Advocate
தாயார் **S. நளினி,** B.A., இல்லத்தரசி
(கல்யாணசோழபுரம்)
முகவரி No. 5, Vellala Street,
Edaikattu Village,
Udaiyar Palayam Tk.,
Ariyalur DT - 612 901.
Cell : 94430 24625, 96290 02140

பெயர் செல்வன் **V. வினோத்**
படிப்பு MCA
வேலை Sclerawork Inc. (Work from Home)
Rs. 17.6 Lakhs/PA
பிறந்த தேதி 26.08.1988

உயரம் 184 cm
நட்சத்திரம் திருவோணம்
கோத்திரம் விளந்துட
பூர்வீகம் வரகடை
தகப்பனார் **S. வாஞ்சிநாதன்**
தாயார் **D. அன்னபூரணி** (புலவனூர்)
முகவரி 21/35, Big Street,
மதுரா நகர், சேந்தங்குடி,
மயிலாடுதுறை – 609 001.,
, Cell : 99650 45888 / 95974 76716
விருப்பம் Any Degree

பெயர் செல்வன் **S. பாலசுந்தரம்**
படிப்பு B.E. (Mechatronics)
வேலை Software Developer,
Zoho Corporation Pvt. Ltd. Chennai
Rs. 18 Lakhs/PA
பிறந்த தேதி 16.11.1996

உயரம் 6' - 2"
நட்சத்திரம் உத்திராடம்
கோத்திரம் சாத்துக்குட
பூர்வீகம் தலைஞாயிறு
தகப்பனார் **K. சேகர்**
தாயார் **S. ஜெயந்தி** (மூவலூர்)
முகவரி 1/19, கீழ வீதி, தலைஞாயிறு,
மயிலாடுதுறை – 609 201.
, Cell : 98438 92862, 63826 50760
விருப்பம் உயரம் 5' - 6" க்குமேல்

மணமகன் தேவை

பெயர் செல்வி S. பவதாரணி
படிப்பு M.A., B.Ed. (English)
பிறந்த தேதி 14.03.1997
உயரம் 151 cm
நட்சத்திரம் கார்த்திகை
கோத்திரம் களத்துட
பூர்வீகம் மல்லாவரம் (மணல்மேடு அருகில்) மயிலாடுதுறை
தகப்பனார் S. சரவணன், M.A., B.Ed.,
Govt. Aided School, சிவகங்கை
தாயார் S. சசிகலா, (பாங்கல்–திருத்துறைப்பூண்டி)
முகவரி 18, சொசைட்டி லே அவுட் மெயின்,
சிலம்புத் தெரு,
செந்தமிழ் நகர்,
சிவகங்கை (DT)
Cell : 97870 54034, 95975 46608
விருப்பம் Good job and good family background.

பெயர் செல்வி A. பிரம்மதுர்கா
படிப்பு B.E., (Civil) M.B.A.,
பிறந்த தேதி 14.02.1998
உயரம் 154 cm
நட்சத்திரம் உத்திரம் 2ம் பாதம்
கோத்திரம் ஆத்ராய
பூர்வீகம் திருப்பனந்தாள்

தகப்பனார் Dr. D. அனந்தநாராயணன்
தாயார் A. பர்வதவர்த்தினி
(வேலங்குடி, திருவாரூர்)
முகவரி "பர்வதா நிலையம்"
2/105, பாரதியார் தெரு,
சீனிவாசபுரம், மயிலாடுதுறை
, Cell : 94430 71432, (W) 63748 34373
விருப்பம் குடும்பத்திற்கு ஏற்ற வரன்

"கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

ஆண்டு சந்தா	ரூ. 300/-
ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்)	ரூ. 2000/-
கலர் (1/4) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ. 1500/-
கலர் (1/2) அரைப் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ. 3000/-
கலர் முழு பக்கம்	ரூ. 6000/-
பின் அட்டை வெளியுறம்	ரூ. 7000/-
மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு)	ரூ. 500/-
கருப்பு வெள்ளை (1/4) கால் பக்கம்	ரூ. 750/-
கருப்பு வெள்ளை (1/2) அரைப் பக்கம்	ரூ. 1500/-
கருப்பு வெள்ளை முழுப் பக்கம்	ரூ. 3000/-

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM

SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

இதழின் உள்ளே....

ஒப்புரவு / கார்காத்தார் ஒப்புரவு வளர்ச்சி..... 15

துணிவே துணை !..... 20

வினைப்பயன்.....23

நட்சத்திரங்களும் மரங்களும்.....26

மணமகன் / மணமகள் தேவை..... 29–34

சங்க நிகழ்வுகள்.....36

இந்திய தண்டனைச் சட்டம்.....53

இணையத்தின் விளைவுகள்..... 55

CREW அறக்கட்டளை கல்வி உதவித்தொகை... 59

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 2000/-
ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

சதம் கண்ட சென்னை கார்காத்தார் சங்கம் எதைச் சொல்லிப் பாராட்டுவது ?

அமரர் இரத்தினம் பிள்ளை தீர்க்க தரிசனத்தோடு 1922ல் துவங்கிய சென்னை கார்காத்தார் சங்கம்2022ல்நூறாண்டுகளை நிறைவு செய்து கடந்த 08–01–23 அன்று சென்னை பூந்தமல்லி S.V.V. திருமணமண்டபத்தில் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது சென்னை சங்க உறுப்பினர்கள் மட்டும் அல்லாமல் சென்னையில் உள்ள இதர சங்கங்கள் மற்றும் சிதம்பரம் மாயூரம் கும்பகோணம், தங்சை, மதுரை போன்ற வெளி ஊரைச் சேர்ந்த கார்காத்தார் சங்க உறுப்பினர்களும் சென்னை சங்கம் என்று எண்ணாமல் நமது சங்க நூற்றாண்டு விழா என்ற உணர்வோடு உறவினர் வீட்டுத் திருமணத்துக்கு வருவது போல் குடும்பத்துடன் வந்து சிறப்பித்தனர் அமர்க்களமாக நடந்த அந்த நூற்றாண்டு விழாவை எதைச் சொல்லி பாராட்டுவது ?

" குறித்த நேரத்தில் தேசியக் கொடியை ஏற்றும் இராணுவ மிடுக்குடன நமது சங்கக் கொடியை பட்டொளி வீசிப் பறக்க செய்தாரே கேப்டன் ஜெகதீசன் அந்த இராணுவ மிடுக்கைப் பாராட்டுவதா ?

" திருமணத்துக்கு வரும் மணமகன் வீட்டாரை அழைப்பது போல் விழாவுக்கு வந்திருந்த சிறப்பு விருந்தினரை மங்கள் வாத்திய இசை முழங்க ஊர்வலமாக மேடைக்கு அழைத்துச் சென்ற பாங்கினைப் பாராட்டுவதா ?

" முதலில் தலைமையுரை நிகழ்த்திய தலைவரிலிருந்து அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் காலத்தின் அருமை கருதி தங்கள் உரைய சுருக்கமாக முடித்துக் கொண்டதை ப்பாராட்டுவதா ?

" நூற்றாண்டு விழா நினைவாக போடப்பட்ட இலட்சக் கணக்கான கார்காத்தார் இல்லங்களில் போற்றிப் பாது காக்க வேண்டிய மலரை ஆண்டு தோறும் கோடிக் கணக்கான ரூபாய்களை கல்விக்காக வாரி வழங்கும் கொடை வள்ளல் கையால் வெளியிட வைத்த உயரிய பண்பினைப் பாராட்டுவதா ?

" அந்த நிகழ்வுகளையும் வந்திருந்த சிறப்பு விருந்தினர்கள் மற்றும் சென்னை சங்க நிர்வாக / செயற்குழு உறுப்பினர்கள் புகைப்படங்களையும் மாறி மேடைக்குப் பின்னால் LED முறையில் ஒளி பரப்பிக் கொண்டே இருந்த தொழில் நுட்பத்தைப் பாராட்டுவதா ?

" இவ்வளவு சிறப்புகளையும் நேரில் காண வராதவர்களும் கண்டு களிக்கும் வண்ணம் காணொலிக் காட்சி ஏற்பாடு செய்திருந்த நேர்த்தியைப் பாராட்டுவதா.

" பஸ்களிலும் இரயிலிலும் வெளியூரிலிருந்து வந்த உறவுகள் வந்து இளைப்பாறி குளித்து உடை மாற்றி வர வசதிகள் செய்திருந்த பண்பை பாராட்டுவதா

" காலை வந்த உடன் சுவையான காலை உணவு இடை இடையே குளிர் பானம் மதியம் அறு சுவை உணவு மாலை சூடான போண்டா காபி இரவு மறக்க இயலாத இரவு உணவு என்று எப்போதும் வந்தவர்கள் வயிறு நிறைந்திருக்குமாறு செய்த கார்காத்தாருக்கே உரிய விருந்தோம்பல் பண்பை பாராட்டுவதா.

" வந்திருந்த சிறப்பு விருந்தினர்கள் மட்டுமல்லாமல் இது வரை சங்கம் வளர்த்த சான்றோர் மற்றும் அவர்தம் வாரிசுகளை மேடைக்கு அழைத்து கௌரவித்து நினைவுப் பரிசு வழங்கிய நன்றி உணர்வைப் பாராட்டுவதா

" விழாவுக்கு வந்திருந்த சென்னை அல்லாத இதர உள்ளூர் வெளியூர் சங்க நிர்வாகிகளை மேடைக்கு அழைத்து கௌரவித்து நினைவுப் பரிசு வழங்கிய சகோதரப் பாசத்தைப் பாராட்டுவதா

" நூற்றாண்டு விழா மலர் கூடுதல் பிரதிகள் தேவைப் பட்டவர்களுக்கு பெயரளவில் ஒரு சிறிய தொகையை பெற்றுக் கொண்டு கூடுதல் மலர்கள் வழங்கிய தாராள மனதைப் பாராட்டுவதா

" நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு நம்மை கௌரவப்படுத்தியதோடு அருமையான வாழ்த்துரை வழங்கிய கார்குலச் சான்றோர்களைப் பற்றிச் சொல்லிப் பாராட்டுவதா

" நகைச்சுவையுடன் கூடிய பட்டிமன்றம், மகளிர் மன்றம் நிகழ்த்திய அருமையான நிகழ்ச்சி, தொழில் முனைவோர் கருத்தரங்கம் மற்றும் பரத நாட்டியம் போன்ற நிகழ்ச்சிகள் பற்றிச் சொல்லி பாராட்டுவதா

" இரவு மணி 8.00க்குமேல் ஆன போதிலும் கலையாமல் அரங்கத்திலேயே அமர்ந்து அத்துணை நிகழ்ச்சிகளையும் ரசித்துப் பாராட்டிய கார்குலச் சொந்தங்களை பற்றிசொல்லி பாராட்டுவதா

" எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் மேலாக தன் தந்தையார் வடிவேல் பிள்ளை காலத்திலிருந்தே தனது மாணவப் பருவத்திலிருந்தே சென்னை கார்காத்தார் சங்கப் பணிகளில் முழு மூச்சுடன் ஈடுபட்டதுடன் கார்காத்தார் ஒப்புரவை இந்த அளவிற்கு வளர்த்து விட்ட நமது கௌரவ ஆசிரியரும் ஆலோசகருமான சென்னை கார்காத்தார் சங்கப் பிதாமகன் திரு. வ. ரத்தினசபாபதிப் பிள்ளை அவர்கள் தனது உடல் நிலை இடம் கொடுக்காத நிலையிலும் நாம் வளர்த்த சங்கத்தின் நூற்றாண்டு விழாவைக் காண வேண்டும் என்ற தணியாத ஆர்வத்துடன் சக்கர நாற்காலியில் வந்து அமர்ந்து கண்டுகளித்த அவர்களின் ஆர்வத்தைப் பாராட்ட வயதில்லை வணங்கிப் போற்றுவோம்.

இறுதியாக சென்னை சங்க நிர்வாகிகள் / செயற்குழு உறுப்பினர்களே நூற்றாண்டு விழாவை மனதில் நிற்கும் வண்ணம் நடத்தி சாதித்துவிட்டீர்கள் உங்கள் சங்க முன்னோடி அமரர் இரத்தினம் பிள்ளை போன்றோர் வானின்று வாழ்த்துவார்கள்.

சென்னை கார்காத்தார் சங்கம்
மென்மேலும் வளர வாழ்த்துகள்.

அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவு சந்தா மற்றும் விளம்பர தொகையை **ONLINE** மூலம் செலுத்தும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. நமது சொந்தங்கள் அதை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. online fund transfer / QR CODE / UPI https:/karkathar.com/payment.html மூலமாக செலுத்தலாம். இதன் விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

online fund Transfer

Account Number :
130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name :
M/S Karkathar Oppuravu
Bank Name and Branch :
Indian Overseas Bank/
Choolai Medu - Chennai.

QR CODE/UPI

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் மறவா நூற்றாண்டு விழா நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

நமது சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா 08.01.2023 அன்று சென்னை பூந்தமல்லியில் உள்ள S.V.V. திருமண மண்டபத்தில் மிக பிரமாண்டமாக நடைபெற்றது.

காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் துவங்கிய நிகழ்வு, இரவு 8.30 மணிக்கு நிறைவடையும் வரையில் அரங்கம் நிறைந்திருந்தது நம் இனத்தின் பண்பையும் நம் மக்களின் பற்றையும் பறைசாற்றியது.

நூற்றாண்டு விழாவின் வெற்றி என்பது சென்னை கார்காத்தார் சங்கத்தின் பாரம்பரியத்திற்கு கிடைத்த மாபெரும் அங்கீகாரம் ஆகும்.

சென்னை சங்கத்தின் அழைப்பை ஏற்று விழாவினை சிறப்பித்த சமூகத்தின் அடையாளமாகத் திகழும் அனைத்து முன்னோடிகளுக்கும் எமது நன்றிகள். நமது மதிப்பிற்குரிய கேப்டன் R.S. ஜெகதீசன், Chennai Radha Engineering Works நிறுவனர் & சேர்மன், கார்குல வள்ளல் திரு. S. வெங்கடேசன் பிள்ளை, நீதியரசர் திரு. T.N. வள்ளிநாயகம், கார்காத்தார் ஒப்புரவின் மேனாள் ஆசிரியர் திரு. V. இரத்தின சபாபதி, சங்க ஆலோசகர் விளாகம் திரு. சபா. சுந்தரேசன், கார்காத்தார் சங்க மாநில கூட்டமைப்பின் தலைவர் முனைவர் KKR சுரேஷ், பொதுச் செயலாளர் திரு. M. பாலசுப்ரமணியன், பொருளாளர் திரு. G. இராமநாதன் பிள்ளை, திரு. M. சத்தியபால், திரு. T.M. வைத்தியநாதன், திரு. USSR நடராஜன், மனித நேயம் திரு. T.N. முத்துகுமாரசாமி, திரு. C. சிவஞானம் ஆகியோரின் வருகை நமது நூற்றாண்டு விழாவின் சிறப்பாக அமைந்தது.

சென்னை கார்காத்தார் சங்கத்தின் முன்னோடிகள், முன்னாள் தலைவர்கள், முன்னாள் பொறுப்பாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர், என நமது சங்கத்தின் குடும்ப விழாவாக மாற்றிய அனைவருக்கும் நமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

நூற்றாண்டு விழாவின் திட்டமிடல் துவங்கி விழா நிறைவு பெறும் வரையிலும் அயராது உழைத்த நமது சங்கத்தின் தூணாக விளங்கும் சங்கத்தின் செயலாளர் திரு. கைலை. சண்முகம், பொருளாளர் திரு. S. ஞானசேகரன், திரு. G. தியாகராஜன் ஆகியோரின் அரும்பணி மிகவும் பாராட்டுக்குரியது.

நூற்றாண்டு கண்ட நமது சங்கத்தின் வரலாற்றை ஆவணப்படுத்தும் வகையில் நூற்றாண்டு விழா மலர் வெளிவர உழைத்த மலர்குழு தலைவர் திருமதி. வனஜா இளங்கோவன், திருமதி. R. குந்தவி, விளம்பர குழு தலைவர் திரு. G. தியாகராஜன் மற்றும் மலர்குழு, விளம்பர குழுவின் அங்கத்தினர் அனைவருக்கும் நமது வாழ்த்துகளும், பாராட்டுகளும். நூற்றாண்டு மலரில் வாழ்த்துச் செய்திகள் கட்டுரைகள் மற்றும் விளம்பரங்கள் வழங்கிய அனைவருக்கும் நமது நன்றிகள்.

நமது சங்க நூற்றாண்டு விழாவிற்காக S.V.V. திருமண மண்டபத்தை மிகக் குறைவான வாடகைக்கு தந்தது மட்டுமின்றி விழாவிற்காக பல்வேறு வகையில் உதவிய திரு. V. விருத்தாசலம் அவர்களுக்கும் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட கார்குல வள்ளல் திரு. S. வெங்கடேசம் பிள்ளை அவர்கள் "கார்காத்தார் ஒப்புரவு" இதழை கணினி மயமாக்குதலுக்கு (Software Development) ரூ. 2 லட்சமும், கிராமத்தில் வசிக்கின்ற நமது கார்குல சொந்தங்கள் 500 குடும்பத்திற்கு ஒரு ஆண்டு சந்தாவாக ரூ. 1.5 லட்சம் மொத்தம் 3.5 லட்சம் நன்கொடை அறிவித்ததற்கும் நூற்றாண்டு விழாவிற்கு நன்கொடைகள் வழங்கிய நல்உள்ளங்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

நூற்றாண்டு விழா ஏற்பாபாட்டில் தோளோடு தோள்நின்று பணியாற்றிய சங்கத்தின் ஆலோசகர்கள் திரு. R. இளங்கோவன், திரு. S. சுவாமிநாதன், சங்கத் துணைத்தலைவர்கள் திரு. S. சோமசுந்தரம், திரு. கனக.சுப்ரமணியன், இணைச்செயலாளர் திரு S. மதிவாணன், செயற்குழு உறுப்பினர்கள் திரு. A. ராமலிங்கம், திரு. G. சபரிநாதன், திருமதி S. சிவனருள், திரு. T. செல்வகுமார், திரு. R. கார்த்திகேயன், திரு. S. ஞானகுமார், திரு. N. சிதம்பரம், திரு. R. உதயகுமார், திரு. P. இரத்தினசபாபதி கார்காத்தார் ஒப்புரவின் ஆசிரியர் திரு. S. அன்பழகன் மற்றும் பிறசங்கங்களில் இருந்து வந்த தன்னார்வலர்கள் அனைவருக்கும் நமது அன்பும் வாழ்த்துகளும்.

தொழில் முனைவோர் அரங்கம், மருத்துவ ஆலோசனை அரங்கம் ஆகியவற்றில் அருமையான கருத்துக்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மிகச்சிறப்பான பட்டிமன்றத்தை நடுவராக இருந்து நடத்திய திரு. S. சிவகுருநாதன் மற்றும் பட்டிமன்ற குழுவினர் அனைவருக்கும் பாராட்டுக்கள். அறிவுசார் நிகழ்வுகள் மட்டுமின்றி மகளிர், குழந்தைகள் பங்கேற்று பல்சுவை நிகழ்ச்சி வழங்கிய அனைவருக்கும் நமது வாழ்த்துகள்.

நூற்றாண்டு விழா என்பது நமது சங்கத்தின் அடுத்த நூற்றாண்டின் தொடக்கமாக பறைசாற்றிய நமது கார்குலத்தின் மாநில சங்கத்திற்கும், தமிழகம் முழுதும் இருந்து வந்த பிற சங்க நிர்வாகிகள் மற்றும் மகளிர் குழுவினர் அனைவருக்கும் நன்றிகள் பல.

சிதம்பரம் முருகன் பிள்ளை அவர்களின் சீரியதலைமையில் அறுசுவை உணவும் விருந்தினர் உபசரிப்பை சிறப்பாக செய்து நம் அனைவரின் உள்ளதையும் கவர்ந்த குழுவினருக்கு பாராட்டுகள் நன்றிகள்.

நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு அன்பு பரிசு வழங்கிய சங்கத்தின் ஆலோசகர் வள்ளல் விளாகம் திரு. சபா சுந்தரேசன் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றிகள்.

நூற்றாண்டு விழா திட்டமிடல் துவங்கி நிறைவு வரை பல்வேறு ஆலோசனைகளும் சீரிய பங்களிப்பையும் வழங்கிய நமது மாநிலத் தலைவர் Dr. KKR சுரேஷ், திரு. மாருதி S. செல்வகுமார் மற்றும் திரு. ஜீவா M.K., ஆகியோருக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளும் நன்றிகளும்.

நீண்ட பயணத்தின் மைல்கல்
தொடரும் பயணத்தின் உரைகல்
நமது சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழா.

அனைவருக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!

MJF Lion சபா. சிவக்குமார்,
தலைவர்
சென்னை கார்காத்தார் சங்கம்

Press declaration under the press act, 1957
Statement of the Ownership of
"KARKATHAR OPPURAVU" under Rule 8 (Form IV)
Newspaper 9 Control) Rules.1956

1. Palce of Publication: The Karkarthar Association (Madras), 64,10th Street, Sowrashtra Nagar, Choalaimedu, Chennai-600094.
2. Periodicity of Publication: Monthly
3. Publisher's Name (Whether Citizen of India? If foreigner, the Country of origine & address) K. SHANMUGAM, No. 2-C, Amirtham Flats, New No. 4, Old No. 13, 1st Cross Street, Seethammal Extension, Teynampet, Chennai - 600 018.
4. Editor's Name (Whether Indian Citizen? If foreigner, the Country of origine & address) S. ANBALAGAN. No. 58, 7th Street, Sakthi Nagar, Thoraipakkam, Chennai - 600 097.
5. Printer's Name (Whether Indian Citizen? If foreigner, the Country of origine & address) M. NATARAJAN at MAYUR PRINTERS, No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026.
6. Names and address of individuals, who own the newspaper and Partners and shareholders holding more than one percent share. Sole Owners, The Karkarthar Association (Madras), 64,10th St., Sowrashtra Nagar, Choolaimedu, Chennai-600094.

SWAN POWERBRAIN ACADEMY

Sree Ganapathi Illam, 3/50, United Colony First Main Road,
Medavakkam, Chennai - 600 100.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஒரு சிறந்த பயிற்சி நிறுவனம்

இந்த போட்டி உலகில் நம் குழந்தைகள் நிந்தி ஜெயிக்க வேண்டும் என்றால் பள்ளி கல்வி மட்டும் போதாது. மூளைத்திறன் மேம்பட மேலும் சிறப்பு பயிற்சிகளும் அவசியம் அதற்கான பயிற்சி கூடம் இது.

FOR CHILDREN	FOR WOMEN
VEDIC MATHS	MONTESSORI
ABACUS	TEACHER
HAND WRITING	TRAINING
MEMORY	சுய
TECHNIQUES	தொழில்கள்
DRAWING	ஆரி
KALFUN	PAINTING
PHONICS	PERSONALITY
ART AND CRAFT	DEVELOPMENT

Teacher training available for all the courses.
Trained women may start their own Acadamy
Online / offline trainings available with your comfortable times.

ஆன்மிகம், திருக்குறள், நன்னெறி கதைகள், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், அபிராமி அந்தாதி பாடல்கள் விளக்கம் வகுப்புகள்

* நம் இனத்தவருக்கு கட்டண சலுகை உண்டு.

For further Enquiry, Please Contact : **Dr. V. Krishnakumari,** Director, **98406 23960**

சென்னை கார்காத்தார் சங்கம் நூற்றாண்டு விழா - வரவேற்புரை

கார்குல சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்.

இன்று சரித்திரத்துவம் வாய்ந்த ஒரு பொன்னாள், ஆம் நமது சென்னை கார்காத்தார் சங்கம் நூற்றாண்டு விழா காணும் நன்னாள்.

இந்த நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பெருமை சேர்க்க வந்துள்ள நமது கார்குல சொந்தங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்று உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினையும் வாழ்த்துக்களையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1922–ஆம் ஆண்டு சைதாப்பேட்டையில் திரு. ரத்தினம் பிள்ளை (அதியமானபுருசன்) அவர்களால் விதைக்கப்பட்ட சிறு துளியான சென்னை கார்காத்தார் சங்கம் ஆல்போல் தழைத்து நூற்றாண்டு விழாவை கொண்டாடுகிறது. ஐந்து தலை முறைகளைக் கடந்து இன்றளவும் சிறப்பாக செயலாற்றி வருகிறது என்பதை நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இதற்கு பாடுபட்ட நமது கார்குல முன்னோடிகள் அனைவரையும் இந்த நூற்றாண்டு விழாவில் வணங்குகிறோம். மேலும் இந்த நூற்றாண்டு விழாவை மிக சிறப்பாக நடத்த வேண்டும் என்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே செயல் திட்டங்களை உருவாக்கி எங்களை வழிநடத்திய சென்னை கார்காத்தார் சங்கத்தின் ஆற்றல் மிகு மேனாள் தலைவர் தெய்வத்திரு. டி.எஸ். கணபதி அவர்களை வணங்கி மகிழ்கிறோம்.

இந்த இனிய நூற்றாண்டு விழாவில் சங்க கொடி ஏற்றி சிறப்பு சேர்த்த மாநில சங்க மேனாள் தலைவர் திரு. கேப்டன் R.S. ஜெகதீசன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்து அன்னாரை வருக வருக என வரவேற்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். நூற்றாண்டு விழாவில் தலைமை உரையாற்ற உள்ள தலைவர் விளாகம் எஸ். சிவக்குமார் அவர்களையும், சங்க வரலாறு பற்றி உரையாற்ற உள்ள திருமதி. வனஜா இளங்கோவன் அவர்களையும், கார்காத்தார் ஒப்புரவின் வளர்ச்சி பற்றி பேச உள்ள ஆசிரியர் எஸ். அன்பழகன் அவர்களையும், வருக வருக என வரவேற்கிறோம்.

சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழாவை சிறப்புடன் நடத்திட பாடுபட்ட நமது கார்காத்தார் சங்க செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கௌரவ ஆலோசகர்கள் அனைவரையும் வருக வருக என அன்புடன் வரவேற்கிறோம்.

நூற்றாண்டு விழாவினை தலைமையேற்று விழா மலரை வெளியிட்டு சிறப்பு சேர்க்க வருகை புரிந்துள்ள கார்குலவள்ளல் பல ஆயிரம் குடும்பங்களின் கல்வி கண் திறந்து வைத்த கார்குல காமராசர் பாசமிகு அண்ணன் திரு. எஸ். வெங்கடேசன் பிள்ளை அவர்களை வருக வருக என வரவேற்கிறோம்.

நூற்றாண்டு விழாவிற்கு முன்னிலை வகிக்கின்ற மேனாள் நீதி அரசர் கார்குல செம்மல் டி.என். வள்ளிநாயகம் அவர்களையும், கார்காத்தார் ஒப்புரவு மேனாள் ஆசிரியர் திரு. வி. ரத்னசபாபதி அவர்களையும், சென்னை கார்காத்தார் சங்கத்தின் மேனாள் செயலாளர், எங்கள் பாசத்திற்குரிய தொழிலதிபர் அண்ணன் திரு. விளாகம் எஸ். சுந்தரேசன் அவர்களையும் தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் கே.கே.ஆர். சுரேஷ் அவர்களையும் வருக வருக என வரவேற்கிறோம்.

நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்துரை வழங்க வருகை தரவுள்ள மேனாள் நீதி அரசர் விமலா வேல்முருகன் அவர்களையும், மாநில கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் திருச்சி திரு. எம். பாலசுப்பிரமணியன் அவர்களையும், கூட்டமைப்பு பொருளாளர் ஜெயங்கொண்டம் திரு. ஜி. ராமநாதன் பிள்ளை அவர்களையும், மாநில கார்காத்தார் சங்கத்தின் மேனாள் பொதுச்செயலாளர் மயிலாடுதுறை திரு. M. சத்தியபால் அவர்களையும், மூத்த வழக்கறிஞர் கும்பகோணம் திரு. டி.எம். வைத்தியநாதன் அவர்களையும், திரு. USSR நடராஜன் அவர்களையும், மனித நேயம் திரு. டி.என். முத்துக்குமாரசாமி அவர்களையும், பாசமிகு அண்ணன் சாப்பிட வாங்க திரு. C. சிவஞானம் அவர்களையும் வருக வருக என வரவேற்கிறோம்.

பாராட்டு பெற வருகை தந்துள்ள சென்னை கார்காத்தார் சங்கத்தின் வளர்ச்சியில் பங்கு கொண்டு சிறப்புமிகு பணியாற்றிய கார்குல முன்னோடிகள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.

இந்த நூற்றாண்டு விழாவில் மதியம் நடைபெற உள்ள பட்டிமன்றத்தின் நடுவர் நகைச்சுவைத் தென்றல் திருச்சி திரு. எஸ் சிவகுருநாதன் அவர்களையும் அவர் தம் அணியினரையும், மகளிர் அரங்க நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் திருமதி. ஞானவதி அசோகன், திருமதி. நளினி ராஜகோவிந்தன், திருமதி. கல்யாணி இளங்கோ அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.

இளைஞர்கள் நலன் மற்றும் தொழில் முனைவோர் கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பு சேர்க்க வருகை புரிந்துள்ள கார்குல தொழிலதிபர்கள் திரு. A. சண்முக வேலாயுதன், திரு.

M. கமலக்கண்ணன், திரு. S. செல்வகுமார், திரு. M. சுவேதகுமார், திரு. S. சபாநாயகம், திரு. எம்.என். பாலமுருகன், அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.

மருத்துவ ஆலோசனை வழங்க வருகை புரிந்துள்ள டாக்டர். எஸ். முத்துக்குமார், டாக்டர் ஆர். ராஜசேகர், டாக்டர் வி. நடராஜன், மற்றும் யோக கலை திரு. R. இளங்கோவன் உள்ளிட்ட அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.

கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் கார்குல செல்வங்களையும் வருக வருக என வரவேற்கிறோம்.

இந்த நூற்றாண்டு விழாவிற்கு வருகை புரிந்துள்ள மாநில சங்கம், மற்றும் இணைப்பு சங்கங்களின் நிர்வாகிகள், மாநில துணைத்தலைவர்கள், மண்டல செயலாளர்கள், மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், தொழில் முனைவோர் அணியினர், நூற்றாண்டு விழா ஏற்பாடுகளில் உதவிய கார்குல முன்னோடிகள், விழா சிறப்பாக நடைபெற இந்த மண்டபத்தை மனமுவந்து வழங்கிட்ட மேனாங்குடி திரு. எஸ். விருத்தாச்சலம் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரையும் மனமார வருக வருக என வரவேற்கிறேன்.

நூற்றாண்டு விழா மலர் குழுவினருக்கும், உணவு உபசரிப்பு செய்து வருகின்ற சிதம்பரம் திரு. முருகன் பிள்ளை மற்றும் அவரது குழுவினருக்கும் மற்றும் விருந்தினர் உபசரிப்பு போக்குவரத்து உதவி மற்றும் தங்குமிட வசதி செய்து வரும் போரூர் கார்காத்தார் சங்கத்தின் அன்பு சொந்தங்கள், மற்றும் தன்னார்வலர்கள் அனைவரையும் நூற்றாண்டு விழா காணும் கார்காத்தார் சங்கத்தின் சார்பாக வருக வருக என வரவேற்கிறோம். இந்த சரித்திரத்துவம் வாய்ந்த சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள வருகை புரிந்து இருக்கும் ஆன்றோர் சான்றோர் பெருமக்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் சென்னை கார்காத்தார் சங்கம் பெருமை கொள்கிறது.

சென்னை கார்காத்தார் சங்கத்தின் சிறப்புமிகு நூற்றாண்டு விழா நிகழ்வில் வரவேற்புரை ஆற்ற நல்லதொரு வாய்ப்பை நல்கிய தலைவர் உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க கார்குலம்

வளர்க சென்னை கார்காத்தார் சங்கம்.

கைலை. சண்முகம்,

செயலாளர்.

WANTED

For a reputed

Industry in Chidambaram

Accountant (With or W/o Experience)

Lab Technician (M.Sc. (Biotechnology)

Forward Resume to :

srikrishnabeverages7@gmail.com

or Call **88702 81004**

ஒப்புரவு/
கார்காத்தார் ஒப்புரவு வளர்ச்சி

நூற்றாண்டு விழாவில் கார்காத்தார் ஒப்புரவு ஆசிரியர் மேலையூர் ச. அன்பழகன் நிகழ்த்திய உரையின் சுருக்கம் .

1979 ல் நான் சென்னைக்கு மாற்றலாகி வந்தவுடன் என்னை சென்னை கார்காத்தர் சங்கத்தில் ஆயுட் கால உறுப்பினராக சேர்த்து விட்ட என் பள்ளிக் கால நண்பர் சோமாஸ்கந்தனையும் 1982 ல் என்னை ஒப்புரவின் சந்தா தாரராகச் சேர்த்து விட்ட வேதபுரிப் பிள்ளையையும் நினைவு கூர்ந்து வணங்கி என் உரையைத் துவக்குகிறேன்.

தாசில் பண்ணையார் செய்த பல்வேறு பணிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவை 1. 1978ல் மாநில கார்காத்தார் சங்கத்தை உருவாக்கியது. 2. கார்காத்தார் சமுதாயத்துக் கென ஒரு இதழாக ஒப்புரவை 1980 ல் தொடங்கியது.

துவக்கம்

1980 ஜனவரியில் திருக்கடையூரில் சிதம்பரம் திரு வாகீசம் பிள்ளையால் பெண்ணாடம் திரு. பழமலைப் பிள்ளை முன்னிலையில் வெளியிடப் பட்ட ஒப்புரவின் முதல் இதழை செம்பனார்கோவில் திரு. கல்யாணம் பிள்ளை பெற்றுக் கொண்ட போது ஒப்புரவு இதழ் அந்தக் கால வாய்ப்பாடு சைஸில் சுமார் 24 பக்கங்களுடன் இருந்தது பழைய ஒப்புரவு இதழை அவையில் காட்டுகிறார்.

முக்கியத்துவம்

ஒப்புரவின் வளர்ச்சியைப் பற்றிப் பேசு முன் அதன் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இதோ இன்று நடக்கும நூற்றாண்டு விழாவை இந்த அரங்கத்தில் உள்ள சுமார் 1200 பேர் தான் கண்டு களிக்கிறீர்கள் இதைப்பற்றி புகைப்படங்களுடன் பிப்ரவரி மாத கார்காத்தார் ஒப்புரவில் வெளியிட்டால் அந்த இதழ் பிப்ரவரி மாதம் 16 – 17 தேதி வாக்கில் சுமார் 5000 பேர் கைக்கு கிடைத்து குறைந்த பட்சம் 10000 முதல் 15000 பேர் வரை பார்ப்பார்கள். சங்க நிகழ்ச்சி மட்டுமல்ல இதே போல் கார்காத்தார் இல்லங்களில் நடைபெறும் நல்ல மற்றும் துக்க நிகழ்வுகள் கார்காத்தார் ஒப்புரவு மூலம் மாதந்தோறும் பல்லாயிரக் கணக்கான உறவுகளால் பார்க்கப்படும் இவ்வாறு நம்முடைய கார்காத்தார் ஒப்புரவு இதழ் கார்காத்தார் சமுதாய் மக்களிடையே ஒரு பாலமாக விளங்குககிறது.

மாத இதழானது

1980 ல் துவங்கப்பட்ட ஒப்புரவு இதழ் 1981ல் இருந்து மாத இதழாக வெளி வரத் தொடங்கியது. தாசில் பண்ணை திரு. ராஜசேகரம்பிள்ளை அதனைத் தன் சொந்தப் பொறுப்பில் பூம்புகார் மேலையூரிலிருந்து வெளியிட்டு வந்த போது, இன்று இந்த விழாவுக்கு வந்துள்ள செம்பனார்கோயில் திரு. கணபதி நடனம் எனது சகோதரர் மேலையூர் சண்முகம் பிள்ளை ஆசிரியர் திரு. குருநாதன் போன்ற சில கார்குல உறவுகள் அவருக்கு உதவி வந்தார்கள். கிட்டதட்ட 10 ஆண்டுகள் வரை அவ்வாறு தன் சொந்தப் செலவில் வெளியிட்டு வந்தார்கள்.

நாற்றங்காலில் இருந்து மாற்றம்

ஆன்மீகப் பணிகள், மாநில சங்கப் பணிகள் போன்ற பல்வேறு பணிகளை மேற் கொண்டிருந்த திரு. ராஜ சேகரன் பிள்ளையால் மேலையூரிலிருந்து ஒப்புரவு இதழை வெளியிடுவது சற்று சிரமமாக இருந்ததால் 1989 – 90 ல் ஒப்புரவு வெளியிடும் பொறுப்பை நாற்றங்காலில் இருந்து நாற்றை எடுத்து வயலில் நடுவது போல் சென்னை சங்கத்திடம் ஒப்படைத்தார்கள் . திரு வேத புரிப் பிள்ளை ஒப்புரவின ஆசிரியராகவும் ப்ரூட்நிக் திரு சிதம்பரம் அவர்கள் பதிப்பாளராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு நமது கௌரவ ஆசிரியர் திரு. வி. ரத்தினசபாபதிப் பிள்ளை, மாயூரம் முத்தையாப் பிள்ள போன்றவர்கள் உதவி வந்தார்கள்.

இதழ் வெளியிட உதவி

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நிதி நிலைமை அநத கால கட்டங்களில் இப்போதுள்ள மாதிரி திருப்திகரமாக இல்லாததால் ஒரு சில மாதங்களில் இதழை வெளியிடுவதற்கே சிரமமாக இருந்த போது பதிப்பாளர் திரு சிதம்பரம் மில் மோர் அதிபர் திரு டி.எஸ் கணபதி போன்றவர்கள் தங்கள் சொந்தப் பணத்தை செலவிட்டு இதழை வெளியிட்டிருக்கிறார்கள் .

வேதபுரிப் பிள்ளையின் காலம்

1989 – 90 லிருந்து 2002 வரை தனது இறுதிக் காலம் வரை திரு வேதபுரிப் பிள்ளை ஆசிரியராகப் பணியாற்றிய போது ஒப்புரவு இதழின் பக்கங்களை அதிகப்படுத்தாமல் அளவினை மட்டும் இரு மடங்காக்கி அதாவது தற்போதுள்ள சைஸில் வெளியிட்டார். பொதுவாக பத்திரிகைகள் தங்கள் கருத்தை தலையங்கத்தில் வெளியிடுவார்கள் திரு வேதபுரி அவர்கள் தலையங்கம் என்று எழுதாமல் ஏடு இட்டோர் இயல் என மாற்றி எழுத ஆரம்பித்தார்

அதையே சேர்த்துப் படித்தால் எடிட்டோரியல் என வரும்.

2002 ல் திரு. வி. ரத்தினசபாபதிப் பிள்ளை ஆசிரியரானார்

2002 ஆம் ஆண்டில் திரு வேதபுரிப் பிள்ளை காலமான பிறகு ஆசிரியர் மாற்றம் பற்றி பதிவு செய்ய சென்னை எழும்பூர் மாஜிஸ்ட் ரேட் நீதி மன்றத்துக்கு திரு ரத்தினசபாபதிப் பிள்ளையும் திரு முத்தையாப் பிள்ளையும் சென்ற போது நீதி பதி ஆசிரியர் இறந்த பிறகு அவர் பெயரை ஆசிரியராகப் போடக் கூடாது உடனடியாக வேறு ஆசிரியர் நியமிக்கப் பட வேண்டும் என்பதைக் கூறி அங்கிருந்த திரு ரத்தினசபாபதிப் பிள்ளையை ஒப்புரவின் ஆசிரியராக நியமித்தார் அவர் ஆசிரியராகப் பணியாற்றிய போது திரு . யு.எஸ். எஸ்.ஆர் மற்றும் திருமதி வனஜா இளங்கோவன் போன்றவர்கள் உதவினார்கள் ஒப்புரவின் இன்றைய வளர்ச்சிக்கு அவர்தான் முழு காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

கலரில் வெளியிட முயற்சி

ஒப்புரவின் வளர்ச்சிக்கு பல்வேறு நடவடிக்கைகளை ஆசிரியர் வி ஆர். எஸ் எடுத்தார் அவற்றுள் ஒன்றுதான் கலர் பக்கங்கள் வெளியிடுவது ஆசிரியருக்கு பழனியப்பா ப்ரதர்ஸ் அதிபர் நல்ல பழக்கம் என்பதால் 2004 ஆம் ஆண்டில் அதற்கு உதவுமாறு அவரிடம் கேட்டார் அதனைக் கேட்ட பழனியப்பா ப்ரதர்ஸ் அதிபர் கலரில் இதழ் வர வேண்டுமானால் சர்குலேஷன் ஆயிரக் கணக்கில் இருந்தால் தான் கட்டுபடியாகும் என்று கூறி விட்டார் அப்போது சர்குலேஷன் ஆயிரத்துக்கும் கீழே தான் அதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் அது வரை அட்டையை மட்டுமாவது கலரில் வெளியிட ஏற்பாடு செய்யுங்கள் என்றுஆசிரியர் கூறினார்.

பக்கங்களை அதிகப் படுத்துதல்

பக்கங்களை அதிகப்படுத்த திரு. அக்ரி ராமலிங்கம் திரு. சேது சுப்ரமணியன், திரு. கபீர்தாஸ் மற்றும் சிவாகாமியின் செல்வன் போன்றவர்களை அழைத்து அக்ரி, ஆன்மீகம் போன்ற பொருட்களில் எழுதச் சொன்னார் என்னை சட்டக் கட்டுரைகள் எழுதச் சொன்னார். பத்திரிகையின் சந்தாதாரர்களையும் விளம்பரதாரர்களையும் அதிகப்படுத்த பல்வேறு மாவட்டங்களுக்கும் சென்று ஒப்புரவின் அந்தந்த மாவட்ட மலர்களை வெளியிட்டார். அவ்வாறு சென்ற போது தஞ்சாவூரில் திரு. தியாகராஜனைப் பார்த்து சிறுவர் மலருக்கு பொறுப்பேற்கச் சொன்னார் இவ்வித நடவடிக்கைகளால் ஒப்புரவின் பக்கங்கள் அதிகமாயின விளம்பரங்களும் அதிகமாகி சர்குலேஷனும் ஆயிரக்கணக்கில் சுமார் 5000 ஆகின அதற்குள் 2009ல் கலர் விளம்பரங்களும் சாத்தியமாயின 2011ல் மணமகன் / மணமகள் தேவை விளம்பரங்களையும் கலரில் கால் / அரைப் பக்கம் அறிமுகப்படுத்தினார் அத்துடன் திரு. வேதபுரி போலவே ஏடு இட்டோர் இயலை எழுதி வந்த திரு வி ஆர் எஸ் படிக்கும் பலரும பாராட்டும் சங்கப்பலகையையும் மாதந்தோறும் எழுதி வந்தார் அவ்வப்போது "ராமீ" என்ற புனைப் பெயரில் எழுதவும் செய்தார்.

தரம் பற்றி நீதியரசர் கருத்து

நமது நீதியரசர் திரு தி.நெ. வள்ளி நாயகம் பிள்ளை அவர்கள் சங்கத்தின் ஒரு கூட்டத்தில் உரை நிகழ்த்திய போது பத்திரிகை நடத்துவதில் உள்ள சிரமங்களைப் பற்றிக் கூறி விட்டு குமுதம் ஆனந்த விகடன் போன்ற நீண்ட நாட்களாக நடத்தப்படும் பத்திரிகைகள் கூட சர்குலேஷனுக்காக சினிமா விகடத்துணுக்குகள் காசிப் என்னும் கிசு கிசு போன்றவைகளை வெளியிடுகிறார்கள். ஆனால் நம்முடைய ஒப்புரவில் அவை எல்லாம் இல்லாமல் பயனுள்ள கட்டுரைகள் தகவல்கள் இவற்றுடன் கலை மகள் மஞ்சரி போன்ற தரமுள்ள பத்திரிகையாக வருகிறது என்று பாராட்டியுள்ளார். நீங்கள் குறிப்பிடும் தரத்தை இன்று வரை கடைப் பிடித்து வருகிறோம் அய்யா என்று நீதியரசருக்குத் தெரிவித்துக் கொண்டார்.

பெயர் மாற்றம்

நம் நாட்டில் நடத்தப்படும் பத்திரிகைகள் டெல்லியில் உள்ள ரெஜிஸ்ட்ரார் ஆஃப் ந்யூஸ் பேப்பர்ஸ் ஆஃப் இந்தியா அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் அப்படிப்பட்ட பதிவினை புதுப்பிப்பதில் 2009ல் ஒரு சிக்கல் ஏற்பட்டது திரு டி.எஸ் கணபதி டெல்லிக்கு நேரில் சென்று அங்கிருந்த நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் திரு ஞானதேசிகன் மற்றும் டெல்லி சங்கரவடிவேலு இவர்கள் உதவியுடன் பதிப்பை புதுப்பித்தார் இருந்தாலும் அதற்குள் ஒப்புரவு என்ற பெயரை வேறு ஒருவர் பதிவு செய்திருந்தால் அதே பெயரில் ஒப்புரவு இதழைத் தொடர இயலாததால் 2010 ஆம் ஆண்டில் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் தொடர வேண்டியதாயிற்று அதற்குள் பழைய பதிப்பாளர் திரு சிதம்பரம் வீடு மாறி விட்டதால் திரு. டி எஸ் கணபதியே பதிப்பாளராகப் பொறுப்பேற்றார்.

உதயகுமார்

திரு. முத்தையாப் பிள்ளை ஒப்புரவு அலுவலகத்தில் இருந்த போதே திரு. உதயகுமார் ஒப்புரவில் சேர்ந்து விட்ட படியால் திரு. முத்தையாப் பிள்ளை மாயூரம்

சென்ற பிறகு உதயகுமார் உதவியுடன் பத்திரிகை அனுப்பபட்டு வந்தது ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதிக்குள் சுமார் 4500 லிருந்து 5000 இதழ்கள் வரை முகவரி ஒட்டப்பட்ட ப்ளாஸ்டிக் கவரில் போடப்பட்டு தபால் மூலம் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படும். அப்போது நமது சங்க உறுப்பினர்கள் பலரும் நமக்கு உதவிக்கு வருவார்கள் அப்போது உதயகுமாருடன் சேர்ந்து அவரது மனைவி மகன்கள் மருமகள்கள் மற்றும் பேரன் பேத்திகளும் அந்தப் பணியில் ஈடுப்பட்டு உதவுவது குறிப்பிடத்தக்கது. உதயகுமார் ஓய்வு பெற்றதிலிருந்து தற்போதுள்ள திரு முத்தையனும் திருமதி மாலதி உதவியுடன் இதழ் அனுப்பப்படுகிறது.

ஆசிரியர் வி.ஆர்.எஸ் ஓய்வு – மேலையூர் அன்பழகன் ஆசிரியர்

2002 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராகப் பணியாற்றி ஒப்புரவின் இன்றைய வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த திரு வி. இரத்தினசபாபதி அவர்கள் வயது முதிர்ச்சி காரணமாக ஓய்வு பெற விரும்பினார். அதனால் 2017 ஆம் ஆண்டு நடந்த 95 ஆவது பொதுக் குழுவில் அவர் கௌரவ ஆசிரியராகவும் அது வரை சங்கத் தலைவராக இருந்து ஓய்வு பெற்ற மேலையூர் ச.அன்பழகன் கார்காத்தார் ஒப்புரவின் ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார்கள்.

2017ல் ஆசிரியராகப் பொறுப்பேற்ற நான் அன்றிலிருந்து இன்று வரை திரு வேதபுரி போல் ஏடு இட்டோர் இயலையும் திரு வி. இரத்தினசபாபதி பாணியில் சங்கப் பலகையையும் எழுதி வருவதுடன் என் பங்காக சட்டக் கட்டுரைகளையும் மாதந்தோறும் எழுதி வருகிறேன்.

பதிப்பாளர் டி.எஸ்.ஜி மறைவு – கைலை பதிப்பாளரானார்

எல்லாம் நன்றாகச் சென்று கொண்டிருந்த போது திடீரென இடி விழுந்தது போல் நமக்கு ஓர் பேரிழப்பு ஏற்பட்டது ஆம் 2020 செப்டம்பரில் 2010 லிருந்து பதிப்பாளராகப் பணியாற்றிய திரு. டி.எஸ் .கணபதி மறைந்தார். அடுத்து நடந்த செயற்குழுவில் திரு. கைலை சண்முகம் பதிப்பாளராக நியமிக்கப்பட்டார்

மாதந்தோறும் தவறாமல் வெளி வரும் ஒப்புரவு / கார்காத்தார் ஒப்புரவு

ஒப்புரவு இதழ் 1981லிருந்து வெளிவந்தாலும்சென்னை சங்கத்தின் பொறுப்பில் வெளியிடத் தொடங்கிய 1990ம் ஆண்டிலிருந்து இன்று வரை ஒப்புரவு / கார்காத்தார் ஒப்புரவு இதழ் சென்னை மயூர் பிரிண்டர்ஸ் நிறுவனத்தாரால் குறிப்பிட்ட தேதியில் சிறப்பாக அச்சிடப்பட்டு வருவதுடன் இந்த இதழ்களை கவரில் போட்டு ஒவ்வொரு மாதமும் 15 (அல்லது) 16ம் தேதி தபால் அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று அனுப்புவது வரை அவர்கள் இன உணர்வுடன் செய்யும் பங்களிப்பை நன்றியுடன் நினைவு கூறுகிறேன். இந்த 32 ஆண்டுகளில் கொரானா பொது முடக்கத்தால் வெளியிட இயலாத 2020 ஏப்ரல், மே மற்றும் 2021 ஜூன் மாதம் ஆகிய மூன்று மாதங்கள் தவிர ஒவ்வொரு மாதமும் தவறாமல் வெளிவருகிறது. அதற்கு உதவிய அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுகிறேன் மேனாள் ஆசிரியர் வி. இரத்தினசபாபதி அவர்களும் நானும் விரும்பிய படி ஒவ்வொரு கார்காத்தார் குடும்பத்தையும் அடையாளம் காணும் வகையில் அவர்கள் இல்லங்களிலும் கார்காத்தார் ஒப்புரவு கிடைக்க உதவுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு,
சூளைமேடு, சென்னை–600094.
போன் : 91 44 4724882

அன்புடையீர் வணக்கம்.

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா கடந்த 08–01–2023 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு தலைமையேற்று வாழ்த்துரை வழங்கிய கார்குல வள்ளல் உயர்திரு. S. வெங்கடேசன் பிள்ளை கார்காத்தார் ஒப்புரவு மாத இதழை இன்னும் பொலிவுடனும் வலிவுடனும் நடத்துவதற்கு ஏதுவாக ரூ. இரண்டு லட்சமும் இதுவரையிலும் கார்காத்தார் ஒப்புரவு வாங்காத நமது கார்குலத்தை சேர்ந்த குறிப்பாக கிராம பகுதிகளில் வசிக்கும் சுமார் 500 குடும்பங்களுக்கு ஓர் ஆண்டுக்கு சந்தாதொகையினை ரூ. 1½ லட்சம் வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள்.

எனவே மாநில இணைப்பு சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் சுமார் 10 நபர்களை தேர்ந்தெடுத்து கீழ்கண்டவாறு தகவலை அனுப்ப வேண்டுகிறோம்.

பெயர் :
முகவரி :
பின்கோடு :
செல்போன் :

சென்னை கார்காத்தார் சங்கத்தின் மேலே குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

– கைலை. சண்முகம்,
செயலாளர்

சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழாவிற்காக நடைபெற்ற போட்டிகளில் பரிசு பெற்றவர்கள்

	பெயர்	வகுப்பு	போட்டிகள் & பரிசு		
1.	A. விஷ்வா	UKG	பேச்சு – I	கதை சொல்லுதல் – III	பாரதியார் பாடல் I
2.	D. சஞ்சனா	UKG	பக்தி பாடல் – I	சினிமா பாடல் – I	பாரதியார் பாடல் – III
3.	R. பாலமுருகன்	II	ஓவியம் – I	பக்தி பாடல் – II	
4.	S. செங்கதிர்வேல்	II	பாரதியார் பாடல் – II	பேச்சு – III	
5.	P. தாரிகா	II	பக்தி பாடல் – III	படம் வரைதல் – III	
6.	S. சினேகன்	II	சினிமா பாடல் – II	ஓவியம் – II	
7.	K.R. இசைமித்ரா	LKG	கதை சொல்லுதல் – I	மோனோ ஆக்ட் – I	
8.	K. வேதிதா	UKG	பேச்சு – II		
9.	தர்ஷா ஹரிஹரன்	I	கதை சொல்லுதல் – II		
10.	T. ஹாசினி	LKG	கதை சொல்லுதல் – II		
11.	E. ஷம்ஷிதா		ஓவியம் – III		
			II Group		
1.	V. தேஜஸ்வினி	V	பேச்சு – I	பாரதியார் பாடல் – III	சினிமா பாடல் – III
2.	அபிராமி ஸ்ரீ	V	பக்தி பாடல் – I		
3.	S.A. அருண் விஜய்	V	கதை சொல்லுதல் – I	ஓவியம் – II	படம் வரைதல் – II
4.	A. வருண்	IV	பேச்சு – II	கதை சொல்லுதல் – II	
5.	காருண்ய ஸ்ரீ	V	பேச்சு – III	கதை சொல்லுதல் – III	
6.	V. ரோஷ்மிதா	IV	பக்தி பாடல் – II	வெஸ்டர்ன் டான்ஸ் – II	
7.	S. நிமலன்	IV	பக்தி பாடல் – III		
8.	S.K. அகல்யா	IV	பாரதியார் பாடல் – I	நடனம் – II	
9.	வைபவி	V	பாரதியார் பாடல் – II		
10.	தரணி சந்திரன் .E	IV	சினிமா பாடல் – I	நடனம் – II	
11.	G.S. மோனீஷ் கார்த்திக்	V	சினிமா பாடல் – II	நடனம் – II	
12.	S.S. ஹர்ஷித்	V	ஓவியம் – III	நடனம் – III	
13.	H. தனிஷ்கா	V	ஓவியம் – I	படம் வரைதல் – I	
			III Group		
1.	T. தீக்ஷிகா	VII	கவிதை – I பேச்சு – III	கட்டுரை – I ஓவியம் – III	பாரதியார் பாடல் – II
2.	சுருதிகா	VII	பக்தி பாடல் – I	பாரதியார் பாடல் – I	சினிமா பாடல் – II
3.	சஹானா சிவகுமார்	VIII	சினிமா பாடல் – I		
4.	சக்தி ஷிவானி	VI	பக்தி பாடல் – II	ஓவியம் – II	
5.	ரேணு தர்ஷினி	VIII	பேச்சு – I படம் வரைதல் – III	சினிமா பாடல் – I	பக்தி பாடல் – III
6.	தமதி சுரேஷ்	VI	பேச்சு – II	மோனோ ஆக்ட் – I	

7.	H.S. ஹர்ஷினி	VI	கவிதை – II	பாரதியார் பாடல் – III	
8.	R. பிரத்திமன்ராஜ்	VII	ஓவியம் – I	கட்டுரை – I	வெஸ்டர்ன் டான்ஸ் – I
9.	S. சுவாதி		கட்டுரை – III		

IV Group

1.	M. ஷிவானி	IX	கவிதை – I	கட்டுரை – I	பேச்சு – II
			பாரதியார் பாடல் – II	சினிமா பாடல் – III	ஓவியம் – II
2.	M. நிதின்குமார்	IX	பேச்சு – I	கட்டுரை – II	கவிதை – III
			பக்தி பாடல் – III	மோனோ ஆக்ட் – II	
3.	V. சாருமதி	IX	பாரதியார் பாடல் – I	கட்டுரை – II	பேச்சு – III
4.	S. கௌரி	IX	சினிமா பாடல் – I	பக்தி பாடல் – II	படம் வரைதல் – I
			வெஸ்டர்ன் டான்ஸ் – III		
5.	V.R. நவீன்குமார்	IX	ஓவியம் – III	கட்டுரை – III	படம் வரைதல் – II
6.	கீர்த்தனா .S	XI	பக்தி பாடல் – I		
7.	K.M. ரசிகா	X	ஓவியம் – I		
8.	T. தர்ஷன்		கட்டுரை – I		
9.	S. அக்ஷயா	XI	கவிதை – II		
10.	M.A. ஜெயகீர்த்தி	XII	கவிதை – III		
11.	ஸ்ரீநிதா .K	XI	சினிமா பாடல் – II		

தனித்திறமை

1.	S. கயல்	UKG	நடனம் – I
2.	லயா வருண்	UKG	நடனம் – II
3.	B. விஷ்ணு	VI	வெஸ்டர்ன் டான்ஸ் – I
4.	R. அகிலா	VI	பரதநாட்டியம் – I
5.	G.D. நிகிதா		பரதநாட்டியம் – II
6.	C. கோபீஷா		பரதநாட்டியம் – III

வேறு திறமைகள்

1.	அம்ரிதா	VIII	வீணை
2.	கௌசிக்நாத்	III	பொது அறிவு
3.	விஸ்வநாதன் .R	IV	விஞ்ஞான அறிவு
4.	K. விதுன்	I	திருக்குறள், கீதை ஒப்புவித்தல்
5.	S. லயா	UKG	”
6.	P. அகில்நாத்	I	”
7.	K. தன்யா	Pre KG	”
8.	P. தாரிகா	II	கீ போர்டு

வெற்றி பெற்றவர்களுக்கும், இதற்கு துணைபுரிந்த திருமதிகள் கிருஷ்ணவேணி, நிர்மலா, அர்ச்சனா, ஆர்த்தி அவர்களுக்கும் நமது வாழ்த்துகள்.

துணிவே துணை!

ஞான. அம்புலி, சிதம்பரம்.

துணிவு என்பது தன்னையும், தன் சுற்றம், நகரம், நாடு ஆகியவற்றை, துயரத்திலிருந்து அழிவிலிருந்து காப்பாற்றத் தேவையான நற்பண்புகளிலே முக்கியமானதில் ஒன்றாகும். இதை தனித்திறமையின் வெளிப்பாடு எனச்சொல்லலாம். விஞ்ஞான வளர்ச்சியினால் வளங்கள், வாழ்வியல் நெறிகள் பெருகுவதோடு புதிய வகை ஆபத்துகளும் தோன்றிய வண்ணம் உள்ளன. ஆதலின் அனைவருக்கும் தேவையான தற்காப்பு கவசமாக துணிவை பெற்றுத்தான் வாழவேண்டும். ஒரு காலத்தில் சாதனை செய்வோர்க்கு தேவையாயிருந்த துணிவு இன்றைய சூழ்நிலையில் உயிர்வாழ அனைவருக்கும் தேவைப்படும் பண்பாகிவிட்டது.

ஒரு செயலை செய்யும்போது அதன் விளைவுகள் நமக்கு சாதகமாக இருக்க வேண்டும் என நாம் விரும்பினாலும் என்னவாய்யிருக்கும் என்பதை முன்கூட்டியே அறிய முடியாது. முடிவுகள் பாதிப்பைத்தான் தரும் என்று மனம் நினைத்துவிட்டால் ஒருவிதமான பயம் வந்துவிடும். பயத்தின் உச்சக்கட்டத்தில் உடலின் வெளிதோற்றத்திலும், உள்ளேயும் பல மாற்றங்கள் ஏற்படும். முகம் சிவக்கும். கைகால்கள் படபடக்கும். வேர்வைத் துளிகள் தோன்றிடும். நெஞ்சம் படபடக்கும். கண்கள் சிவக்கும். உள்ளே Eternal என்ற Chemical சுரக்கும். இதனால் இரத்த நாளங்களில் அதிக அளவு கெட்ட கொழுப்பு படியும். இந்த நிலை நீடித்தால் பலவித நோய்கள் பின்தொடர்வதோடு முடிவில் மாரடைப்பும் வரலாம். மனதால் உடல் பாதிப்புகள் ஏற்படுத்துவதில் முதலாவதும் முக்கியமானதும் பயம் என்று சொல்வார்கள்.

ஒரு செயல் நமக்கு சாதகமாக இருக்க வலுவான அடிப்படை ஆதாரம், கடும் உழைப்பு, தெளிவான சிந்தனை, Good Planning, இடையூறுகளை ஒதுக்கிப் பார்க்கும் மனோபாவம், Continued Interest ஆகியவைகளோடு துணிவும் தேவை என்பார்கள்.

துணிவின் முக்கியத்துவத்தை உணர்த்த "இச்சகத்துனோரெல்லாம் எதிர்த்து நின்ற போதிலும், அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற பாரதியார் பாடலை விட சிறந்தது வேரொன்றும் இல்லை என்பது நாடறிந்த செய்தி.

"ஒரு செயலில் இறங்கும்போது அச்சம் தவிர், முடிவு என்னவாகுமோ என்று கணக்கு பார்க்காமல் துணிந்து முயன்று முன்னேறினால் வென்றும் விடலாம்" என்றார் விவேகானந்தர்.

மாவீரன் அலெக்சான்டர் உலகையே கைப்பற்றிட நினைத்து பெரும் படையுடன் ஒவ்வொரு நாடாக வென்று இந்தியாவிற்கு வந்தபோது போரஸ் என்ற புருஷோத்தமன் எனப்பட்ட சிற்றரசன் கைது செய்யப்பட்டு அலெக்சான்டர் முன் நிறுத்தப்படுகிறார். கைதானாலும் நெஞ்சம் நிமிர்ந்து நேர்கொண்ட பார்வையோடு நின்ற போரஸ்யை பார்த்து வியந்துபோன அலெக்சான்டர் "உனக்கு என்ன வேண்டும்" எனக்கேட்டார். தன் தலை குனியாது கண்களில் வீரம் கொப்பளிக்க எல்லோரையும் ஒரு முறை கழுத்தை சுழற்றி பார்த்த போரஸ் "அரசே நான் எங்கிருந்தாலும், ஆண்டாலும், வீழ்ந்தாலும், ஒரு அரசன் என்பதை யாரும் மறுத்திடவே முடியாது. அதன்படி நான் இன்று சிறைபட்டு கைவிலங்கிடப்பட்டு நிராயுதபாணியாக நின்றாலும் என்னை அரசனுக்குள்ள மரியாதையோடு நீங்கள் நடத்த வேண்டும்" என்றானாம்! போரஸ்ஸின் துணிவான பேச்சினால் அகமகிழ்ந்த அலெக்சான்டர் போரஸை விடுதலை செய்ததோடு அவன் நாட்டையும் திருப்பி கொடுத்ததாக சரித்திரம் மூலம் அறியமுடிகிறது. துணிவின் அத்தியாவசியத்தையும், முக்கியத்துவத்தையும் பற்றி பாரதியார் தன் பாடல்களிலும், விவேகானந்தர் தனது சொற்பொழிவுகளாலும் உணர்த்தியதை வேறு எவரும் செய்ததில்லை என தைரியமாக சொல்லலாம்.

"ஆயுதம் கொண்ட ஒருவன் தனித்து ஆயுதம் ஏதுமில்லாமல் நிற்கும் ஒருவரை வெல்வது துணிவல்ல! அந்த நிராயுதபாணி தன்னை தாக்க வந்த ஆயுதம்கொண்டவனை வீழ்த்தி வாகை சூடுவதே துணிவு" என்றான் நெப்போலியன்.

ஒரு அற்புதமான செய்தி; மகாகவி பாரதியாரின் விருப்பப்படி புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் முதன் முதலில் பாடிய பாட்டின் இறுதியடி பின் வருமாறு :

"வாளைச் சுழற்றும் விசையினிலே – இந்த
வையமுழுவதும் துண்டு செய்வேன் – என
நீள இடையின்றி நீ நினைத்தால் – அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே !

பாவேந்தரின் இந்த கன்னிப்பாடல் பலமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பல மாநிலங்களில் பட்டிதொட்டிகளில் துணிவின் சிறப்பை கொண்டு சென்றது என்பது ஊரறிந்த உண்மை!

சூழ்நிலை, காலம் நேரம் அறிந்து வெளிப்படும் துணிச்சலே நல்லவை பயக்கும் என்பார் பெரியோர். துவண்டு, சுருண்டு கொண்டிருக்கும் நிலையில் நிலைமையினை சீர்படுத்த ஏற்படும் துணிவானது மாற்றங்களுக்கு வித்திடுவதோடு தேவைப்படும் ஊக்கமும், ஆக்கமும், தாக்கமும் ஏற்படுத்திவிடுமாம்.

"மதி நுட்பத்தோடு இணைந்து எடுக்கப்படும் துணிச்சலான செயல்களுக்கு வெற்றியைத்தவிர வேறில்லை'' என்றார் கவியரசு கண்ணதாசன்.

நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் துணிச்சலான செயல்கள்தான் நிலைத்து நிற்கும். ஆதலின் துணிச்சலான செயல்களில் இறங்கும்போது திட்டப் பணிகள் கூர்மையாக்கப்பட்டு வழித்தடங்கள் வலுபடுத்தப்பட்டு, பின் விளைவுகள் கணிக்கப்பட்டு பின்புதான் ஈடுபட வேண்டும். வெற்றிபெரும் நிலையில் ஏற்படும் பக்க விளைவுகள் என்னவாயிருக்கும் என்பதை முன்கூட்டியே அறிந்து பாதுகாப்பு அரண்களை அமைத்த பின்னரே காரியத்தில் ஈடுபட வேண்டும்.

துணிச்சலான காரியங்களில் ஈடுபடும் முன் சுய திறமைகளை வளர்த்துக்கொள்ளவும், சுற்றுச்சூழலின் சாதக நிலையை கணித்திடவும் ஒரு கால் ஏற்படும் தோல்விகளை ஏற்றிடும் மனோதிடமும் பெற்றபின்புதான் செயலில் இறங்கலாம். துணிச்சல்மிக்கவர்களிடம் ஏனையோர் எதிர்பார்க்கும் உயரிய பண்புகளில் முக்கியமானவை சாந்தமும் தன்னடக்கமுமாகும். அப்போதுதான் மக்கள் உதவியை நாடி தேடிவரும் பழக்கம் தொடர்ந்து இருக்கும்.

குழந்தைகளை வளர்க்கும் போது துணிச்சலைப் பற்றி அவ்வப்போது தெளிவுபடுத்தவேண்டும். மேலும் தங்களது கசப்பான கஷ்டமான அனுபவங்களையும் அவைகளை துணிச்சலோடு எதிர்கொண்டு வெற்றி பெற்ற வரலாற்றையும் கூறி அவர்களது மனோதைரியத்தை வளர்த்திட வேண்டும். ''உன்னால் முடியும்!'' ''எதையும் தாங்கும் இதயம் நம் பரம்பரை சொத்து'' போன்றவைகளை அடிக்கடி சொல்ல வேண்டும். துணிவு என்பது ஒரு ஆற்றல் – இதை ஒரு சக்தி என்றும், இருமுனை கத்தி எனவும் சொல்லலாம்.

தேவையில்லா நேரங்களில் இதை பயன்படுத்துதல் தவறாகும். எதையும் சாதிக்க, சமாளிக்க அவைகள் நல்லது பயக்குவனவாக இருந்தாலும் இதனை கடைசி அஸ்திரமாகத்தான் உபயோகிக்க வேண்டும். தீயவைகளுக்கு ஆதரவாக துணிவோடு முனைந்தால் அடுத்தடுத்து வரும் பின் விளைவுகளினால் மனதளவில் தோற்றுப்போக நேரிடும். தவறான துணிச்சலினால் ஏற்பட்ட ஒரு தோல்வி போதும் ஆயிரம் வெற்றிகள் தந்திட்ட புகழும் அங்கீகாரமும் அழிந்து போவதற்கு!

இரவீந்திரநாத் தாகூருக்கு நோபல் பரிசு வாங்கிக்கொடுத்த ''கீதாஞ்சலி'' பாடல் தொகுப்பில் கீழ்கண்ட வரிகள் காணப்பட்டுள்ளன;

"Where the mind is without fear and the head is held high

.....

.....

.....

Into the heaven of freedom, my father

let my country awake!"

தன்னிடமுள்ள துணிச்சல் என்ற நல்லப்பண்பை அடக்கி ஆளத்தெரிவதோடு தேவையின் அவசியத்தை உணர்ந்துதான் அதை வெளிப்படுத்த வேண்டும். துணிவு என்பது உடல் பலத்தை சார்ந்தது மட்டுமல்ல! மனப்பலத்தையும் பொறுத்த விஷயமாகும். இது பரம்பரை பரம்பரையாய் வரும் சொத்தும்மல்ல! இதனை கற்றுப்பெற்றிட வேண்டிய பண்பாய் கருதுதல் வேண்டும். இதற்கான தனிப்பயிற்சி தேவையில்லை. உடன் வாழ்வோரிடம், பார்ப்போரிடம், உடன் பணிசெய்வோர், தோழர்கள் போன்ற அனைவரின் வாழ்வியல் முறைகளில் துணிவு கலந்திருப்பதை கண்டறிந்து அவரவர் வாழ்வுக்கு தேவையான துணிச்சலைப் பெற்றிடுதல் சாலச்சிறந்தது. காதுகளால் கேட்டுதெரிந்து கொள்வதைவிட கண்களால் பார்த்து புரிந்துகொள்ளவேண்டிய பண்புகளின் ஒன்று துணிவாகும். தேவையை பொறுத்து சூழ்நிலையை பார்த்து துணிச்சலை காட்டவேண்டிய விதத்தை முடிவு செய்ய வேண்டும்.

அச்சமும் தைரியமின்மையும் துணிச்சலுக்கு சவால் விடும் இரு காரணிகள். ஆகையால் தான் கீழ்கண்ட நற் போதனைகள் வழக்கத்திலுள்ளன.

1) அச்சம் தவிர்

2)செய்வது துணிந்து செய்

3)சாவதற்கஞ்சேல்

4) ரௌத்திரம் பழகு

மறுமாற்ற திருத்தாண்டகம் பதிலென் 98–ல் திருனாவுக்கரசர் அடிகளால்

துணிவின் அவசியத்தை ஆணித்தரமாக பாடியது;

''நாம் ஆக்கம் குடி அல்லோம், நமனை அஞ்சோம்
நரகத்தில் இடப்படோம், நடலை இல்லோம்
ஏமாப்போம்பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே என்நாளும் துன்பமில்லை''

எப்படி ஊடலோடு சேர்ந்த காதல் நவரசம் தந்திடுமோ அதேபோல் பணிவுகலந்த துணிவு எனும் பார்போற்றும் பண்பும் வேறு எதிலும் கிடைத்திடாத மனநிறைவைத் தந்திடும். இளமையிலிருந்தே துணிவு என்ற பண்பு பக்குவமாய் வளர்த்தலே பலன் தரும். துணிவின் எல்லையைப் பற்றி சொல்லும்போது சாகத்

துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் என்பார்கள்.

துணிவுப்பண்பு ஆண்களுக்கே அவசியம் தேவையானது என்பது மிகத் தவறான வாதம். இயற்கையின் வாழ்வியல் நியதியப்படி துணிச்சல் பண்புதான் பெண்களுக்கு 24 மணி நேர பாதுகாப்பை அளிக்கும் அரணாகும். இது வரலாற்றுச் சான்றுகளால் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். கனியை பறிக்க உதவுவதோடு காதல் வசப்படவும், கானகத்தில் வெற்றிபெற்றிடவும் உலகத்தில் பெயர் சொல்ல வைத்திடவும் துணிவு ஒன்றால் மட்டுமே முடியும்.

பயந்து வாழேல்! துணிந்து நில்! பணிந்து செல்! கனிந்து சொல்! வீழ்ந்து விடேல்!

கார்குல கும்மிப் பாட்டு

கும்மியடி பெண்ணே கும்மியடி
கார்குலம் குலுங்க கும்மியடி
அன்பும் பண்பும் பாசமும் கொண்ட
கார்குலம் நாங்களென்று கும்மியடி.

உழவு எங்கள் உயிரென்று
உயர்வாய் சொல்லி கும்மியடி
விருந்தோம்பல் நம் பண்பென்று
விருப்பமாய் சொல்லி கும்மியடி

சைவம் நம்ம பண்பாடு
சாத்திரங்கள் நமக்கு உடன்பாடு
இந்த குலத்தில் நாம் பிறக்க
இறைவனுக்கு நன்றியென கும்மியடி
கோத்திரங்கள் நம்ம சிறப்பென்று
கோலாகலமாய் கும்மியடி
குலதெய்வம் துணைக்கு உண்டு என
குனிந்து வணங்கி கும்மியடி

ரத்தினம் பிள்ளை துவக்கி வைத்த
முத்தரைத் தங்கம் சென்னை சங்கம்
நூற்றாண்டு காண்கிறதென்று
துள்ளிக்குதித்து கும்மியடி

பல்வகை விழா நடத்தி நம்மை
பாராட்டி மகிழ்ந்தது இந்த சங்கம்.
ஒப்புரவு என்றொரு நல் இதழை
ஒவ்வொரு வீட்டிற்கும் தந்த சங்கம்

வங்கக் கடல் அலையாய் கூடிடுவோம் நம்
சங்கத்தின் சிறப்பைப் பாடிடுவோம்
பொங்கிடும் மகிழ்ச்சி நிலைத்திருக்க
பொலிவுடன் ஒன்றுகூடி களித்திடுவோமென

கும்மியடி பெண்ணே கும்மியடி!
கும்மியடி பெண்ணே கும்மியடி!

– கிருஷ்ணகுமாரி & கல்யாணி இளங்கோ

செயல்வீரர் - கார்குலச்செம்மல் - சிம்மக்குரலோன் விருதுநகர் அ. பாண்டி காலமானார்

ஆல்போல் தழைத்து அருகு போல் வேறூன்றியுள்ள நமது மாநில கார்காத்த வேளாளர் கூட்டமைப்பிற்கு தோற்றம் முதல் துணையாய் நின்று வளர்ச்சிக்கான வளமையைத் தந்து வளர்த்தவர்களில் முன்னிலையில் உள்ளோரில் விருதுநகர் அ. பாண்டி அவர்களும் ஒருவர் என்பதை சங்க வரலாறு அறிந்த அனைவரும் நன்கறிவர். அவர் வயது முதிர்வால் ஒசூரில் உள்ள தனது அன்பு மகள் வீட்டிலிருந்தாலும் சங்கச் செய்திகளை அறிவதிலும் அதுபற்றி முன்னாள் இந்நாள் சங்க நிர்வாகிகளுடன் அடிக்கடி உரையாடி வருவதிலும் ஆர்வம் காட்டி வந்தார்.

தனது பாசமிகு பெயர்த்தி கோவையில் கல்வி பயிலவேண்டியசூழ்நிலையில்இவரும்தனதுமகளுடன் கோவையில் சிலகாலமாய் தங்கியிருந்து பொழுது இரண்டு மாதங்களாய் உடல்நலம் நலிவுற்றிருந்தார். ஆயினும் அவர் இயற்கை எய்துவதற்கு முன்னரே தான் இறந்தால் தனது மரணச் செய்தியை பரப்புரை செய்யாது எளிய சடங்குகளுடன் உடனடியாக முடித்திட வேண்டுமென்ற உறுதியான முடிவை தனது மகளிடம் கூறிவிட்டார். அதன் காரணமாகவே 05.01.2023 அன்று நடந்த அவரது மரணச்செய்தி 25.01.2023 அன்று செவிவழிச் செய்தியாக நண்பர் மூலம் அறிந்து அதிர்ச்சியும், அடங்கவொனாத் துயரமும் அடைந்தேன்.

இதுபற்றிய செய்தியை கார்குலக்காவலர் முன்னாள் மாநில தலைவர் மதிப்புமிகு இரா. இராஜசேகரன் பிள்ளை அவர்களிடம் தெரிவித்தபொழுது அவர்களும் மிகவும் அதிர்ச்சியுற்று கவலை அடைந்ததுடன், உடனடியாக 'கார்காத்தார் ஒப்புரவு' மூலம் செய்தியை பலரும் அறியுமாறு செய்திட கேட்டுக்கொண்டார்கள். நமது கார்குல வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தெய்வத்திரு. விருது நகர் அ. பாண்டி அவர்கள் ஆற்றிய பணிகள் பற்றி எழுதிட முயன்றால் அதனை ஒரு மலராகவே வெளியிட வேண்டும். எதிர்காலத்தில் அச்செயல் நிச்சயம் நடைபெறும். இவரும் விருதுநகர் நமக்குத்தந்த 'நம்கார்குல கர்மவீரர்' ஆவார். வாழ்க அவரது புகழ் அவரது ஆன்மா சாந்தியடைய நாம் அனைவரும் இறைவனிடம் வேண்டுவோம்.

– வல்லம் கணபதி நடனம்,
செம்பொன்னார் கோவில்.
செல் : 9965549039

வினைப்பயன் (Karma)

Dr. D. Kalyanakumar, Trichy-18.

"நல்லவனாக இருக்கிறான் ஆனால், ஏன் அவன் கஷ்டப்படுகிறான்? அவர் எந்த தவறும் செய்யவில்லையே....! பின் ஏன் அவருக்கு இவ்வளவு சிரமம் நான் யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்தது இல்லையே ஏன் எனக்கு இவ்வளவு துன்பம்? அவன் அவ்வளவு அநியாயம் பண்ணுறான் ஆனால், சுகமாக இருக்கிறானே! எப்படி? ஊரையே அடித்து உலையில் போட்டு இருக்கிறான் ஆனால், நன்றாக உள்ளானே! இந்தக் கேள்விகள் இல்லாத மனிதர் இருக்க முடியாது. இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் இந்து மதம் தரும் பதில் தான் 'கர்மவினை / ஆத்மா / மறுபிறவி / பாவ புண்ணியம்' இது பற்றி தற்போது பார்ப்போம்.

'ஆன்மீக அடிப்படையின்படி, செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு' என்பது நியதி. நல்ல செயல்கள் புண்ணியத்தையும் தவறான செயல்கள் பாவத்தையும் கொடுக்கின்றன. 'கர்மம்' என்று குறிப்பிடுவது முந்தைய செயல்கள் தற்பொழுது விரும்பத்தகாத பலனை அளிக்கும் செயல்களேயாகும். நம் வாழ்க்கை, செயல்களால் அமைந்தது. ஆனால் எல்லாச் செயல்கட்கும் உடனே பலன் கிடைப்பதில்லை. நல்ல சமையலைச் செய்தால், உடனே அதை உண்டு அனுபவிக்கலாம். ஆனால் நெல்லை விதைத்தால் பலனைப் பெறுவதற்குப் பல மாதங்கள் காத்திருக்க வேண்டும். ஆரோக்கித்தைப் புறக்கணித்தால், பல ஆண்டுகளுக்குப் பின்னரே அதன் பலன் தெரியும். ஆனால் கெட்டுப்போன பழத்தைச் சாப்பிட்டால் உடனே வாந்தி வரும்.

கர்மம் காலத்தால் ஏற்பட்டது. அதாவது ஒரு காலத்தில் செய்தது மற்றொரு காலத்தில் பலனைக் கொடுக்கிறது. மனிதன் காலத்திற்கு உட்பட்டவன் அவன் காலத்தை வென்றவன் அல்லன். அதனால் காலத்தால் ஏற்படும் விளைவுகளை, கர்மப்பலன்களை அவன் அனுபவித்தே தீர வேண்டும்.

நடிகர் திலகம் அவர்கள் நடித்த 'கர்ணன்' படம் பார்த்து இருப்பீர்கள். அதில் கர்ணனை அனைவரும் தாக்கியும் அவர் சாக மாட்டார் காரணம், அவர் செய்த தர்மங்கள். புண்ணியம் அவரை அழிக்க வேண்டும் என்றால், அவரிடம் உள்ள புண்ணியம் அனைத்தும் தீர வேண்டும் இதற்காகத் தான் கிருஷ்ணர் அந்தணர் வேடம் பூண்டு கர்ணனிடம் இருக்கும் புண்ணியத்தை யாசகம் கேட்பார் தன் புண்ணியங்களை கர்ணன் தாரை வார்த்துக்கொடுத்ததும் அடுத்த தாக்குதலில் இறந்து விடுவார். இந்த விஷயம் ஓரளவு கர்மவினை / பாவ புண்ணியம் பற்றி புரிந்து கொள்ள உதவும்.

ஒரு அரசன், வேதம் ஓதும் அந்தணர்களுக்கு உணவளித்துக் கொண்டிருந்தான். அப்போது வானத்தில் கழுகு ஒன்று, தனக்கு இரையாக பாம்பு ஒன்றை தன்னுடைய கால்களில் பற்றிக்கொண்டு பறந்து சென்றது. அந்த கழுகின் இறுக்கமாக பிடியில் இருந்த பாம்பு, தன்னுடைய வாயில் இருந்து சில துளி விஷத்தைக் கக்கியது. அந்த விஷமானது, அரசன் வைத்திருந்த உணவு பாத்திரத்திற்குள் விழுந்தது. விஷம் விழுந்த உணவை, அறியாது ஒரு அந்தணருக்கு அளித்தான் அரசன். அந்த உணவை வாங்கி சாப்பிட்ட அந்தணர், மறுகணமே இறந்து போனார். இதைக்கண்ட அரசன் மிகவும் வருத்தம் கொண்டான். கர்ம வினைகளுக்கான பலன்களை எழுதும் சித்திரகுப்தனுக்கு, இந்த கர்ம நிகழ்வின் வினையை யாருக்கு கொடுப்பது என்பதில் குழப்பம் ஏற்பட்டது. இந்த கர்மவினையை கழுகுக்கு அளிப்பதா? அல்லது பாம்பிற்கு அளிப்பதா? அல்லது அரசனுக்கு அளிப்பதா? என்று அவர் பரிதவித்தார். கழுகு அதற்கான இரையைத் தூக்கிக் கொண்டு சென்றது அது அந்தக் கழுகின் தவறு இல்லை. இறந்து போன பாம்பின் வாயில் இருந்து விஷம் வழிந்தது. சாவின் பிடியில் இருந்த போது, ஏதேச்சையாக நடந்த அந்த நிகழ்வு பாம்பின் தவறும் அல்ல. அரசனுக்கு உணவில் பாம்பின் விஷம் கலந்திருப்பது தெரியாது. அவர் அறியாமல் நடந்த நிகழ்வுக்கு அவன் மீதும் குற்றம் சுமத்துவது சரியல்ல. எனவே இந்த பிரச்சினையில் தீர்வு காண முடியாமல் சித்திரகுப்தன் குழம்பினார்.

இதுபற்றி எமதர்மனிடமும் சென்று கேட்டார். சற்றுநேரம் யோசித்த எமதர்மர், "சித்திரகுப்தா, இதற்கான பதில் விரைவில் கிடைக்கும். அதுவரை பொறுமையாக இரு" என்று அறிவுறுத்தினார். சில நாட்கள் கழித்து அரசனின் உதவியைப் பெறுவதற்காக சில அந்தணர்கள், அவரது அரண்மனைக்குச் சென்றனர். வழி தெரியாததால் சாலையோரம் அமர்ந்து வியாபாரம் செய்து கொண்டிருந்த ஒரு பெண்மணியிடம் அவர்கள் வழிகேட்டனர். அப்போது அந்த பெண்மணி, அவர்களுக்கு சரியான பாதையைக் கூறியதோடு, "இந்த அரசன் அந்தணர்களைக் கொல்பவன் சற்று எச்சரிக்கையாக இருங்கள்" என்றும் கூறினாள்.

அந்த வார்த்தையைக் கேட்டதும், சித்திரகுப்தன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். அந்தணரைக் கொன்ற கர்மாவின் வினை முழுவதும் இந்தப் பெண்மணியையே சேரும் என்று அவர் முடிவு செய்து, அதையே பாவ, புண்ணிய புத்தகத்தில் எழுதவும் செய்தார். ஆம்... மற்றவர்கள் மீது பழி சுமத்தும் போது அதில் உண்மை இருந்தாலும், அவர்கள் செய்த கர்ம வினையில் பாதி, பழி சுமத்துபவருக்கு வந்து சேர்ந்து விடும். அதே நேரம் உண்மையை உணராமல் அபாண்டமாக பழி சுமத்துவோருக்கு அந்த கர்மவினை முழுவதுமே வந்தடையும். ஆகையால் மற்றவர்களைப் பற்றி பேசும்போது எச்சரிக்கையுடன் பேச வேண்டும்.

ஒருவர் மற்றவர்க்கு துன்பம் விளைவித்தால், அவர்களை பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று நினைப்பது மனித இயல்பு. ஒருவர் அனுபவிக்கும் துன்பங்களுக்கு அவரவர் செய்த முன்வினைப் பயனும்கூட காரணமாக இருக்கலாம். ஆகையால், ஒருவர் தமக்கு வந்த துன்பத்தில் இருந்து விடுபடுவதற்கு முயற்சிக்க வேண்டுமே தவிர, துன்பம் விளைவித்தவர்களின் மீது கோபம் கொண்டு, அவர்களைப் பழிவாங்க நினைக்கக் கூடாது. ராமாயண இதிகாசத்தில் அனுமனிடம் இதைப் பற்றி சீதா பிராட்டி சொன்ன நீதியைப் பார்ப்போம்.

ராவணனால் சிறைபிடிக்கப்பட்ட சீதை அசோகவனத்தில் பலம் பொருந்திய பல அரக்கிகளின் நடுவே காவலில் வைக்கப்பட்டிருந்தார். அந்த அரக்கிகள் ராவணனின் விருப்பத்துக்கு அடிபணியும்படி சீதையை தினமும் துன்புறுத்தி வந்தனர். ஆனால், அதற்காக சீதை அந்த அரக்கிகள் மீது கோபம் கொள்ளவில்லை. 'தனக்கு நேர்ந்த துன்பத்துக்கு எல்லாம் தான் செய்த முன்வினை பயன்தான் காரணம்' என்று நம்பினார். சீதையை திருப்பி அனுப்பும்படி ராமபிரான் பலமுறை ராவணனுக்கு தூது அனுப்பியும் அவன் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் வேறு வழியின்றி யுத்தம் தொடங்கியது. அந்த யுத்தத்தில் ராவணன் வதம் செய்யப்பட்டான். அந்த செய்தியை அசோகவனத்தில் இருந்த சீதையிடம் வந்து கூறினார் அனுமன். அதைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற சீதை, ''நான் முன்பு ஒருமுறை உயிர் துறக்க நினைத்தபோது நீதான் வந்து என்னை காப்பாற்றி, 'ஸ்ரீராமர் விரைவில் வந்து மீட்பார் என்று கூறினாய் அப்போது உனக்கு சிரஞ்சீவியாக இருக்கும் வரம் அளித்தேன். இப்போது ராமரின் வெற்றி செய்தியைக் கொண்டு வந்திருக்கிறாய். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்' என்று கூறினார். அதற்கு அனுமன், ''தாயே எனக்கு வரம் எதுவும் தேவையில்லை. கடந்த பல காலமாக உங்களைத் துன்புறுத்திய இந்த அரக்கியரை தீயிட்டு கொளுத்துவதற்கு மட்டும் எனக்கு அனுமதி தாருங்கள்'' என்று வேண்டினார்.

அதற்கு மறுப்பு தெரிவித்த சீதை, ''இந்த அரக்கிகள் என்னைத் துன்புறுத்தினாலும் அவர்களை தண்டிப்பதற்கு எனக்கு விருப்பமில்லை. ஏனெனில், இந்தத் துன்பங்களுக்கு நான் செய்த முன்வினை பாவமே காரணம். பொன்மான் என்று நினைத்து மாயமானுக்கு ஆசைப்பட்டேன். அதைக் கொண்டு வர என் கணவரை அனுப்பினேன். அவர் நீண்ட நேரமாகியும் திரும்பி வராததாலும், 'லட்சுமணா, லட்சுமணா என்று அபயகுரல் எழுப்பியதாலும் பயந்துபோன நான், எனக்குக் காவலாக இருந்த லட்சுமணனை சென்று பார்த்து வரும்படி கூறினேன். அவர் என் கணவருக்கு எந்த ஆபத்தும் நேர்ந்திருக்காது என்று மறுத்துக் கூறியும், அதை ஏற்றுக் கொள்ளாமல், சுடுசொற்களால் லட்சுமணனை கண்டித்தேன். ஒரு பாவமும் அறியாமல் இரவு பகலாக எங்களை கண்ணிமை போல் காத்து வந்த லட்சுமணனை மனம் நோகச் செய்ததுதான் நான் அனுபவித்த துன்பத்துக்குக் காரணம். எனவே, நீ அரக்கிகளை எதுவும் செய்து விடாதே' என்றார்.

ஒவ்வொரு செயலுக்கும் எதிர் வினை ஏற்படும் என்பது உலகப் பொது வழக்கு. அந்த வழக்கு போலவே, இந்து சமயத்திலும் ஒவ்வொருவரின் செயல் வினைக்கும் அதற்கேற்றாற்போல் பலன் கிட்டும் என்பதை குறிப்பதற்கு 'கர்மா' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதனை தமிழில் 'வினைப்பயன்' என்றும் கூறுவர்.

நாம் நம் கடமையை சரியாகச் செய்ய வேண்டும் நம்முடைய தவறுகளுக்கு கர்மாவை காரணம் காட்டி தப்பிக்கப்பார்த்தால் அது நம் தவறு. கர்மாவின் தவறல்ல அப்படி நினைக்க வைத்து உங்களை மேலும் சிரமப்படுத்துவது கர்மாவின் நோக்கமாக இருக்கலாம். அதற்கு இடம் கொடாமல் தொடர்ந்து போராடி கஷ்டத்திற்கே கஷ்டம் கொடுத்தால், வேறு வழியில்லாமல் கர்மாவே 'என்னடா! இவன் எப்படி பந்து போட்டாலும் அடிக்கறானே என்று கொஞ்சம் சிரமத்தை குறைப்போம்' என்று முடிவு செய்யும் விதியைக் காரணம் காட்டி தப்பித்துக்கொள்ள முயற்சித்தால், உங்களை கர்மா அவ்வாறு செய்ய நினைக்க வைத்து

தந்திரமாக பலி வாங்கி, மேலும் மேலும் தவறு செய்யத் தூண்டி உங்களை சிரமத்தில் ஆழ்த்தப் பார்க்கிறது என்று அர்த்தம். எனவே, நமக்கு சிக்கல் வருகிறது என்று உணர்ந்து உஷாராகி தவறு செய்யாமல் எதிர்த்துப் போராடி வினைப்பயனை குறைக்கப் பார்க்க வேண்டும். இது புரியாமல் நீங்கள்... 'அட போப்பா... நேரமே சரியில்லை... விதிப்படி நடக்கட்டும்' என்று பயந்து விலகினால் கர்மா குஷியாகி உங்களைப் போட்டுத் தாக்கும்.

பிறவிகள் மாறிக்கொண்டே இருக்கும் தேகம் மாறிக்கொண்டே இருக்கும் ஆனால் கர்மவினை நம் பின்னால் வந்து கொண்டே இருக்கும். மீதமுள்ள கர்மவினைகளில் தான் பிறவிகள் தொடர்கின்றன. அனுபவிக்காமல் கர்மவினை நீங்காது வேறுவழி இல்லை. ஆனால் இவ்விஷயத்தில் இறைவனை ஆராதனை செய்து கொண்டிருந்தால், அதன் பலனாக இரும்பு போன்ற கர்மா பஞ்சு போலாகிவிடும்.

இதைத் தான் வள்ளுவப் பெருந்தகை, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்" என்றார். அதாவது பிறப்பு எல்லோருக்கும் ஒரே மாதிரி தான். ஆனால் அவரவர் செய்யும் செயல்களுக்கு ஏற்ப அவரவர்களுக்கு சிறப்பு கிடைக்கிறது. அல்லது கிடைக்காமல் போகிறது என்கிறார். அப்படி வரும்போது நாம் ஒவ்வொரு பிறவியிலும் செய்யும் வினைகளுக்கேற்ப (செயல்களுக்கு ஏற்ப) நமக்கு கர்மா உருவாகிறது. தொடர்கிறது என்கின்றனர் நமது முன்னோர்கள்.

நம்மையே எடுத்துக் கொள்ளுங்கள் சில சமயங்களில் சிலர் ஏதாவது ஒரு தப்புக்கு வசமாக மாட்டும் போது "செஞ்ச பாவம்.... சும்மா விடுமா?" என்கிறோம் அல்லவா? அந்தப் "பாவம்" தான் கர்மா!

"வருவதும் போவதும் இன்பமும் துன்பமும்
வந்தால் போகாதது புகழும் பழியும்
போனால் வராதது மானமும் உயிரும்
தானாக வருவது இளமையும் மூப்பும்
நம்முடன் வருவது பாவமும் புண்ணியமும்"

கண்டிப்பாக!! "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" – பழமொழி என்றும் பொய்யாவதில்லை (Scientific fact: For every action, there is an equal and opposite reaction - Newton's 3rd Law).

ஸ்ரீ விநாயகா டிராவல் ஏஜென்ஸி

கழனிவாசல்–மங்கைநல்லூர்,

மயிலாடுதுறை-609404.

e-mail: vinayagatravelskvl@gmail.com

மிக குறைந்த கட்டணத்தில் ரயில் யாத்திரை

திட்டம்	ஸ்தலங்களின் விபரம்	புறப்படும் நாள்	நாட்கள்	கட்டணம்
A	ஷீரடி, பண்டரிபுரம், சனிசிக்னாப்பூர், பரலி, அகுண்டா நாகநாத், எல்லோரா, கிருஷ்னேஷ்வர், திரியம்பகேஷ்வரர், பீமாசங்கர், நாசிக்	04-04-2023	10	₹12,500/-
B	காசி, அலகாபாத், சீதாமரி, கயா, புத்தகயா, ஆக்ரா, மதுரா, டெல்லி	15-05-2023	10	₹12,500/-
C	காசி, அலகாபாத், சீதாமரி, கயா, புத்தகயா, ஆக்ரா, மதுரா, டெல்லி, ஹரித்துவார், ரிஷிகேஷ்	15-05-2023	12	₹15,900/-

(கட்டணம் : ரயில், பஸ், படகு, தங்குமிடம், ஒருவேளை காபி, மூன்று வேளை உணவு உட்பட)

தொடர்புக்கு: **S. ராஜு** B.Sc., கழனிவாசல். **Cell: 9443617870, 9488016470**

நட்சத்திரங்களும் மரங்களும்

(தொடர்ச்சி)

அக்ரி. கு. சேதுசுப்ரமணியன், சிதம்பரம்.
அலைபேசி : 9443665642

10. மகம் :

நட்சத்திர வரிசையில் பத்தாவது நட்சத்திரமாக விளங்கும் மகம் நட்சத்திரம் சிம்ம இராசியில் நான்கு பாதங்களைக் கொண்டது. சிம்ம இராசிக்கு உரிய கிரகம் சூரியனாகும். மகத்தின் அடையாளக் குறியீடு சிம்மாசனம் அல்லது பல்லக்கு ஆகும். மகம் நட்சத்திரத்தின் கிரகாதிபதி கேதுவாகும். ஆகவே மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு கேது திசையே ஆரம்ப திசையாக அமையும். இதன் தேவதை பிதிர்கள், கணம் இராட்சசம், மிருகம் எலி, பறவை ஆண் கழுகு, விருட்சம் ஆலமரம் என்பவையாகும்.

மகமும், பௌர்ணமியும் இணையும் மாசி மகம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. மாசி மகத்தில் விரதமிருந்துதீர்த்தமாடுதல்வளமும்நலமும் அளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. மகத்தில் பிறந்தவர் ஜெகத்தை ஆள்வார்கள் என்று சொல்லப்பட்டாலும் எல்லோர்க்கும் அந்த வாய்ப்பு அமைந்து விடுவதில்லை. அது கிரகங்களின் அமைப்பை பொருத்தது.

மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தாங்கள் இருக்கும் இடத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பார்கள். சுபபோகங்களில் பிரியமானவராக இருந்தாலும், ஆழ்ந்த தெய்வ நம்பிக்கையும், பிதுர்களின் மேல் பக்தியும், கொண்டிருப்பார்கள். செல்வம், செல்வாக்கு உடையவர்கள். பிரயாணங்களில் பிரியம் கொண்டவர்கள். விவேகமும், நினைத்ததை முடிக்கும் திறமையும் உண்டு. சில சமயங்களில் கோபம் கொண்டாலும் அதனை மறந்து இயல்பு நிலைக்குத் திரும்பி விடுவார்கள். இந்த நட்சத்திரக்காரர்கள் நேரம் காலம் பார்க்காமல் அடுத்தவர்களுக்கு உதவும் மனப்பான்மை உடையவர்கள்.

மகம் நட்சத்திரத்தின் விருட்சம் ஆலமரமாகும். ஆலமரத்தை தல விருட்சமாகக் கொண்ட திருத்தலங்களான திருவாலங்காடு, திருவெண்காடு, திருப்பழுவூர், அன்பில் ஆலந்துறை, திருக்கச்சூர், திருவாலம்பொழில், திருநெல்வாயில் அரத்துறை ஆகியவை, மகம் நட்சத்திரக்காரர்களுக்குப் பரிகாரத் தலங்களாகவிளங்குகின்றன. அவர்கள் தலங்களுக்குச் சென்று முறையான வழிபாடுகள், மல்லிகை மலர்களால் ஆன மாலை அணிவித்தல் ஆகியவற்றைச் செய்ய இம்மைப் பயன்களை அடையலாம்.

தலவரலாறு :

முன்னொரு காலத்தில் திருவாலங்காடுப் பகுதி, ஆலம் வனமாக இருந்தது. கம்பன், நிகம்பன் என்னும் இரண்டு அசுரர்கள் அவ்விடத்திலிருந்து கொண்டு அனைவருக்கும் துன்பம் விளைவித்துக் கொண்டிருந்தனர். தேவர்கள் இறைவனிடம் முறையிடவே, இறைவி தன்னுடைய கண்களிலிருந்து காளியைத் தோற்றுவித்தார். காளியும் படைகளுடன் சென்று அசுரர்களை வென்றாள். இறைவியும் காளிக்கு அவ்விடத்திலிருந்து ஆட்சி செய்யும் உரிமையை அளித்தார். ஆனால் அசுரத் தொடர்பு ஏற்பட்ட காளிக்கு ஆணவம் உண்டாகி, இறைவனையே நடனப் போட்டிக்கு அழைத்தாள். இறைவனும் அதனை ஏற்று ஊர்த்துவ தாண்டவம் ஆடி காளியை வென்றார். திருவாலங்காடு இரத்தினசபையில் நாம் காண்பது இந்த தாண்டவமேயாகும்.

காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து வந்து, நடராசப் பெருமானின் திருவடிக்கீழ் இருந்து சிவானந்தம் பெற்ற தலமே திருவாலங்காடாகும்.

மேலும், கார்க்கோடகனும், முஞ்சிகேஸ்வரரும், தரிசித்துப் பேறு பெற்ற தலம்.

திருவாலங்காடு பஞ்ச சபைகளில் ஒன்றான இரத்தின சபையைக் கொண்டது.

"ஆலின் கீழ் இருந்து ஆரணம் ஓதி" என்று நாவுக்கரசரும் "அன்று ஆலின் கீழ் இருந்து அறமுரைத்தான் காணேடி" என்று மாணிக்கவாசகரும், சிவபெருமான் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து சனகாதி முனிவர்கட்கு முப்பொருள் உண்மையை உணர்த்தியது குறித்துப் பாடியுள்ளனர். அதனால்தான், ஆலமரக் கடவுள் என்று தென்முகத் தெய்வமாம், ஸ்ரீதட்சிணாமூர்த்தியைக் குறிப்பிடுகிறோம். இவ்வாறு ஆலமரம் இறைவழிபாட்டில் சிறப்பானதொரு இடம் பெறுகிறது.

ஆலமரம் :

ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி என்று மங்கல நிகழ்ச்சிகளில் வாழ்த்துவது நம் மரமாகும். ஆலமரம் நன்கு கிளைத்துப் பரவி, விழுதுகள் மூலம் நிலத்தில் வேரூன்றி பல ஆண்டுகள் நிலைத்து வாழும் மரமாகும்.

ஆலமரத்தின் தாவரவியல் பெயர், Ficus benghelensis Limn. என்பதாகும். Moraceal என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது. அரச மரமும் அந்த தாவரக்குடும்பத்தைச் சேர்ந்ததுதான்.

மரத்தின் பட்டை சாம்பல் நிறத்துடன் காணப்படும். இலைகள் தனியானவை. தடித்து பளபளப்பாக இதய வடிவாகத் தோன்றும். இலைக் கோணத்தில் சிறிய உருண்டை வடிவான பச்சையான காயின் உள்ளே, சுவர்களில் பூக்கள் உண்டாகும். தமிழிலக்கியங்களில் இதனை கோளி எனவும், தாவரவியலார் Hypenthodium எனவும் கூறுவர். ஆண்மலர்களும், பெண்மலர்களும் தனித்தனியாக உள்ளன. கனிகள் முதலில் பசுமையாகவும் பின்னர் செந்நிறமாகவும் மாறுகின்றன.

மரத்தின் பட்டையை ஊறவைத்துக் கிடைக்கும் வடிநீர் நீரிழிவு நோயாளிக்குச் சர்க்கரையின் அளவைக் குறைக்கும். இரத்தத்துடன் போகும் வயிற்றுப் போக்கு, சீதபேதி ஆகியவற்றுக்கும் இதனைக் கொடுக்கலாம். மேலும் விந்தணுக்கள் குறைபாட்டுக்கும், ஆண்மைக்குறைவுக்கும் சிறந்ததொரு ஊக்கபானமாக (Tonic) அமையும்.

மரத்தின் பால் (Latex), விதை, பழங்கள் ஆகியவை மூட்டுவலி, காயங்கள், பாத வெடிப்புகள், சிராய்ப்புகள் முதலியவற்றுக்கு மேல் பூச்சாகப் பூச நிவாரணம் அளிக்கும் தீப்புண்களுக்கும் நல்லது.

இலையைச் சூடேற்றி பின்னர் அரைத்து மாவு பதத்தில் (Poultice) கட்டிகள், வீக்கம் ஆகியவற்றிற்குப் பூசிவிட விரைவில் குணமாகும்.

மெலிதான மரக்குச்சிகள், கொண்டு பல் துலக்கப் பயன்படுத்துவதால், ஈறுகளுக்குப் பலமும் பல்லுக்கு உறுதியும் உண்டாகும். அதனால்தான் "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்ற பழமொழி வழங்கப் பெறுவதாயிற்று.

பழத்தின் சாறு இரத்தபேதி, வயிற்றுப்போக்கு ஆகியவற்றுக்கு நன்மருந்தாகும்.

மரத்தின் குச்சிகள் வேள்விப்பூசைகளில் சமித்து வகையாகப் பயன்படுகிறது.

மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் ஆலமரக்கன்றுகளை ஏரி, குளக்கரைகளிலோ அல்லது பரந்த இடங்களிலோ நட்டு, நீர் ஊற்றி பராமரித்தாலும் தலங்களில் உள்ள ஆல விருட்சங்களை வழிபடுவதும் நல்ல பரிகாரமாக அமைவதுடன், முன்னர் சொன்ன திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்வதும் நன்மைகளை நல்கும்.

– (பயணிப்போம்)

கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூக நலச்சங்கம்

மங்கல சந்திப்பு

கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூக நலச்சங்கம் சார்பாக வருகின்ற 09–04–2023 ஞாயிற்றுக்கிழமை மங்கல சந்திப்பு நடைபெற உள்ளது. மங்கல சந்திப்பு நிகழ்ச்சி வெண்திரை மூலம் வரன்கள் அறிமுகம் செய்ய இருப்பதால் விண்ணப்பத்துடன் புகைப்படம் அவசியம் இணைக்கவும். **பதிவு ஒன்றுக்கு ரூ. 500/-** விண்ணப்பம் வேண்டுவோர் கீழ்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு தொடர்பு கொண்டு பெற்று கொள்ளவும். வெளியூர் கார்குல சொந்தங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு பூர்த்தி செய்த விண்ணப்பத்தை கொரியர் வாயிலாக அனுப்பவும்.

முகவரி : திரு. **M.R.K. பாண்டியன் (எ) R. சுகுமார்**
17/18, பெரிய அப்பாவு தெரு, கும்பகோணம். **Cell :7598073235/9442013459**

மங்கல சந்திப்பு பதிவு ரூ. 500/–ஐ **V. சிவகுமார்** என்ற பெயரில் வரையோலையாக மட்டும் அனுப்பி வைக்கவும் அல்லது நேரில் செலுத்தவும்.

பதிவு இல்லாமல் புத்தகம் தர இயலாது.

மேலும் விவரங்களுக்கு:

S. விஜயகுமார், 9443984770 **A.S. பழனி**, 8870342493 **M. சாமிநாதன்**, 9443662462
T.S. சூரியநாராயணன், 9443589510 **V. சிவகுமார்**, 9443620015

சுயம்வர பார்வதி கலா ஹோமத்துடன் இனிதே ஆரம்பம் ஆகிறது. அன்றைய தினம் பதிவு செய்பவர்களுக்கு புத்தகம் கிடைப்பது அரிது. புத்தகம் வேண்டுவோர் வரன் விவரப் பட்டியலுடன் 05–04–2023 க்குள் பதிவு செய்யவும். மங்கல சந்திப்பு நடைபெறும் இடம் பதிவு செய்பவர்களுக்கு மட்டும் வாட்ஸ்அப் வாயிலாக தெரிவிக்கப்படும்.

- S. விஜயகுமார், செயலாளர்.

பூவிழுந்தநல்லூரில் (CREW) 39-ம் ஆண்டு பொங்கல் விழா 2023

"கைம்மாறு உகவாமல் கற்றறிந்தோர் – மெய்வருந்தித்
தம்மால் இயல் உதவிதாம் செய்வர் – அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியன தாம் மென்று" – நன்னெறி

பல்லானது தான் மிகவும் முயன்று கடினமான உணவுப்பொருளைக் கடித்தும், அரைத்தும் எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி நாவுக்கு சுவைக்க தருவது போல CREW CHAIRMAN அவர்களும் தனது கடின உழைப்பால் ஈட்டிய பொருளை வறியவர்களுக்குப் பல்லாற்றானும் பல ஆண்டுகளாக வழங்கி வருவதை பலரும் அறிவர். இது உயர்ந்தவர்களுக்கே உரிய குணம் என நன்னெறி நூல் சொல்கிறது.

பொங்கலன்று 39 வருடங்களாக 10–க்கு மேற்பட்ட மாநிலங்கள் சில வெளிநாடுகளில் உள்ள 10,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுடன் பொன்விழா ஆண்டை நோக்கி வெற்றி நடைபோடும் CHENNAI RADHA ENGINEERING WORKS (P) LTD-ன் CHAIRMAN & MANAGEING DIRECTOR சரித்திரம் படைத்த சாதனையாளர் மதிப்பிற்குரிய திரு. S. வெங்கடேசன் அவர்கள் மற்றும் திருமதி. ஞானாம்பிகை வெங்கடேசன் (DIRECTOR CREW). திரு.A.முருகானந்தம் (MD.AND CHIEF SCIENTIFIC OFFICER, AFFIGENIX BIO SOLUTIONS (P)LTD BANGALORE திருமதி. ராதா செல்வி முருகானந்தம் CEO INTERLACE INDIA (P) LTD CHENNAI திருமதி. பத்மா சிவக்குமார் (DIRECTOR CREW) திருமதி. S. அருணாசெந்தில்குமார் மற்றும் அவர்கள் குடும்பத்தாரையும் கிராமத்தலைவர் திரு. R. பத்மநாபன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவி திருமதி. திரிபுரசுந்தரி பத்மநாபன் மற்றும் கிராம மக்கள் அனைவரும் செண்டை மேளம் முழங்க வாணவேடிக்கைகளுடன் வரவேற்றனர்.

மாட்டுப்பொங்கல் அன்று காலை வழக்கம் போல CREW CHAIRMAN தனது குடும்பத்தாருடன் விசாலாட்சி அம்மை உடனாகிய அ/மி விசுவநாத சுவாமி ஆலய சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்டார்கள். தெய்வ வழிபாட்டிற்கு பிறகு கிராமத்தில் உள்ள 600 குடும்பங்களுக்கும் எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் 3000–க்கு மேற்பட்டவர்களுக்கு ரொக்கப் பணம், தெருவாரியாக குலுக்கல் முறையில் தங்ககாசுகள் மொத்தம் 82 கிராம் அளிக்கப்பட்டது. இரவு காட்டுமன்னார்குடி சரவெடி சரவணன் குழுவினரால் திரைப்பட நடிகர்களுடன் சிறப்பான கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

உழவர் திருநாளன்று காலை முதலாவதாக கபடிப் போட்டியினை தொடக்கி வைத்து முடிவில் வெற்றி பெற்றவர்களுக்கு CREW CHAIRMAN அவர்கள் சுழற் கோப்பைகளை வழங்கினார்கள். தொடர்ந்து 30–க்கு மேற்பட்ட போட்டிகள் நடைபெற்றன.

மாலை CREW CHAIRMAN S. வெங்கடேசன், திருமதி. ஞானாம்பிகை வெங்கடேசன், திருமதி. அருணா செந்தில்குமார், திருமதி. பானுமதி பாலகிருஷ்ணன், திருமதி. திரிபுரசுந்தரி பத்மநாபன் ஆகியோர் திருவிளக்கு ஏற்றி விழாவை துவக்கி வைத்தனர்.

செல்வி. சகானா சிவக்குமார் இறைவணக்கம் பாட ஆசிரியர் M. பாலகுரு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. வே.மா. சம்பந்தன் அவர்கள் (தலைமை ஆசிரியர் ஓய்வு) சிறப்புரையாற்றினார்கள்.

பின்னர் விழா முன்னிலை வகித்த CREW CHAIRMAN மற்றும் அவர் தம் குடும்பத்தார் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசுகளை வழங்கினார்கள். இறுதியில் விழாவில் கலந்துகொண்டவர்களுக்கு குலுக்கல் முறையில் மொத்தம் 56 கிராம் தங்க நாணயங்கள் வழங்கப்பட்டது.

முடிவில் ஆசிரியர் திரு. R. ஞானம் விழா சிறப்புடன் நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறினார். விழா ஒருங்கிணைப்பாளர்கள் திரு. S. ராமகிருஷ்ணன், திரு. R. பத்மநாபன், திரு. S. பூங்குன்றன், திரு. K. கணபதி, திரு. S. தொல்காப்பியன், திரு. K. பழமலை, திரு. R. சிவக்குமார், திரு. B. ரமேஷ், திரு. S. வசந்தகுமார், திரு. C. முருகன் பெரிய கோட்டகம், திரு. செல்வராஜ், திரு. S. ராமநாதன், திரு. K. ராஜ், திரு. சங்கர், S. விஜயலெட்சுமி, S.கண்ணகி, B. கவிதா, S. அன்னபூரணி ஆகியோர் விழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கினர். விழா நடைபெற்ற நாட்களில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. விழா நாட்களில் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் சிறப்பு பரிசுகள் அளிக்கப்பட்டது.

– விழா தொகுப்பாளர்

திருமதி. B. கலைச்செல்வி பாலகுரு,
கும்பகோணம்.
9443430811

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/2 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : சமபடிப்பு/சென்னை/பெங்களூரில் நல்ல பணியில் உள்ள வரன்	16.09.95 155 cm	B.E. (Com. Sci) M.Sc., Cyber Forensics and Information Security	Associate in MNC Bangalore (Top 5 Company)	திரு. N. Gowrishankar, 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 96772 33791 Phone : 044 – 2363 8284
B 2/2 செல்வி **R. பிரியா** பூரம் பெண்ணாகட பூர்வீகம் : கிடாத்தலைமேடு, மயிலாடுதுறை விருப்பம் : சென்னை / பெங்களூரில் பணியில் உள்ள வரன்	13.04.95 150 cm	B.Tech	Software Module Lead Mind Tree Ltd.,	திரு. வே. இராஜசேகரன், 20 Type 4 Quarters, Block 13, Neyveli - 607 803. Cell : 94862 82512 / 94897 77523 E-mail : rashasekar@gmail.com
B 3/2 செல்வி **A. சுபஸ்ரீ** சுவாதி 4ம் பாதம் அங்கனுட பூர்வீகம் : பிள்ளைபாளையம்	18.08.99 5' - 7"	B.Com., (M.Com.)	Pegatron Pvt. Ltd., Chengalpattu	திரு. V. அம்பலவாணன், 52, பல்கீஸ் நகர், பள்ளிப்படை வண்டிகேட், சிதம்பரம் – 608 001. Cell : 98652 18696, 98658 64275
B 4/2 செல்வி **ச. நித்யா** அனுஷம் களப்பாள பூர்வீகம் : செந்துறை	16.10.96 160 cm	B.E. (EEE) (CEG Anna University)	Cashier (Indian Overseas Bank)	திரு. T. சண்முகசுந்தரம், 2/1747, பச்சை இல்லம், வீரமணி தெரு விரிவு, மடிப்பாக்கம், சென்னை – 600 091. Cell : 94442 43186
B 5/2 செல்வி **N. வைஷ்ணவி** விசாகம் குழுமுடையான் பூர்வீகம் : நாகமங்கலம்	06.04.96 160 cm	M.Sc., B.Ed.,		திரு. T. நேரு, Plot No. R-41, 2nd Main Road, Pallavan Nagar, Thiruverkadu, Chennai - 600 077. Cell : 97905 27425, 86104 52705
B 6/2 செல்வி **Dr. V.S. ஐஸ்வர்யா** மூலம் 2ம் பாதம் நிம்மலுட பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் – சிதம்பரம் விருப்பம் : நிரந்தர பணியில் உள்ள வரன்	02.12.97 163 cm	Pharm D (Doctor of Pharmacy) DFN	Assistant Professor	திரு. கி. அருள்பிரகாசம் பிள்ளை, 6, அப்பாவு பிள்ளை தெரு, சிதம்பரம் (Tk), கடலூர் (Dt.) – 608 001. Cell : 95977 92582, 94424 41120 E-mail : saraswathipriya1@gmail.com
B 7/2 செல்வி **கெ. இனியா** திருவோணம் கனகராய பூர்வீகம் : செந்துறை – அரியலூர் மாவட்டம்	24.03.98 5' - 3"	B.Com., CA, CMA	Auditor Office Chennai	திரு. க. கென்னடி, D-8, NSC போஸ் சாலை, வட்டம் – 18, நெய்வேலி – 607 803. Cell : 94421 89403, 94442 89403

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 8/2 செல்வி **S. SUWATHI** Visakam Vanjanamuda பூர்வீகம் : Ariyalur	27.06.96	B.Tech (IT)	Walmart (Good Salary)	திரு. M. SEKAR, 8/6C, ELGI Nagar Phase, Velloure, Coimbatore - 641 111. Cell : **98653 17425, 72000 78749**
B 9/2 செல்வி **R. புவனபவித்ரா** பூராடம் 4ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : மே.மாத்தூர்–மயிலாடுதுறை விருப்பம் : வெளிநாட்டில் பணியில் உள்ள வரன்	16.07.2000 162 cm	B.E. (CSE)	CTS, Chennai	திரு. N. ரமேஷ், F5, செவன்ஹில்ஸ் ரெசிடென்சி, இராமகிருஷ்ணா நகர், இலுப்பூர் ரோடு, கல்லக்குழி, திருச்சி – 20. Cell : **94451 40302, 90038 64304**
B 10/2 செல்வி **தா. வினோதினி** விசாகம் கொங்கராய பூர்வீகம் : பூவிழந்தநல்லூர்	06.05.93 160 cm	B.Tech (IT)	Senior Software Engineer Tech Mahindra	திரு. R. தாமோதரன், 4C, பஞ்சாப் சாலை, வட்டம் 4, நெய்வேலி – 1. Cell : **8903611569** **97156 39379** (Whatsapp) E-mail : chivi.damo@gmail.com
B 11/2 செல்வி **வ. ராஜலஷ்மி** (எ) **உஷா** மூலம் – 2ம் பாதம் குவாவுடை பூர்வீகம் : திருவில்லிப்புத்தூர் விருப்பம் : பட்டம் பயின்று நல்ல பணியில் உள்ள மணமகன்	09.04.96 4' - 10"	B.E (Electrical & Electronics Engineering)	Senior System Developer TEMENOS Nungambakkam, Chennai Rs. 60,000/PM	திரு. தி. வடமலையப்பன், "ஷண்முகப்ரியா", 4–3/29, மூன்றாவது தெரு, ரயிலார் நகர், மதுரை – 625 018. Cell : **96007 49161, 99400 37402** E-mail : vadamalaiappan@gmail.com
B 12/2 செல்வி **S. பவதாரணி** மூலம் 3ம் பாதம் குமாரகுட பூர்வீகம் : அகரஆலம்பாடி விருப்பம் : சமபடிப்பு	07.08.95 5' - 3"	M.Tech Bio Medical .	Software Professional G.E. Health Care Bangalore	திரு. R. சுந்தரராஜன், 129F, கதம்பம் தெரு, பெரியசாமி நகர் விரிவாக்கம், வடக்குத்து, நெய்வேலி TS–607308. Cell : **94869 73075**
B 13/2 செல்வி **M. தனலட்சுமி** உத்திரம் பருவுட பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : சமபடிப்பு	07.05.98 154 cm	B.Tech (CS) .	Software Professional EPSILON Bangalore	திரு. K. மணிகண்டன், G1, Ashok Manor, Ruby Builders, 5/2, Kalamegam Street, East Tambaram, Chennai - 600 059. Cell : **94447 11045, 99416 20355**
B 14/2 செல்வி **S. விக்னயாள்** ரோகிணி காலிங்கராயர் பூர்வீகம் : நந்தீஸ்வரமங்கலம் விருப்பம் : சமபடிப்பு, பணியில் உள்ள வரன்	15.03.97	B.E. (ECE)		திரு. R. சீனிவாசன், நாகரெத்தினம் பிள்ளை காலனி, கோட்டைத் தெரு, இலுப்பூர், புதுக்கோட்டை (DT) – 622 102. Cell : **89258 03034, 99658 98749** **99767 97314**
B 15/2 செல்வி **மு. திவ்யபிரியா** கேட்டை 2ம் பாதம் வஞ்சினமுட பூர்வீகம் : செந்துறை – அரியலூர் (Dt) விருப்பம் : டிகிரி முடித்த நல்ல பணியில் உள்ள வரன்	02.06.96 5' - 4"	B.A. (English)		திரு. ச. முருகேசன் பிள்ளை, 1/53, நடுத் தெரு, வஞ்சினபுரம் (PO), செந்துறை (Tk), அரியலூர் (DT) – 621 714, Cell : **96263 97559** (Whatsapp) **94869 67149, 85319 86109**

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 16/2 செல்வி **K.S. PREETHY** Uthiram Kanagarayan பூர்வீகம் : Pappanayakkanpatti - Madurai Dt.	04.06.98 170 cm	B.E. (Civil)	JDO Highways Department, TN. Govt. Madurai Rs. 6.5 Lakhs/PA	திரு. K. Sivasankarakumar, 25, VOC Street, Muthutevar Colony, Virathipathu, Madurai - 625 016. Cell : **99949 10073, 94431 94609**
B 17/2 செல்வி **Dr. S. சத்திய பிரியா** கேட்டை 3ம் பாதம் களப்பாள பூர்வீகம் : செந்துறை	21.12.95 160 cm	B.D.S.,	Pvt. Clinic, Trichy	திரு. M. சச்சிதாநந்தம், மேலரத வீதி, நெய்வனம் தெற்கு, செந்துறை (PO), அரியலூர் (DT) – **621 714.** Cell : **99948 69441** (W), **94864 81712, 63833 93379**
B 18/2 செல்வி **K. துர்காதேவி** ரேவதி மூன்றாம் பாதம் விஸ்வராய பூர்வீகம் : கார்மாங்குடி	14.05.96 5' - 3"	M.Sc. (Com)		திரு. R. கார்த்திகேயன், எண். 13, யமுனை வீதி, C.N.C. நகர், பூதாமூர், விருத்தாசலம். Cell : **83008 48826, 96987 25644**

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRA, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

CS TEXTILE PROCESS

Office : NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : **www.cstextiles.in**
Email : **chitra@cstextiles.in**
Factory : **KVR Nagar, Mangalam Road (Unit - II)**
Our Buyers : **1. FILA (UK)**
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. TATA ZUDIO (INDIA)

"QUALITY IS OUR LIFE"

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/2 செல்வன் **இரா. மணியாரதி** மகம் தொழுவுட பூர்வீகம் : பெண்ணாடம்	04.03.96 168 cm	B.Sc.	MRF Ltd., Arakonam	திரு. தி. இராஜாமணி, 540, கண்ணப்பா தெரு, நசரத்பேட்டை, பூந்தமல்லி – 600 123. Cell : 89399 91174, 98406 87849
G 2/2 செல்வன் **ப. ஸ்ரீராம்** ஆயில்யம் சாத்தனுட பூர்வீகம் : வயலூர் – குன்னம் பெரம்பலூர் மாவட்டம் விருப்பம் : தகுந்த வரன்	28.10.94 165 cm	B.E.(CSC)	IT Analyst TCS, Chennai Rs. 40,000/PM	திரு. P. இராமச்சந்திரன், 5-A/84C, ரோஸ் நகர், பெரம்பலூர் – 621 212. Cell : 98650 54625, 97505 29615
G 3/2 செல்வன் **S. ராம்நாத்** பூசம் சேதுவராய பூர்வீகம் : நாஞ்சலூர்	17.01.95 172 cm	DAE (Diploma Automobile Engineering)	Service Manager T.V.S. Showroom Chennai Rs. 25,000/PM	திரு. S. சிவக்குமார், 120/149, விநாயகர் கோவில் தெரு, Dr. அம்பேத்கார் நகர், பரங்கிமலை, சென்னை – 600 016. Cell : 92832 75524 78689 37073 (Whatsapp)
G 4/2 செல்வன் **J. மணிகண்டன்** மகம் விளந்துட பூர்வீகம் : கும்பகோணம் விருப்பம் : படித்த நல்ல குணமுள்ள மணமகள்	26.11.94 5' - 5"	B.E (Auto) Safety Course Certificate	Oil & Gas Field Safety Engineer அபுதாபி,UAE Rs. 1Lakh/PM	திரு. K. ஜெயராஜ், 4, வ.உ.சி. தெரு, ஆனந்தபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை – 600 059. Cell : 96001 53397, 99403 80789
G 5/2 செல்வன் **S. நந்தகுமார்** அசுவினி வேளா பூர்வீகம் : கார்மாங்குடி ஸ்ரீ முஷ்ணம் வட்டம்	23.11.96 167 cm	B.E, (Mechanical Engineering)	Software Developer Dedalus, Chennai Rs. 12,00,000/PA	திரு. S. சிவக்குமார், 47/12A, பஜார் தெரு, விருத்தாசலம் – 606 001. கடலூர் மாவட்டம். Cell : 99761 04420
G 6/2 செல்வன் **வே. குருமூர்த்தி** அசுபதி காருட	26.05.95 5' - 8"	I.T.I. டிரேட் வயரிங்	எலக்ட்ரிஷியன், மாருதி ரிவைண்டிங் மார்க்கெட் காம்ப்ளக்ஸ் Rs. 25,000/PM	திரு. இரா. வேல்முருகன், 2/43, வெள்ளாளர் தெரு, விசலூர், சேந்தமங்கலம் (அஞ்சல்) தரங்கம்பாடி (TK), மயிலாடுதுறை – 609 309. Cell : 80121 21190
G 7/2 செல்வன் **R. பாஸ்கரன்** பூராடம் களப்பாள பூர்வீகம் : செந்துறை – அரியலூர் (Dt.)	07.09.92 170 cm	B.E., ECE.,	Sritel System P. Ltd., Rs. 40,000/PM	திரு. A. இராமசாமிபிள்ளை, 1/163, கொடிக்கால் தெரு, R.C. பள்ளி அருகில், சோமரசன்பேட்டை, திருச்சி – 620 102. Cell : 99434 06831
G 8/2 செல்வன் **S. கௌசிக்** அவிட்டம் நன்னுட பூர்வீகம் : சிதம்பரம் விருப்பம் : சமபடிப்புடன், வெளிநாட்டில் வேலை செய்ய விருப்பம் உள்ள வரன்.	21.05.95 172 cm	B.E., M.B.A.,	Project Engineer, Camp - Qatar	திரு. V. SANKAR, 53, வேததாஸ் நகர், விபீஷ்ணபுரம், சிதம்பரம்–608 001. Cell : 94862 23517 (Whatsapp) 70100 41488

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/2 செல்வன் **B. ஆனந்தன்** ஆயில்யம் (1ம் பாதம்) பல்லவராய பூர்வீகம் : திருவாரூர்	29.05.90 176 cm	B.Tech (IT),	ARISTA Networks, Bangalore, Software Development Engineer Rs. 36 Lakhs/PA	திரு. இரா. பாலசுப்ரமணியன், 22, ஸ்ரீ செஞ்சுடையப்பர் நகர், தனலட்சுமி நகர் விரிவாக்கம், ஐந்து தலைப்பு வாய்க்கால், கும்பகோணம் – 612 103. Cell : 97867 79505, 96774 61691
G 10/2 செல்வன் **S. Aswin** பூரம் கூருடையான் பூர்வீகம் : திருமானூர்	28.09.89	Diploma in EEE	Operator, Flex India Pvt. Ltd. Rs. 55,000 / PM	திரு. V. சுப்பிரமணியன், G49, வள்ளலார் தெரு, எம்.எம்.டி.ஏ காலனி, அரும்பாக்கம், சென்னை – 600 106. Cell : 94449 58961, 94449 18961
G 11/2 செல்வன் **இர. வெற்றிச்செல்வன்** பூரம் தென்னவராய பூர்வீகம் : பெ.பொன்னேரி/பெண்ணாடம்	12.04.95 168 cm	B.E. (EEE)	ABPM (Indian Postal Dept. Central Govt.)	திரு. தி. இரவிச்சந்திரன், 6வது குறுக்குத் தெரு, சரோ ரத்தின மகால் அருகில், பெண்ணாடம் & அஞ்சல், திட்டக்குடி வட்டம் – 606 105. Cell : 85085 71741, 94426 56045
G 12/2 செல்வன் **ஆ. கார்த்திகேயன்** மூலம் 3ம் பாதம் களப்பாள	30.10.92	B.E. (Mech)	Project Engineer (UAE) Rs. 1 Lakh / PM	திரு. சபா. ஆறுமுகம், 64, அக்ரஹாரத் தெரு, பெண்ணாடம் – 606 105. திட்டக்குடி, கடலூர் Cell : 98944 88227 / 77081 05999
G 13/2 செல்வன் **க. ஜீவரத்தினம்** திருவோணம் 2ம் பாதம் முள்ளுட பூர்வீகம் : நாட்டார்மங்கலம் – காட்டுமன்னார்குடி விருப்பம் : கோயம்புத்தூர் அல்லது பெங்களூரில் உள்ள பொருத்தமான வரன்.	12.03.91 170 cm	B.E. (ECE)	Senior Software Engineer, Rs. 16 Lakhs / PA	திரு. P. கலியபெருமாள் பிள்ளை, 40, மேயர் சண்முகம் நகர், பரமேஸ்வர நல்லூர், சிதம்பரம் (TK), Cell : 96883 25425 (W) 81441 88405 E-mail : jccvakntm@gmail.com
G 14/2 செல்வன் **R. மணிகண்டன்** உத்திரம் முதனுட வளையமாதேவி விருப்பம் : B.E /B.Tech / MCA/ MS / M.Phil / Ph.D. முடித்த உள்நாடு/ வெளிநாடு வேலையில் உள்ள / இல்லாத வரன்	05.07.84 165 cm	B.Tech M.Sc., Ph.D Atmospherie Science	Reserch Asst. University of Utach (USA) $ 4000 Dollar/PM	திருமதி. T. மணிமேகலை, S1, இராகவேந்திரா அப்பார்மெண்ட்ஸ், சுசிலா அம்மாள் நகர், கனகசபை நகர் விரிவு, சிதம்பரம் – 608 001. Cell : 989412 2436 E-mail : manimegalai53orathur@gmail.com
G 15/2 செல்வன் **M. அரவிந்தன்** அனுஷம் காஞ்சியம் பூர்வீகம் : குணமங்கலம் விருப்பம் : வேலையில் உள்ள வரன்	25.08.93 5' - 7"	B.E., (Mech)	Senior Analyst R.B.S. Chennai Rs. 7.20 Lakhs/PA	திரு. M. Natarajan, F1, M.M. Enclave, No. 40, Subramanian Street, West Mambalam, Chennai – 600 033. Cell : 94439 24190, 98840 55233

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 16/2 செல்வன் **V. யோகேஷ்** ரோகிணி 4ம் பாதம் விளந்திட பூர்வீகம் : மாதானம் விருப்பம் : பணியில் உள்ள / பணிக்கு செல்ல விருப்பம் உள்ள வரன்.	16.07.93 175 cm Rs. 9.5 Lakhs/PA	B.E., (Mechanical)	Vehicle Performance Engineer, Simple Energy Pvt. Ltd., Rs. 6 Lakhs/PA	திரு. R. விஜயகுமார், 66, VSR நகர், 4th Cross, பரமேஸ்வரநல்லூர், சிதம்பரம் – 608 001. Cell : 92452 93736, 95977 70100
G 17/2 செல்வன் **அ. சரண்ராஜ்** பூசம் 3ம் பாதம் தொளாருடைய பூர்வீகம் : நாகமங்கலம் விருப்பம் : நல்ல குணமுள்ள வரன்.	05.09.91	B.E., (Mech)	FIRST Abudhabi Bank, Rs. 17 Lakhs/PA	திரு. S. அன்பரசன்பிள்ளை, 11B, பெரியார் நகர், 2வது தெரு, அரியலூர் – 621 704. Cell : 97500 82213, 97502 79162 98402 83867
G 18/2 செல்வன் **V. விக்னேஷ்வரன்** ரேவதி அத்திமட	14.02.94 167 cm	B.E., (Mech) MBA (Finance)	Quality Control Ashok Leyland, Chennai	திரு. V. வெங்கடேசன், 2/75/1, வெள்ளாளர் தெரு, விளக்குடி, திருத்துறைபூண்டி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் – 614 715. Cell : 94425 32490, 82202 40768
G 19/2 செல்வன் **PRABHAKARAN SATHIYAMURTHY** Pooradam Konguaraya பூர்வீகம் : Maraiyur - Mayiladuthurai	31.05.91	B.E. Mechanical Engineering	TRUMPF Metamation Private Ltd., Siruseri, Chennai Rs. 10 Lakhs/PA	திருமதி Susila Sathiyamurthy, Plot No. 28, Door No. 11/196, Annai Indira Gandhi Street, 1st Cross, Bharathiyar Nagar, Polichalur, Chennai - 74. Cell : 98840 46301, 94433 88044
G 20/2 செல்வன் **M. பிரகாஷ்** பூரம் பழுவுட பூர்வீகம் : C. மேவன்னியூர் விருப்பம் : 4, 7, 8ல் செவ்வாய் இருக்கும் பெண், படித்த குடும்பபாங்கான பெண்	29.08.92 170 cm	B.E. (EEE),	L & T கம்பெனி சவுதீ Rs. 1,20,000/PM	திரு. T. முத்துக்குமரசாமி, 10, தில்லை நகர், திருவள்ளுவர் தெரு, விருத்தாசலம் – 606 001. Cell : 97867 29731

ஜெயஸ்ரீ திருமண தகவல் மையம்

19/2, வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிவுக்கட்டணம் ரூ. 200/– மட்டும் பெறப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவு ஓர் ஆண்டிற்கு பிறகு புதுபிக்க வேண்டும். திருமணம் முடிந்த தகவல் தெரிவிக்க வேண்டும்.

அலுவலக நேரம் : மாலை 4.30 மணி முதல் 7.30 வரை ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சத்தியபால்**

கடித தொடர்புமுகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை – 609 001.

நகர கார்காத்த வேளாளர் சங்கம்
சீர்காழி

பதிவு எண் : 102/2019

20-வது மங்கல சந்திப்பு

அன்புடையீர் வணக்கம்.

சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் **20-வது மங்கல சந்திப்பு நிகழ்ச்சியானது 07-05-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 1.00 மணி வரை** சீர்காழி, விளந்திடசமுத்திரம் **கடைக்கண் விநாயகநல்லூர் எஸ்டேட் திருமண மண்டபத்தில்** (சிதம்பரம் மெயின் ரோடு) தொடங்கி நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். நிகழ்ச்சியில் பங்குபெற விரும்புபவர்கள் பதிவுக்கட்டணம் **ரூ. 500/-**ஐ விவரப்பட்டியலுடன், கீழ்க்கண்ட முகவரிக்கு **26-04-2023**க்குள் அனுப்பிட வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நேரில் வந்தும் பதிவு செய்து கொள்ளலாம். வங்கி D.D. அனுப்ப விரும்பும் பதிவுதாரர்கள் Nagara Karkatha Velalar Sangam என்ற பெயரில் சீர்காழியில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்பவும். நிகழ்ச்சி நல்ல முறையில் நடத்திட எப்பொழுதும் போல் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு நல்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

என்றும் அன்புடன்

கல். சுகுந்தவனநாதன் பிள்ளை, தலைவர் : 9442083310
குண. அமுதன் பிள்ளை, செயலாளர் : 9842232500
சி. அகோரம் பிள்ளை, பொருளாளர் : 9486194225
இராம. முரளி பிள்ளை, நிறுவனர், சி.எம்.டிரஸ்ட் : 9442085841

வங்கி விவரம்	தொடர்பு கொள்ள வேண்டி முகவரி:
தமிழ்நாடு மெர்க்கண்டைல் பாங்க் லிட், சிதம்பரம்.	திரு. **எஸ். பிரகாசம்,** M.Com.,
Name : S. Prakasam	5. ஆர்.எம். காம்ப்ளக்ஸ், ரயில்வே ரோடு,
A/C No. 312100050301165	கொள்ளிடம், சீர்காழி தாலுக்கா.
IFSC : TNBL0000312	செல் : 7395865318

தொடர்புக்கான நேரம் : காலை 10.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை

விண்ணப்ப படிவம்

பெயர் .....

ஆண் / பெண் .....

பிறந்த தேதி .....

உயரம் (செ.மீ) .....

நட்சத்திரம் .....

கோத்திரம் .....

நிறம் .....

கல்வித்தகுதி .....

பணி விபரம் & ஊதியம் .....

தந்தை பெயர் .....

பூர்வீகம் .....

பணி விபரம் .....

தாயார் பெயர் .....

பூர்வீகம் .....

பணிவிபரம் .....

உடன் பிறந்தோர் ஆண் ☐ பெண் ☐

விருப்பம் மற்றும் இதர தகவல்கள் .....

தொடர்பு முகவரி .....

தொலைபேசி .....

உலாபேசி மற்றும் அஞ்சலக குறியீட்டு எண்ணுடன் .....

மின் அஞ்சல் .....

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

நங்கநல்லூர் :

31–12–2022 அன்று மதியம் நங்கநல்லூர் (ம) பழவந்தாங்கல் வட்டார வியாபாரிகள் சங்க திருமண மண்டபத்தில் பொதுக்குழுக் கூட்டமும், 05.30 மணி அளவில் 35–ஆம் ஆண்டு விழாவும் கொண்டாடப்பட்டது. விழாவில் வட்டார கார்குலச் சொந்தங்களும், குழந்தைகளும், சென்னையில் உள்ள இணைப்புச் சங்க பிரதிநிதிகளும் அரங்கம் நிரம்பிய அளவில் கலந்து கொண்டு சிறப்பித்தது நிறைவாக இருந்தது.

பொதுக்குழுக் கூட்டத்தில் தற்போதைய நிர்வாக அமைப்பு தொடர்ந்து செயல்பட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொருளாளர் சமர்ப்பித்த தணிக்கை செய்யப்பட்ட 2021–2022–க்கான அறிக்கையினை பொதுக்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. செயலரது ஆண்டறிக்கையும் வாசிக்கப்பட்டது.

குழந்தைகள், சிறுவர், சிறுமியர், ஆடவர், மகளிர் என அனைத்துப் பிரிவினருக்கும் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு அரங்கமே குதூகலப்பட்டது. இந்த ஆண்டும் குழந்தைகள் அதிக அளவில் கலந்து கொண்டது சிறப்பு நிகழ்வு. குறிப்பாக பரத நாட்டியம் ஆடிய பேபி V. அனுஸ்ரீ, த/பெ. து. விஸ்வநாதன், நங்கநல்லூர் முத்திரை பதித்துச் சென்றார் என்றால் மிகையில்லை.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் சங்கத் தலைவர் திரு. G. சரவணன் அவர்கள் தலைமையில் சதாபிஷேக தம்பதியர்கள் மங்கல விளக்கேற்றிட விழா இனிதே துவங்கியது.

மறைந்த சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர் தம் உறவினர்களின் மறைவுக்கும் மற்றும் தமிழுக்கும் இசைக்கும் நாவாற்றலாலும், இசையாலும் அளப்பரிய தொண்டாற்றி விண்ணுலகம் அடைந்த வில்லிசை வேந்தர் சுப்பு ஆறுமுகம், தமிழ்க்கடல் நெல்லை கண்ணன் மற்றும் மூத்த தமிழறிஞர் ஔவை நடராசனார் ஆகியோரது மறைவுக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநில கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் திரு. M. பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலை வகித்து சிறப்புரை ஆற்றினார்கள். இலக்கியச் செம்மல் பேரா. வன்மிக வெங்கடாசலம் அவர்கள் தனது சிறப்புரையில் கார்காத்தார் பாரம்பரியம், விவசாயத்தின் அதிமுக்கியத்துவம், உணவு வகைகள் மற்றும் மனிதநேயம் T.N. முத்துக்குமாரசாமி, திரு. S. செல்வகுமார் ஆகியோரது சமுதாய அக்கறை குறித்தும் வெகுவாக சிலாகித்து பேசியது வெகு சிறப்பு. நிகழ்ச்சியில் மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் அமைப்புச் செயலாளர் திரு. கைலை சண்முகம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

மனித நேயம் திரு. T.N. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களது தொடர் சமுதாய சேவையினை பாராட்டுமுகமாக அன்னாருக்கு நினைவுப்பரிசு வழங்கி மதிப்பு செய்யப்பட்டது. அவர் தனது ஏற்புரையில் ஒவ்வொருவரும் சமுதாயத்தின்பால் அக்கறை உணர்வையும், சேவை மனப்பான்மையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

சமுதாயத்தின் ஆதரவற்ற ஏழை எளிய மாணவர்களுக்கு உயர்கல்வி வசதியினை ஆனந்தம் அமைப்பின் மூலமாக வழங்கியும் நல்ல சிறந்த மாணவர்களாகவும், மனிதர்களாகவும் அவர்களை உருவாக்கி சேவை ஆற்றுகின்ற திரு. S. செல்வகுமார் அவர்களை பாராட்டுகின்ற வகையில் இந்த நிகழ்ச்சியில் நினைவுப் பரிசு வழங்கி மதிப்பு செய்யப்பட்டது.

திரு. S. செல்வகுமார் தனது ஏற்புரையில், இன்றைய இளைய தலைமுறையினரின் வாழ்வியல் குறித்தும், குடும்ப, உறவுகள் மேம்பாடு குறித்தும் எழுச்சியுரை ஆற்றினார்கள். குறிப்பாக குடும்பத்தினரின் அணுகுமுறை குறித்து குறிப்பிட்டது வெகு சிறப்பு. விழாவின் முத்தாய்ப்பாக இரு நிகழ்வுகள் நடைபெற்றது. ஒன்று நூல் வெளியீடு, மற்றும் சதாபிஷேக தம்பதியினருக்கு மதிப்பு செய்தல்.

கார்காத்தார் ஒப்புரவின் படைப்பாளியும் நமது சங்க மூத்த உறுப்பினருமான அக்ரி. T. இராமலிங்கம் அவர்கள் எழுதிய ''அறிந்ததில் அறியாத அறிவியல்'' (அதாவது வரலாற்று நிகழ்வுகளும் – நம்ப முடியாத உண்மைகளும்) என்ற நூலினை இலக்கிய செம்மல் பேரா. வன்மீக வெங்கடாசலம் அவர்கள் வெளியிட சங்க செயலாளர் கோ. தியாகராஜன் அவர்கள் பெற்றுக்கொள்ள ஒப்புரவு ஆசிரியர் திருமிகு. S. அன்பழகன் அவர்கள் எழுதிய அணிந்துரையினை ஆலோசகர் V. சண்முகசுந்தரம் அவர்கள் வாசித்தார்கள்.

இந்த ஆண்டு சதாபிஷேகம் செய்து கொண்ட நமது வட்டார கார்குல தம்பதியர் அக்ரி. T. இராமலிங்கம் – ராஜலட்சுமி மற்றும் கோ. கல்யாணசுந்தரம் – வசந்தகுமாரி அவர்களுக்கு, ஆயிரம் பிறை கண்ட மூத்த சகோதரர்கள் அண்ணாநகர் சங்க ஆலோசகர் டாக்டர் திரு. K. விவேகானந்தன் மற்றும் ஒப்புரவின் ஆசிரியர் திரு. S. அன்பழகன் அவர்கள் தலைமை வகித்து தம்பதியருக்கு மாலை அணிவித்து நினைவுப் பரிசாக காமாட்சியம்மன் விளக்கு, மரபின் மைந்தன் முத்தையா அவர்கள் எழுதிய ''பராசக்திக்கு ஒரு பாமாலை'' என்ற நூலினையும் வழங்கி சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சியை தனது சொந்த பொறுப்பில் ஏற்பாடு செய்து நடத்தி சங்கத்திற்கு பெருமையும் சிறப்பும் சேர்த்த சங்க தலைவர் G. சரவணன் மற்றும் துணை தலைவர் G. சுவாமிநாதன் குடும்பத்தாருக்கு வாழ்த்துக்கள்.

ஆண்டு விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி பொன்னாடையும் அணிவித்து கௌரவிக்கப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட அனைத்து இணைப்பு சங்கத் தலைவர்களும் கௌரவிக்கப்பட்டது சிறப்பு நிகழ்வு.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், கலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்களுக்கும் சிறப்பு விருந்தினரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

கல்வி உதவித்தொகையினை தொடர்ந்து வழங்கிட நிதி உதவி செய்துவரும் தொண்டுள்ளங்களுக்கும், மாதாந்திர காலண்டருக்கு நிதி அளித்த சங்க ஆலோசகர் திரு. T. இராஜசேகரன் அவர்களுக்கும், அழைப்பிதழ்களுக்கு நன்கொடை அளித்த சங்க இணைச்செயலாளர் திரு. V. கண்ணன் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. விழாவில் கலந்துகொண்ட அனைத்து மகளிருக்கும் திருமதி. நிரஞ்சனா கணேஷ் அவர்களால் நினைவு பரிசு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கிய மகளிரணி தலைவி திருமதி. கலையரசி இராஜசேகரன்அவர்களுக்கு வாழ்த்துக்கள். திருமதி. G. கிருஷ்ணவேணி அவர்களது நன்றி நவிலலுக்குப் பின் இரவு விருந்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

– கோ. தியாகராஜன், செயலாளர்.

9042957792

நங்கநல்லூர் :

செயற்குழு கூட்டம் சங்கத் தலைவர் இல்லத்தில் 22–1–2023 அன்று தலைவரது வரவேற்புரையுடன் துவங்கியது. ஆண்டு விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்களுக்கும் மகளிரணியினருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

ஆண்டு விழா வரவு – செலவு கணக்கு பொருளாளரால் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கல்வி உதவிதொகை, கல்வி ஊக்கத்தொகை, மாதாந்திர காலண்டர், அழைப்பிதழ், மற்றும் சங்க வளர்ச்சிக்கு நிதி உதவி செய்த அன்பு தொண்டுள்ளங்களுக்கும் விழாவுக்கு நன்கொடை வழங்கிய வட்டார கார்குல சொந்தங்களுக்கும் சங்க வளர்ச்சிக்கும் மற்றும் ஆண்டு விழாவுக்கும் பெரிதும் உதவிகரமாக இருந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்ட சங்க இணைச்செயலாளர் திரு. V. கண்ணன் அவர்களுக்கு கூட்டத்தில் நன்றியும் பாராட்டும் தெரிவித்து மதிப்பு செய்யப்பட்டது.

சங்கத்தில் புதிய உறுப்பினராகவும் அதே வேளையில் செயற்குழு உறுப்பினராகவும் தன்னை இணைத்துக் கொண்ட இளையபெருமாநல்லூர் தெய்வத்திரு. புலவர் குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களின் திருமகன் K. கோவிந்தராசுவிற்கு வாழ்த்தும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

மார்ச் மாதத்தில் ஆன்மீக சுற்றுலா செல்வதற்கு முயற்சி மேற்கொள்ள சங்க செயலரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இணைச்செயலாளர் திரு. V. கண்ணன் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

க. சரவணன்,

தலைவர்.

அண்ணாநகர் :

செயற்குழு கூட்டம் 22–1–2023 அன்று கொரட்டூர் சங்க குடியிருப்பில் துணைத்தலைவர் திரு. வி. இராஜேந்திரன் தலைமையிலும் இணைச்செயலர் திரு. எஸ். பாலகுமார் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்திய தலைவர், செயலர் மற்றும் பொறுப்பாளர்களுக்கு பாராட்டும், நூற்றாண்டு விழாவில் இலவச இணைப்பாக திரு. ஏ.ஆர்.பி. ஜெயராமன் எழுதிய "நல்லதோர் உலகம் செய்வோம்" என்ற நூலை புத்தகமாக தன் சொந்த செலவில் அண்ணாநகர் சங்கத்தின் சார்பில் வழங்கி பெருமைபடுத்திய நமது சங்க ஆலோசகர் டாக்டர் திரு. கே. விவேகானந்தன் அவர்களுக்கு நன்றியும், வாழ்த்தும் தலைவர் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்களின் சகோதரி திருமதி. பானுமதி தில்லைவளவன் அவர்களுக்கு 22–1–2023 அன்று சிதம்பரத்தில் எண்பது வயது நிறைவுவிழா நடைபெற்றதற்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்தும் மற்றும் சங்கத்தின் பதிவின் முதல் வருட புதுப்பித்தலை செய்த தலைவருக்கு நன்றியும் வாழ்த்தும் , திருமணத்தகவல் சேவை செய்யும் அண்ணாநகர் திரு. சோமசுந்தரம் அவர்களுக்கு எண்பது வயது நிறைவு ஆனதையொட்டி அவருக்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. இந்த வருட ஆண்டு விழாவை எந்த மாதம் நடத்தலாம் என விவாதிக்கப்பட்டது.

புதியதாக பதவி ஏற்றுள்ள குரோம்பேட்டை சங்கத்தின் தலைவர் திரு. மனோகர் செயலாளர் திரு. தியாகராஜன், பொருளாளர் திரு. வசந்தகுமார் ஆகியோர்க்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. கொரட்டூர் திரு. ஜி. பாலசுப்பிரமணியன், பொருளாளர் அவர்கள் நன்றியுரை ஆற்றியதும் கூட்டம் நிறைவு பெற்றது.

என். ஆனந்தகணபதி, செயலர்.

9094682811

குரோம்பேட்டை :

செயற்குழு கூட்டம் 29–01–2023 அன்று தலைவர் திரு. மனோகர் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. முன்னாள் தலைவர்கள், திரு. அகோரம், திரு. முருகேஷ், சென்னை மண்டல செயலாளர் திரு. பாலமுருகன், முன்னாள் சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களான திரு. முருகன், திரு. ஆறுமுகம், திரு. தீபன், திரு. சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் தாய் வாழ்த்துடன் தொடங்கபட்ட இந்த கூட்டத்தில் தலைவர் திரு. மனோகர் தலைமை உரை வழங்கினார். பொருளாளர் திரு. வசந்தகுமார் சமீபத்திய நிதிநிலை அறிக்கை சமர்பித்தார். செயலாளர் திரு. தியாகராஜன் கடந்த மாத செயல்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டங்களை விவரித்தார்.

சுதந்திர போராட்ட வீரர் தியாகி. சு. நெல்லையப்பர் தனது சொந்த இடத்தில் தொடங்கி நடத்தி வந்த ஆரம்ப பள்ளி வளாகத்தில் தமிழக அரசால் கட்டப்பட்டு வரும் திறன் சார் மையத்திற்கு அவரது பெயரை வைத்து அந்த வளாகத்தில் அவரது மார்பளவு சிலையை நிறுவ அரசுக்கு கோரிக்கை விடுக்கவும்,

மகளிர் அணியில் மேலும் உறுப்பினர்களை சேர்த்தும், இளைஞர் அணியை உருவாக்கியும் சங்கத்தை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளவும்,

பார்வதி மருத்துவமனையுடன் இணைந்து மருத்துவ முகாம் 19.02.2023 அன்று நடத்தவும்,

சங்க உறுப்பினர்கள், இளைஞர் மகளிர் மற்றும் குழந்தைகள் என அனைவர்க்கும் திறன் சார் மற்றும் வேலை செய்யக்கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

– பா. தியாகராஜன், செயலர்.

9944463333

போரூர்

29.01.2023 அன்று செயற்குழு கூட்டம், செயலாளர் திரு. சந்திரமோகன் இல்லத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு. இராமலிங்கம் வரவேற்புரை ஆற்ற சங்கச் செயலாளர் திரு. சந்திரமோகன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்க, சங்க பொருளாளர் திரு. பரமசிவம் அவர்கள் வரவு செலவு அறிக்கை சமர்பிக்க, சங்க முன்னேற்றத்தை பற்றி செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் அவர்களின் கருத்தை பரிமாற, சென்னை கார்காத்தார் சங்கதின் நூற்றாண்டு விழாவில் சிறப்பாக செயல்பட்ட போரூர் சங்க செயற்குழு உறுப்பினர்கள் திரு. இராஜரெத்தினம், திரு. ரெங்கசாமி, திரு. அறிவொளி அவர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது மற்றும் திரு. ரெத்தினசபாபதி, திரு. ராஜா ராமலிங்கம், திரு. கண்ணன் அவர்களுக்கும் சங்கம் பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டது. திரு. ரெங்கசாமி நன்றியுரை கூறியதுடன், இனியமாலை விருந்தளித்த திரு. சந்திரமோகன் குடும்பத்தாருக்கும் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

S. சந்திரமோகன், செயலாளர்

பெருங்களத்தூர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 22–01–2023 அன்று சிவாலிஹாலில் தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் அனைவரும் இணைந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாட நடைபெற்றது. தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்று நமது சங்கத்தின் நான்காவது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றதற்கும் சென்னை சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் நமது சங்கத்தின் சார்பில் 40 குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கும் நன்றி தெரிவித்தார்கள். அனைவரும் சுய அறிமுகம் செய்து கொண்ட பின்னர் செயலாளர் திரு. G. ராஜகோபாலன் அவர்கள் நமது சங்க பொதுக்குழு மற்றும் நான்காம் ஆண்டு விழா பற்றிய அறிக்கையினை படித்து பதிவு செய்யப்பட்டது. பொருளாளர் திருமதி. R. சாந்தி அவர்கள் 31–12–2022 வரையிலான நிதிநிலை அறிக்கையை படிக்க ஏற்றுக் கொள்ளப்பட்டது. சங்க சேமிப்பு நிதியிலிருந்து ரூ. 10000/– ஐ வைப்பு நிதியாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. துணைத்தலைவர் திரு. S. சீனிவாசன் அவர்கள் சென்னை சங்கத்தின் நூற்றாண்டு விழா சிறப்பாக அமைந்ததற்கு அமைப்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டி கடிதம் எழுதும்படி கேட்டுக்கொள்ள ஏற்றுக்கொள்ளப்பட்டது. இணைச்செயலாளர் திரு. V. பாலசுப்ரமணியன் அவர்கள் "அன்னை ஸ்டோர்ஸ்" என்ற மளிகை கடையை 23–01–2023 அன்று ஆலம்பாக்கம் பெருங்களத்தூரில் ஆரம்பிப்பதாகவும் அதற்கு ஆதரவு அளிக்கக் கேட்டுக் கொண்டார்கள். சங்க ஆலோசகர் திரு. C. குழந்தை வேல் அவர்கள் கலந்து கொண்டு சங்கம் மென்மேலும் வளர்ச்சியடைய அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். சங்க ஆண்டு விழாவில் ஆயிரம்பிறைக்கண்ட / 70 வயது பூர்த்தியடைந்த கௌரவிக்க விடுபட்ட பெரியவர்களை சங்க நிர்வாகிகள் / செயற்குழு உறுப்பினர்கள் நேரில் சென்று கௌரவிக்க முடிவு செய்யப்பட்டது. துணைத்தலைவர் திரு. S. சீனிவாசன் அவர்கள் நன்றி நவில அனைவரும் இணைந்து தேசிய கீதம் பாட கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கோ. ராஜகோபாலன்,
செயலாளர்.

குமராட்சி ஒன்றியம்

செயற்குழு கூட்டம் 1–1–2023 அன்று 49 லால்கான் தெரு சிதம்பரத்தில் நடந்தது. ஒன்றிய தலைவர் திரு. G. சிவராமன் பிள்ளை தலைமை ஏற்க, ஒன்றிய பொருளாளர் திருமதி. R. திலகம் வரவேற்றார். ஒன்றிய செயலர் திரு. R. முத்துக்குமரன் வரவு–செலவு வாசித்து ஒப்புதல் பெற்றார்.

தலைவர் தனது உரையில் ரூ. 45 இலட்சம் மதிப்புடைய நமது சங்க கட்டிடத்தினை பதிவு செய்தது குறித்தும், அதனை நமது பயன்பாட்டிற்கு ஏற்றவகையில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியத்தையும் கூறினார். பின்னர் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நமது இயக்கத்தின் முன்னோடியும், வட்டாசியர் பணிநிறைவு பெற்ற மதுராந்தநல்லூர் D. சிவபாலன் பிள்ளை மற்றும் சிதம்பரம் கஸ்தூரிபாய் கம்பெனியின் உரிமையாளரும், குமராட்சி ஒன்றிய சங்கம் தொடங்க காரணமானவருமான மணி பிள்ளை (எ) N.P. விவேகானந்தம் பிள்ளை அவர்களுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மேலும் 2023 ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணம் மற்றும் புரவலர் நிதி வழங்கிட அனைவரையும் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த ஆண்டு CREW அறக்கட்டளையின் உதவிதொகை கிடைத்திட நம்மின சொந்தங்களுக்கு மனு வழங்கி உதவி செய்த திரு. S. ராஜகுமார் பிள்ளை அவர்களுக்கும், ஆதிரை அறக்கட்டளையின் வரவு–செலவுகளை, கட்டணமின்றி ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய ஆடிட்டர் திரு. தியாகராஜன் பிள்ளை அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

சங்க கட்டிடத்தினை சீர் அமைக்க ரூ. 10 இலட்சம் திரட்டிட அனைவரையும் சந்திப்பதெனவும், அக்கட்டிடத்தினை சீர் செய்ய, ஒன்றிய பிரிதிநிதி திரு. S. ராமச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் ஒன்பது நபர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

இட ஒதுக்கீட்டில் பயன் அடையாத, முற்பட்ட சமூகத்தை சேர்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழைகளுக்கு மத்திய அரசு வழங்கி வருகின்ற 10% இட ஒதுக்கீட்டை மாநில அரசு உடன் வழங்குவதோடு அல்லாமல் உச்ச நீதி மன்றத்தில் கொடுத்துள்ள சீர் ஆய்வு மனுவினை திரும்பப் பெற வேண்டுமென தமிழக முதல்வர் அவர்களை வேண்டி கேட்டுகொள்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தின் நிறைவாக ஒன்றிய பிரதிநிதி திரு. S. ராமச்சந்திரன் பிள்ளை நன்றி கூற, நாட்டு வாழ்த்துடன் கூட்டம் முடிவுற்றது.

R. முத்துக்குமரன் பிள்ளை,
செயலர்.

சீர்காழி :

சங்க செயற்குழு கூட்டம் 6–1–2023 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. மு. சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இரண்டு புதிய உறுப்பினர்கள் சேர்வதற்கு அனுமதி பெறப்பட்டது. மேலும் மே மாதம் 7–ம் தேதி மங்கல சந்திப்பு மற்றும் ஆண்டு விழா (2023) நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. 8–1–2023 நடக்கும் சென்னை கார்காத்த சங்க நூற்றாண்டு விழாவிற்கு நமது சங்கத்தின் சார்பாக கலந்து கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. 2023 ஆண்டிற்கான நாட்காட்டி அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது. பொருளாளர் திரு. C. அகோரம் பிள்ளை அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- K. சுகுந்தவனநாதன்,
தலைவர்.

மயிலாடுதுறை மகளிர் அணி :

நகர கார்காத்தார் சங்கம் குடியரசு தின விழாவை சிறப்பாக கொண்டாடினர். மகளிரணி தலைவி திருமதி. பில்டெக் அருள்மொழி தேசிய கொடியினை ஏற்றி வாழ்த்துரை வழங்கினார். அனைவரும் வீர வணக்கம் செய்தனர். திருமதி. சசிகலா, திருமதி. இந்துமதி, திருமதி. விஜயலட்சுமி தாயின் மணிக்கொடி பாடினர். நகர சங்கத் தலைவர் திரு. அன்பழகன், திரு. சொக்கலிங்கம், திருமதி. கோமதி, திருமதி. தமிழ்ச்செல்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமதி. ராஜேஸ்வரி திருமதி. வளர்மதி இனிப்பு. தேநீர் வழங்கினர். திரு. சுவாமிநாதன் திரு. அருண்குமார் குலக்கல் பரிசு நிகழ்ச்சியை நடத்தினர். திரு. ராமநாதன் அவர்கள் குழந்தை தேர்வு செய்தான். டாக்டர் திரு. சிவக்குமார் அவர்கள் பரிசினை வழங்கிட குடியரசு தினம் குதூகலமாக கொண்டாடப்பட்டது. அனைவரும் இணைந்து தேசப்பற்றினையும், வரலாற்று நினைவுகளையும் நினைவு கூர்ந்தனர். பின்னர் தேசிய கீதம் இசைத்து நிகழ்ச்சியை நிறைவு செய்தனர்.

– பில்டெக் அருள்மொழி தலைவி.
8883468333

செம்பொன்னார் கோவில் :

சங்ககூட்டம்06–01–2023அன்றுதிருவள்ளுவர் வீதியில் வசித்துவரும் தி.க. அசோக்குமார், திரு. க. ராஜா சகோதரர்கள் இல்லத்தில் நடைபெற்றது. இறைவணக்கம் திருமதி. க. விருத்தாம்பாள் ஆச்சி மற்றும் S. பிரியதர்ஷன் ஆகியோர் பாடிடவும் வரவேற்புரை க. அசோக்குமார் ஆற்றிடவும், சென்ற மாத கூட்ட அறிக்கையை மு. மண்டலசெயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் அவர்கள் வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. சிறப்பு தலைவர் உரையில் 10% இட ஒதுக்கீடு சம்பந்தமாக மேல் முறையீடு மாநில சங்கம் செய்திட வேண்டும் என்று கூறினார்கள். சங்க மூத்த உறுப்பினர் முன்னாள் மாநில து.தலைவர் கணபதி. நடனம் அவர்கள் ஜன 23 முதல் உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் அவர்களது இல்லத்தில் கூட்டம் நடத்திட அவர்களே முன் வந்து இசைவு அளித்திட வேண்டும் என்று கூறினார்கள். சங்க மகளிரணி உறுப்பினர் திருமதி. ஆசிரியை மா. துர்க்கா பிரியா w/o சந்தோஷ் செம்பனார் கோவில் நபாக் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக செயல்படும் அவரது திறமையை பாராட்டி செம்பனார் கோவில் ''லயன்ஸ் சங்கம்'' மூலம் ''ஆசிரியர் பேரொளி'' விருது 13.9.22 அன்று வழங்கப்பட்டது பற்றி உறுப்பினர்கள் பாராட்டி அவர்களை பேசினார்கள். கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது. சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழாவில் சங்கம் சார்பாக கணபதி. நடனம் பிள்ளை, ச. ஆனந்தன், க. ராஜா கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்ததற்கு ஆதரவு அளிக்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக சங்கத்திற்கு ரூ. 2000 /– கல்வி நிதி வழங்கப்பட்டதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியன் குணமடைய கூட்டு பிரார்த்தனை செய்யப்பட்டது. நன்றியுரை திரு. M.C. செல்வராஜ் அவர்கள் கூறிட இரவு 9.00 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன்
செயலாளர்

பரசலூர் :

01–01–2023–ம் அன்று புத்தாண்டு முதல் கூட்டம் மருத்துவமனை சாலை செந்தமிழ்ச்செல்வி, இராமலிங்கம் பிள்ளை இல்லத்தில் தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் திருமதி. செந்தமிழ்ச்செல்வி இறைவணக்கம் பாட திரு. ராமலிங்கம் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

செயலர் திரு. வீ. கண்ணன், சென்ற மாத கூட்ட அறிக்கையையும், பொருளர் திரு. S.M. விஜய் நிதிய அறிக்கையையும் தலைவர் க. கோவிந்தராஜன்

மு.அ. நிதிய அறிக்கையையும், ஆண்டு விழா வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு கூட்டத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

மாதாந்திர கூட்டத்தில் உறுப்பினர்களின் வருகை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். எங்களுடைய மகன் திருமணத்திற்கு வருகை தந்து வாழ்த்திய பொறுப்பாளர்கள், சங்க உறுப்பினர்களுக்கு இல்லத்தார் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

பரிசு குலுக்கலில் ஆண்களுக்கான பரிசை சு. பிரவீனும், பெண்களுக்கான பரிசை தங்கம் பாலகிருஷ்ணனும் பெற்றனர். விழாவில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் இல்லத்தார் சார்பில் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சங்கத்தின் சார்பில் பொன்னாடை அணிவிக்கப்பட்டது. நன்றியுரையை திரு. A. ஜெயக்குமார் பிள்ளை கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- V. கண்ணன்,
செயலர்.
Cell : 9894960438

ஆக்கூர் :

சங்க கூட்டம் 1–1–2023 அன்று ஆக்கூர், சிவன் கோவிலில் கௌரவத்தலைவர் டாக்டர் மு. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. திரு. S. சுரேஷ்மணி பிள்ளை இறைவணக்கம் பாடினார்கள்.

திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை கௌரவத்தலைவர் டாக்டர். K. பாலகிருஷ்ணன் பிள்ளை சங்கத்தலைவர், ஞான. செல்வக்குமார் பிள்ளை ஆகியோர் உரையாற்றினார்கள். மூத்த உறுப்பினர் N. ராஜரெத்தினம் பிள்ளை அவர்கள் நமது குல ஒற்றுமை குறித்தும், சங்க வளர்ச்சி குறித்தும் கருத்து தெரிவித்தார்கள்.

செயலர் திரு. R. கோவிந்தராஜ் பிள்ளை அவர்களால் சென்றக்கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. பொருளர் திரு. M. சுந்தரேசன் பிள்ளை அவர்களால் நிதிநிலை அறிக்கை வாசிக்கப்பட்டது.

தீர்மானங்கள் :–

ஆக்கூர், சிவன்கோவில் மற்றும் பெருமாள் கோவில் பாலாலய நிகழ்வுகளுக்கு உறுதுணையாக இருந்து ஆலோசனை வழங்கிய திரு. Dr. K. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், நமது கார்குல உபய திருவிழாவான ஆருத்ரா தரிசன விழாவினை சிறப்பாக ஏற்று நடத்தவும்,

அரசியல் சட்டம் 103–வது திருத்தத்தின்படி நமது இனத்திற்கு 10% இட ஒதுக்கீடு வழங்கிய மாண்புமிகு பாரத பிரதமர் திரு. மோடி அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்

உச்ச நீதி மன்ற தீர்ப்பிற்கு எதிராக சீராய்வு மனு தாக்கல் செய்யக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. திரு. A. பாலன் பிள்ளை அவர்களின் நன்றியுரைக்குப்பின் அடுத்தக் கூட்ட அறிவிப்புடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– G. செல்வக்குமார், தலைவர்.
9942480320

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு கார்காத்தார் சங்க மாதாந்திர கூட்டம் 05–01–2023 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் தொடங்கியது.

சங்க உறுப்பினர்களை வரவேற்று பேசிய தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள், நம் சங்கம் சார்பாக பரிந்துரை செய்யப்பட்ட M.S. கிஷோர் B.Tech I.T., S/o மணிமாறன் அவர்களுக்கு ரூ. 25000/– கல்வி உதவித்தொகையாக வழங்கிய Crew Trust சென்னைக்கு சங்கம் சார்பாக நன்றியை பதிவு செய்தார்.

2023–க்கு தினசரி காலண்டர் பெற்ற சங்க உறுப்பினர்கள் மகிழ்ச்சி தெரிவித்து கொண்டதோடு, அனைவருக்கும் தலைவர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

- B. இலட்சுமணன், தலைவர்.
9443783743

80 இராதா நல்லூர் :-

சங்க கூட்டம் 15–1–2023 அன்று தலைவர் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில் இலையமுது கூடம் சங்க தலைவர் A. நடனம் முன்னிலை வகிக்க செயற்குழு உறுப்பினர் RMA பாபு (எ) சண்முகநாதன் அவர்கள் வரவேற்க

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 2023–ம் ஆண்டிற்கான மாதாந்திர நாட்காட்டியினை அச்சிட முழுபொறுப்பேற்று அச்சிட்டு சங்கத்திற்கு எடுத்து வந்த செயற்குழு உறுப்பினர் G. மணிகண்டன் அவர்களுக்கும் நல்ல முறையில் அச்சிட்டு வழங்கிய அமைப்பு செயலர் RMA செல்வம் அவர்களுக்கும் நாட்காட்டிக்கு விளம்பரம் அளித்து நன்கொடை வழங்கிய விளம்பரதாரர்கள் அனைவருக்கும் 30.12.2022 அன்று நாட்காட்டியினை உறுப்பினர்களுக்கு துணைத்தலைவர் G. இராஜநாயகம் அவர்கள் பொறுப்பேற்று வழங்கியமைக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

சோம கிருது வருஷ பஞ்சாங்கம் வாங்கி உறுப்பினர்களுக்கு வழங்கலாமென உறுப்பினர்களின் கருத்தினை ஏற்று, வழங்க முடிவு செய்யப்பட்டது.

இராதாநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோயில் 5–ம் ஆண்டு ஜென்ம நட்சத்திரம் 20–1–2023 வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள விழாவிற்கு அனைவரும் கலந்து கொண்டு அம்மனின் அருள் பெற கேட்டுக்கொள்ளப்பட்டது.

இன்றைய கூட்டத்தில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் புதிய பொறுப்பாளர்களாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர் : T. முத்துக்குமரசாமி

துணைத்தலைவர் : G. இராஜநாயகம்

செயலர் : RMA செல்வம் (எ) இராஜா முத்தையா

இணைச்செயலர் : G. சந்தோஷ்குமார்

பொருளாளர் : M. சீனிவாசன்

ஆலோசகர் : ARS. செந்தில் (எ) இரத்தினவேல் சுப்ரமணியன்

செயற்குழு உறுப்பினர் G. மணிகண்டன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– தி. முத்துக்குமரசாமி,
தலைலர்.

மணிக்கிராமம் :

சங்க கூட்டம் 04–01–2023–அன்று சிவன் கோவிலில் தலைவர் திரு. M. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. செயலர் திரு. G. அன்பழகன் கடவுள் வாழ்த்தும் சிவபுராணமும் சென்ற மாத அறிக்கையும் வாசித்தார். வரவு, செலவு கணக்குகளை பொருளர் திரு. T. கபிலன் படிக்க சங்கம் அப்படியே ஏற்றுக்கொண்டது. சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழாவில் சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது. உறுப்பினர்களுக்கு 2023–ஆம் ஆண்டு சங்க காலண்டர் வழங்கப்பட்டது. ஜனவரிக்குள் உறுப்பினர்களிடம் சந்தாதொகை வசூல் செய்ய தீர்மானிக்கப்பட்டது. தலைவர் திரு. M.M.S. அவர்கள் இரவு விருந்து அளித்தார்கள். திரு. S. தர்மராஜன் நன்றி கூற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன்,
செயலர்.

திருச்சிற்றம்பலம் :

சங்க கூட்டம் 01–01–2023 அன்று ஸ்ரீ சௌந்தரநாயகி உடனாய ஸ்ரீ நடனபுரீஸ்வரர் ஆலயத்தில் திருமுறைகளுடன் கூடிய பஞ்சபுராணம் பாடப்பெற்று கூட்டம் இனிதே தொடங்கியது. கூட்டத்தில் நமது சிவன் கோயிலின் கும்பாபிஷேக திருப்பணி அறநிலையதுறையின் மூலம் கோயிலை பழுது பார்ப்பதற்கும், இதன் பணிகளுக்கு இந்து அறநிலையத்துறை பொறியாளர்கள் ஆய்வு செய்து உத்தேச மதிப்பீடு வழங்கிய நிலையில் புதியதாக கோயில் முன் முகப்பில் ரிஷபானருடன் கூடிய கைலாய சுதை சிற்பம் அமைப்பதற்கும், நவகிரக சிலையில் பின்னமானதை எடுத்துவிட்டு புது சிலை வைப்பதற்கும், விரைவில் பாலாஸ்தாபன பணி தொடங்குவதற்கும் அறநிலையத்துறையிடம் 02–01–2023 திங்கள் அன்று கடிதம் கொடுப்பது என்றும் விரைவில் கும்பாபிஷேக திருப்பணி நடத்திட கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிதே நிறைவேறியது.

– சபா. கார்த்திகேயன்,
செயலாளர்.

இளந்தோப்பு :

7–1–2023 அன்று சங்க கூட்டம் செயலர் V. ராஜசேகரன் அவர்கள் வரவேற்புரை கூற தலைவர். S.S. ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. சென்னை கார்காத்த சங்க நூற்றாண்டு விழாவிற்கு இளந்தோப்பு சங்கத்தின் சார்பாக 15 உறுப்பினர்கள் சென்றுவர முடிவெடுக்கப்பட்டது. அது போல் சங்க செயலர், துணைத்தலைவர், இணைசெயலர்

ஆகியோர் முன்னிலையில் 15 உறுப்பினர்கள் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டனர். சென்னை கார்காத்தார் சங்க கூட்டத்தில் மாநிலத் தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள் முன்னிலையில் மயிலாடுதுறை மண்டலச் செயலாளர் S. சீனுவாசன் மற்றும் இளந்தோப்பு சங்க பொறுப்பாளர்களுக்கு சென்னை கார்காத்தார் சங்கத்தின் சார்பாக சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. பொருளாளர் R. ஞானசேகரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– வெ. இராஜசேகரன்,
செயலாளர்

குத்தாலம் :

சங்கத்தின் மகளிர் அணி சார்பில் 08–01–2023 அன்று குத்தாலம் சோழிங்வரர் அம்பாள் சன்னதி அருகில் மகளிர் அணியினர் கார்குல கூட்டுப்பொங்கல் வைத்து, கூட்டு பிரார்த்தனை செய்து வழிபாடு நடத்தப்பட்டது. இவ்விழா தாயகம் குழுமம் சித்ரா முத்துக்குமார் அவர்கள் தலைமை வகித்தார். இவ்விழாவில் மகளிர் அணி தலைவி T. பர்வதம், செயலர் G. வேம்பு, இணை செயலாளர் V. ஜோதிமணி, R. சிவகாமசுந்தரி மற்றும் மகளிர் அணியினரும், கார்குல சங்க தலைவர் R. சுவாமிநாதன், செயலாளர் M. கண்ணன், பொருளாளர் M.R. பலராமன் மற்றும் அனைத்து பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். மதியம் உணவுடன் விழா இனிதே நடைபெற்றது.

22–01–2023 மாலை 4.25 மணிக்கு குத்தாலம் M.R.S. இல்லம் இராமச்சந்திரன் நினைவரங்கில் துணை செயலாளர் G. கணபதி தலைமையில் 2023–ம் ஆண்டு முதல் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2022–ம் ஆண்டு வரவு செலவு சரிபார்க்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

- R. சுவாமிநாதன், தலைவர்.
9443651203

கும்பகோணம் :

சங்கத்தின் 6–ம் ஆண்டு பொங்கல் விழா மற்றும் குடந்தை சங்க தலைவர் முன்னாள் மாநில சங்க பொருளாளரும் T.M. வைத்தியநாதன் அவர்களின் 50 ஆண்டுகளுக்கு மேலான சட்ட பணியையும் பாராட்டி, குடந்தை அருகே உள்ள பரட்டை கிராமத்தில் 31.12.2022 அன்று ஸ்ரீராம் இல்லத்தில் திறந்தவெளி அரங்கில் குடந்தை சங்க துணைத் தலைவர் M. பாலகுரு அவர்கள் தலைமையிலும் ஆலோசகர் G. சடகோபன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

விழாவில் S. உதயகுமார் வரவேற்புரை நல்கினார்கள். கார்காத்தார் வேளாளர் கூட்டமைப்பு பொருளாளர் G. ராமநாதன் மற்றும் V. இரத்தினசபாபதி (மு.கூ. மாவட்ட தலைவர்) R. விஸ்வேஸ்வரன் (Advocate) dt Governor, Rotary Dt, International 2981) K. ராஜராஜன் அட்வகேட் தவைலர் குடந்தை சைவ வேளாளர் சங்கம், V. ரகுநாதன் (SML ISUZE DEALER) ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். மகளிர் குழுவினர் குறிப்பிட்ட நேரத்தில் பொங்கல் பானையை பொங்கலிட்டு வழிபாடு செய்தார்கள். விழா முடிவில் மாநில துணைத் தலைவரும், குடந்தை சங்க செயலாளர் S. விஜயகுமார் அவர்கள் நன்றி கூற, விழா விருந்து உபசரிப்புடன் இனிதே நடந்தது. 16.01.2023 அன்று G.சடகோபன் உபயதாரர்கள் அழைப்பை ஏற்றுவரதராஜ பெருமாள் கோயிலில் மாலை மாட்டுப்பொங்கல் நிகழ்ச்சியிலும் குடந்தை கார்குல மக்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

– S. விஜயகுமார்,
செயலாளர்.

நெடுங்காடு :

மாத கூட்டம் 1–1–2023 அன்று நெடுங்குளம் திரு. கே. வெங்கடேசம் பிள்ளை அவர்கள் இல்லத்தில் திரு. கே.எஸ். கணபதிசுப்பிரமணியன் பொருளாளர் அவர்கள் இறைவணக்கத்துடன் கூட்டம் தொடங்கியது.

மாநில செயற்குழுவில் நடைபெற்ற விவாதங்களை செயலர் திரு. G. முத்துகுமரசாமி உறுப்பினர்களிடையே விளக்கி கூறினார். புதுசேரி தனி யூனியன் பிரதேசம் என்பதை கருத்தில் கொண்டு புதுச்சேரி காரைக்கால் சங்கங்கள் இணைந்து புதுச்சேரி பகுதியை சேர்ந்த ஒருவரை மாநில துணை தலைவர் பொறுப்பிற்கு பரிந்துரை செய்வது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜனவரி 8–ம் தேதி நடைபெறும் சென்னை கார்காத்தார் சங்கத்தின் 100–ஆம் ஆண்டு விழாவில் நமது சங்க உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் கலந்து

கொள்வது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பரிசு குலுக்கல் திரு. பாலசுந்தரம், திரு. முத்துகுமரன், திரு. பரமேஸ்வரன் அவர்கள் பரிசு பெற்றனர்.

கூட்டத்தை இனிதே நடத்தி கொடுத்த இல்ல தலைவர் திரு. கே. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கும் சிற்றுண்டி வழங்கிய அவர்களது குடும்பத்தாருக்கும் சால்வை அணிவித்து நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் திரு. கே. வெங்கடேசம் பிள்ளை அவர்கள் சங்க பொறுப்பாளர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தார்கள்.

- G. செல்வகுமார்,
செயலர்.

மதுரை

மாவட்ட சங்க செயற்குழு கூட்டம் 22–01–23 அன்று நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர் திரு. ராஜேந்திரன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். கடந்த மாதங்களில் இறைவனடி சேர்ந்த குருசாமி தேசிகர் (ஒதுவார் மீனாட்சி அம்மன் கோவில்) மற்றும் நமது கார்குல சொந்தங்கள் திரு. S. பாலசுப்பிரமணியம் (செயற்குழு உறுப்பினர்), திரு. சுந்தரராஜன், திரு. சுரேஷ், திருமதி. லெட்சுமி அம்மாள், செல்வி. தேவிகா, திரு. விருதுநகர் பாண்டி (ஒசூர்) ஆகியோருக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தலைவர் தமது உரையில் மாநிலத் தலைவர் திரு. K.K.R. சுரேஷ் வேண்டுகோளின்படி அனைத்து வேளாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மதுரை ஆதினம் அவர்களை சந்தித்தது பற்றியும், சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழாவில் 8–1–23 அன்று கலந்து கொண்டது பற்றியும் அவ்விழாவின் போது மாநில துணைத்தலைவர் திரு. இரா. மாரியப்ப பிள்ளை நமது சங்க புதிய நிர்வாகிகளை மாநில நிர்வாகிகளிடமும் CREW அறக்கட்டளை நிறுவனர் திரு. வெங்கடேசன் பிள்ளையிடமும் அறிமுகம் செய்தது பற்றியும் பேசினார்.

ஆண்டு விழா மற்றும் மங்கல சந்திப்பு நடத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. உறுப்பினர் கையேடு 2 மாதங்களில் தயார் செய்வது பற்றியும் முடிவு எடுக்கப்பட்டது. செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- C.M. சொக்கலிங்கம்,
செயலாளர்.

அரியலூர்

சங்கத்தின் ஆண்டு விழா 29.01.2023 ஞாயிறு அன்று G.R. திருமண மண்டபத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது.

தலைவர் கு. பாலகிருஷ்ணன் தலைமை ஏற்று, கௌரவ தலைவர் க. குலோத்துங்கள் வரவேற்புரையுடன் M. பாலசுப்ரமணியன் மாநில கார்காத்தார் வேளாளர் சங்க கூட்டமைப்பின் செயலாளர், கோ.இராமநாதன் மாநில சங்க பொருளாளர், R. ரவீஸ்வரன் துணைத் தலைவர் முன்னிலையுடன் செயலாளர் த. செந்தில்குமார் ஆண்டறிக்கையும், பொருளாளர் வெ. சிவசங்கர் வரவு–செலவு அறிக்கையும் சமர்ப்பித்தனர். மாநில அமைப்பு செயலாளர் கைலை. சண்முகம் அவர்கள், குழந்தை நல மருத்துவர் Dr. பா. கௌதம்பாரதி அவர்களை, டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையினரால் ஆராய்ச்சி கட்டுரையில் சிறப்பிடம் பெற்றதற்காக மாநில சங்கம் சார்பில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். பயிற்சி மருத்துவராக தேர்வு செய்யப்பட்ட Dr. வீ. ஜீவா, மருத்துவ முதுகலை படிப்பில் சேர தேர்வு செய்யப்பட்டுள்ள Dr. V.S. பர்த்தீஸ்வரர், Dr. V.S. பிரகதீஸ்வரர், R.K. அபிராமி, நீட் தேர்வில் தேர்வு செய்யப்பட்டுள்ள சா. தீபன், கா. ரோஹித் மற்றும் +2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுள்ள R. ரேவதி, ச. காவ்யா ஆகியோருக்கு ஷீல்டு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, நடனம்–நாட்டியம் போட்டிகள் மற்றும் திருக்குறள், திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருமதி. J.மலர்விழி, சா.முத்துகுமாரசாமி, தங்க.ரத்தினசபாபதி, சா. அம்பலவாணன், தி. வீரபாண்டியன் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டார்கள். சிரிப்பும்–சிந்தனையும் தலைப்பில் முனைவர். தங்க. பசுபதி அவர்கள் சிறப்பு சொற்பொழிவாற்றினார்கள். மண்டல செயலாளர்கள் மு. செந்தில்நாதன், அ. சிவக்குமார் மற்றும் திருச்சி, விளாங்குடி, நாகமங்கலம், விக்கிரமங்கலம் சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மதிய உணவுடன் விழா இனிதே முடிவுற்றது.

T. செந்தில்குமார், செயலாளர்

9629481601

வாழ்க மணமக்கள்

சென்னை மடிப்பாக்கம் (திருமாந்துறை) தெய்வத்திருவாளர்கள் S. சண்முகம் பிள்ளை – தையல் நாயகி அவர்களின் மகன்வழிப் பெயர்த்தியும் சென்னை, சிட்லப்பாக்கம் (தலைஞாயிறு) நலமுடன் T.S. தியாகராஜன் பிள்ளை – T. சுப்புலட்சுமி அவர்களின் மகள் வழிப் பெயர்த்தியும் எங்கள் குமாரத்தியுமான செல்வி **B. அனிதா**வுக்கும் USA திரு. விஸ்வா – திருமதி Murti Marocha அவர்களின் குமாரன் செல்வன் **விஷாலு**க்கும் USAல் நடைபெற்ற திருமணத்தை தொடர்ந்து, சென்னை தியாகராயநகர் தி ரெசிடன்ஸி டவர் "டவுன் ஹாலில்" 19.11.2022 அன்று நடைபெற்ற திருமண வரவேற்பில் கலந்து கொண்டு வாழ்த்திய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

B. மணிகண்டன்

க. அன்னபூரணி

குட்டீஸ் **தாரா, மித்ரா**

டொரண்டோ

கனடா

S. பாலசுப்ரமணியன்

முதன்மை மேலாளர் (ஓய்வு)

யூனியன் பேங்க் ஆப் இந்தியா

(e-ஆந்திராவங்கி) அண்ணா நகர்

சென்னை

B. ஹேமா பாலசுப்ரமணியன்,

பட்டதாரி ஆசிரியை (ஓய்வு)

NKT தேசிய பெண்கள் மேனிலைப் பள்ளி

திருவல்லிக்கேணி, சென்னை

மணமகள் தேவை

பெயர் செல்வன் **குகன்**
படிப்பு B.E., M.S., (USA)
வேலை Clock Works Analytics, Boston, USA

பிறந்த தேதி 26.12.1990
உயரம் 5' - 9"
நட்சத்திரம் ரேவதி
கோத்திரம் கனகராய
தகப்பனார் **த. வேல்முருகன்,** B.Sc., B.L.,
தாயார் **வே. விமலா,** B.Sc., B.Ed.,
முகவரி 1A/1, சக்தி நகர்,
அஜீஸ் நகர் முதல் தெரு,
கோடம்பாக்கம்
சென்னை – 600 024.
Cell : 94424 24787 (W)
94420 62275
விருப்பம் வெளிநாட்டில் பணிபுரிய விருப்பமுள்ள வரன்

பெயர் செல்வன் **N. ஆனந்தராஜ்**
படிப்பு B.E., (Computer Science)
வேலை Senior Software Developer
FIS (Chennai) Global Business Solutions, Ambathur
Rs. 14 Lakhs/PA

பிறந்த தேதி 29.12.1989
உயரம் 5' - 3"
நட்சத்திரம் உத்திராடம்
கோத்திரம் பாலுட
பூர்வீகம் பெருவாராபுர்
தகப்பனார் **நடராஜன்**
தாயார் **ஜெயகுமாரி**
முகவரி 6, கம்பர் சாலை,
சிவஜோதி நகர்,
சிதம்பரம்,
கடலூர் மாவட்டம்
Cell : 94887 91637, 97501 50737

பெயர் செல்வன் **K.R. ஜெய்பிரகாஷ்**
படிப்பு B.E., Dip. in Yoga
வேலை System Engr. (IT)
ரெனால்டு நிசான், மகேந்திரா சிட்டி,
Rs. 11 Lakhs/PA

பிறந்த தேதி 20.01.1995
உயரம் 170 cm
நட்சத்திரம் பூரம்
கோத்திரம் கனகராய
பூர்வீகம் பரதூர் சிதம்பரம்
தகப்பனார் **R.R. இராதாகிருஷ்ணன்**
தாயார் **R. கலைச்செல்வி,** M.Com., B.Ed., (சிதம்பரம்)
முகவரி 31/51, ஸ்ரீ கணேஷ் பிளாட்,
சௌராஷ்ட்ரா நகர் 8வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
Cell : 83003 34960 (W),
97107 21278 (A)
விருப்பம் சமபடிப்பு, சென்னையில் பணிபுரிய கூடிய பொருத்தமான வரன்.

பெயர் செல்வன் **J. அருண்குமார்**
படிப்பு BE (CSE)
வேலை Software Engineer, Cognizant
Rs.9 Lakhs/ PA

பிறந்த தேதி 4.10.1993
உயரம் 179 cm
நட்சத்திரம் கார்த்திகை (பாதம்–2)
கோத்திரம் பெண்ணாகட
பூர்வீகம் பொய்கைக்குடி, மயிலாடுதுறை.
தகப்பனார் **M.ஜெகந்நாதன்,** S.E (Retd), CPWD
தாயார் **J. கலைச்செல்வி,** Govt service (அரசிளங்குடி)
முகவரி 9-B/2, பவித்ரா ப்ளாட்ஸ்,
ராமகிருஷ்ணா தெரு, நேரு நகர்,
குரோம்பேட்டை,
சென்னை–600044.
Cell : 9443396341, 9442918744
E.mail:jaganmanickam@yahoo.com

மணமகள் தேவை

பெயர் செல்வன் **சத்திய நாராயணன் P.**
படிப்பு B.E., Naval Architecture
வேலை Naval Architecture in Libraa Offshore Pvt. Ltd.,
Current Location : Libreville, Gabon, West Africa, Rs. 80,000/PM
பிறந்த தேதி 9.11.1986
உயரம் 173 cm
நட்சத்திரம் அவிட்டம்
கோத்திரம் சாத்துகுட
பூர்வீகம் மண்ணிப்பள்ளம், மயிலாடுதுறை மாவட்டம்

தகப்பனார் **பரமநாதன் .K,** Rtd. Asst. Manager TNCS
தாயார் **சுதாசினி .P**
(கஞ்சங்கொல்லை, கடலூர் மாவட்டம்)
முகவரி பிளாட் எண். 2, முதல் குறுக்கு தெரு, இராஜேஸ்வரி நகர், புழுதிவாக்கம், சென்னை – 600 091.
Cell : 9444 68 9778 / 044 - 2242 1014
விருப்பம் பணியில் உள்ள வரன்

பெயர் செல்வன் **M. கார்த்திகேயன்**
படிப்பு B.E., (Geo Informatics) Anna University
வேலை Senior GIS Analyst, Trimble, Chennai
Rs. 5,50,000/PA
பிறந்த தேதி 30.08.1993
உயரம் 185 cm
நட்சத்திரம் அவிட்டம்
கோத்திரம் வங்காருடை

தகப்பனார் **P. மீனாட்சி சுந்தரம்**
(Sales Manager - Co-optex)
தாயார் **M. சாந்தி**
தொடர்புக்கு Cell : 80727 41410, 86678 18237
விருப்பம் B.E., / B.Tech. (IT Working Professional)
பணியில் உள்ள நல்ல குணமான மணமகள்

பெயர் செல்வன் **G.U. ARUN**
படிப்பு B.Tech., Sastra University Tanjore
M.S. (London) Quality Analyst
வேலை Bristol Laboratories LLP
Quality Control Anlyst, U.K.
Rs. 5 Lakhs/PM
பிறந்த தேதி 04.07.1995
நட்சத்திரம் உத்திரம்
கோத்திரம் வேளமுடையார்

தகப்பனார் **M. உலகநாதன்,** (Retd. Manager Finance, Apollo Hospital)
தாயார் **V. கோமதி,** Working in LIC of India
Anna Nagar, Chennai
தொடர்புக்கு Cell : 98417 24269, 94451 41609
விருப்பம் Good Profession, Qualified
வெளிநாடு செல்லபவராக இருக்க வேண்டும்.

பெயர் செல்வன் **பு. மணிவண்ணன்**
படிப்பு BE, MBA (Germany)
வேலை KUEHNE + NAGEL (AG & Co.) KG GERMANY
Rs. 1,80,000/ PM
பிறந்த தேதி 26.06.1992
உயரம் 167 cm
நட்சத்திரம் பரணி
கோத்திரம் விளந்திட
பூர்வீகம் கோவிலூர்

தகப்பனார் **லோ. புகழேந்தி,** பட்டதாரி ஆசிரியர்
தாயார் **வி. விஜயலெட்சுமி**
முதுகலை ஆசிரியர்
(அங்கராயநல்லூர்)
முகவரி 22, N.A.G. காலனி,
ஜெயங்கொண்டம்,
அரியலூர் மாவட்டம் – 621 802.
Cell : 99433 53559, 97868 73632
E.mail:pugaljayaram@gmail.com



வாழ்க மணமக்கள்

தரங்கை வட்டம் மேமாத்தூர் வானின்று வாழ்த்தும் தென்னவராய திரு. R. வைத்திலிங்கம் பிள்ளை, திருமதி. சிவானந்தம், குத்தாலம் வட்டம், கழனிவாசல் வானின்று வாழ்த்தும் கீரனுட திரு. M. இராஜகோபால் பிள்ளை, திருமதி. நாகரெத்தினம் இவர்களின் பெயர்த்தியும் திரு. V. நடராஜன்–மாலதி இணையரின் அன்பு மகளுமாகிய திருவளர்செல்வி. **N. நந்தினி,** M.E., மயிலாடுதுறை வட்டம், பொய்கைகுடி பூவனுட வானின்று வாழ்த்தும் திரு. R. ரங்கநாதம் பிள்ளை, திருமதி. கல்யாணி திருவிடைமருதூர் வட்டம் சூரியனார்கோவில் கூடலுட திரு. R. கோபாலன் பிள்ளை – திருமதி. சுபா இவர்களின் பெயரனும் திரு. R. சிவசுப்ரமணியன் – மீரா இணையரின் அன்பு மகனுமாகிய திருவளர்செல்வன் **S. சஞ்சேஷ்,** B.E. இவர்களது திருமணம் கடந்த 30–10–2022 ஞாயிறு அன்று மயிலாடுதுறை A.V.C. திருமண மண்டபத்தில் இனிதே நடந்தேறியது. திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் திருமண நிகழ்வுகள் செவ்வனே நடக்க ஒத்துழைப்பு நல்கி விருந்தோம்பலையும் சிறப்பாக நடத்தித்தந்த உறவினர்கள், நண்பர்கள், மயிலாடுதுறை நகர கார்காத்தார் சங்க முன்னாள், இன்னாள் நிர்வாகிகள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

R. கோபாலன் - சுபா
T. பாலசுப்ரமணியன் - வள்ளி
R. கனகசபாபதி - கலைவாணி
சுமதி சௌரிராஜன்
R. சிவசுப்பரமணியன் - மீரா
T. செல்வகுமார் - ஜெயந்தி

G. சதீஷ் - பிரபாதேவி
K. கல்யாண்குமார் - அனுமிதா (USA)
S. நிஷிகா, B.E.
S. அஜய், B.E. (M.S.) (U.K)
S. பூர்ணிமா, (B. Arch)

V. செல்வரெத்தினம் - தங்கம்
V. நடராஜன் - மாலதி
V. குணசேகர் - லலிதா
R. சண்முகசுந்தரம் - கமலா
A. மகேஷ்ஆனந்த் - வித்யாலெட்சுமி
T. கண்ணன் - சிவப்ரியா

மழலையர்கள்
செல்வன் **விபவா கண்ணன்**
செல்வி **மிதுல்யா மகேஷ்**

With our experts, No reason for worries

Brand Behind Many Confident Smiles ☺

Dr.Smilez

Dental Center

www.drsmilez.com

DRSMILEZ.COM

Dental Helpline (24x7)

Call : 1800 20 88988

புது நூல் வெளியீடு

தினம் ஒரு திருமுறைப் பாடல்

வெள்ளியக்குடி மு. நக்கீரன்

எழுத்தாளர் திரு. வெள்ளியக்குடி மு. நக்கீரன் அவர்களின் புது நூலான **"தினம் ஒரு திருமுறைப் பாடல்"** சமீபத்தில் மனோ பதிப்பகத்தால் வெளியானது. பன்னிரு திருமுறைகளில் மொத்தம் உள்ள 18, 326 பாடல்களில் சில முக்கியமான பாடல்களை தேர்ந்தெடுத்து அவற்றை சீர் பிரித்து விளக்கம் தந்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

மனோ பதிப்பகம் மூலமாக வெளியிடப்பட்டுள்ள இந்நூல் சிவப் பக்தர்கள் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். இது வரை 20 நூல்கள் எழுதியுள்ள எழுத்தாளர் வெள்ளியக்குடி மு. நக்கீரன் அவர்களது கலைப் பணியும், இறைப் பணியும் மேன்மேலும் வளர வாழ்த்தி வணங்குகிறோம்.

ந. வாசுகி (மனைவி)
மு. ந. பாலமுருகன் (மகன்)
பா. தாமரைசெல்வி (மருமகள்)
பா. ஓவியா (பேத்தி)

எழுத்தாளரின் தொடர்புக்கு :
9444 571213

நங்கநல்லூர் வட்டார கார்காத்தார் சமூக நலச்சங்கம்
35வது ஆண்டு விழா நிகழ்வுகள் 31.12.2022

இந்திய தண்டனைச் சட்டம் தோற்றமும் வரலாறும்

ORIGIN AND HISTORY OF INDIAN PENAL CODE

மேலையூர் ச. அன்பழகன் 98413 73184

இந்திய தண்டனைச் சட்டம் என்பதைத் தான் இந்தியன் பீனல் கோடு என்று கூறுகிறோம். இந்த சட்டத்தைப் பற்றித் தான் இ.பி.கோ என்று வழக்கறிஞர்கள் அடிக்கடி சொல்லக் கேட்டிருப்போம். இந்த இந்திய தண்டனச் சட்டம் பற்றி இதற்கு முன்பு பல சந்தர்ப்பங்களில் சொல்லி இருக்கிறோம் நாம் ஏற்கனவே சொல்லியுள்ளபடி நம்நாட்டின் முக்கியமான மூன்று கிரிமினல் சட்டங்களில் இந்தியன் பீனல் கோடு என்னும் இந்திய தண்டனைச் சட்டமும் ஒன்று. இதர இரண்டு கிரிமினல் சட்டங்களான இந்திய சாட்சிகள் சட்டம் மற்றும் கிரிமினல் குற்ற வழக்கு நடைமுறைச் சட்டம் போன்றவை நீதி மன்றத்தில் வழக்கு தொடரும்போதுதான் தேவைப்படும். ஆனால் இந்திய தண்டனைச் சட்டத்தில் நம்முடைய வாழ்வில் செய்யப்படும் கிரிமினல் குற்றங்கள் மற்றும் அவற்றுக்கான தண்டனைகள் கூறப்படுவதால், நம்முடைய மக்களின் அன்றாட வாழ்வில் தேவைப்படும் சட்டங்களில் ஒன்றாக இந்தியன் பீனல் கோடு என்னும் இந்திய தண்டனைச் சட்டம் விளங்குகிறது. இதில் உள்ள முக்கியமான பிரிவுகள் பற்றி ஏற்கனவே சொல்லியுள்ளோம் இப்போது இதன் தோற்றம் மற்றும் வரலாற்றைப் பார்ப்போம்.

தாமஸ் பாபிங்டன் மெகாலே

சாப்டர்ஸ் என்று சொல்லக்கூடிய 23 அத்தியாயங்களையும் 511 பிரிவுகளையும் கொண்டது இந்த சட்டம். இச்சட்டத்தை எழுதியவர் தாமஸ் பாபிங்டன் மெகாலே என்பவர் ஆவார். இந்தியா பிரிட்டிஷார் ஆட்சியின் கீழ் இருந்த போது 1833 ஆம் ஆண்டின் பட்டயச் சட்டத்தின் கீழ் தாமஸ் பாபிங்டன் தலைமையில் நிறுவப்பட்ட முதல் சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் 1860 ஆம் ஆண்டில் இந்த சட்டம் தயாரிக்கப்பட்டது. 1862 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் இந்த சட்டம் நடைமுறைக்கு வந்தது. அதாவது இந்த சட்டம் நடைமுறைக்கு வந்து 150 ஆண்டுகளுக்கு மேலாகிறது. சொல்லப்போனால் நம்முடைய அரசியல் சாஸனம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே இந்த சட்டம் நடைமுறைக்கு வந்து விட்டது.

ஐ பி சி என்னும் இந்திய தண்டனைச் சட்டம் என்றால் என்ன ?

ஐபிசி என்னும் இந்திய தண்டனைச் சட்டம் என்பது இந்திய அரசியலமைப்பால் நிறுவப்பட்ட கிரிமினல் குற்றம் தொடர்பான அனைத்து சட்டங்களையும் உள்ளடக்கிய குற்றவியல் குறியீடு ஆகும்.

கான்ஸ்டிடூஷன் என்னும்.. அரசியலமைப்பு என்பது ஒரு பிரதேசத்தையும் அதன் மக்கள்தொகையையும் ஆளும் கட்டமைப்பாகும். ஆனால் ஐபிசி என்பது சட்டங்களுள் ஒன்றாகும், இச் சட்டம் நாட்டின் எல்லைக்குள் இருப்பவர்களைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டது. கிரிமினல் குற்றம் தொடர்பான அனைத்து சட்டங்களையும் உள்ளடக்கிய குற்றவியல் குறியீடு ஆகும். இந்த சட்டத்தில் கூறப்பட்டுள்ள அவதூறு, தற்காப்பு, குற்றத்துக்கு உடந்தை, பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் குற்றங்கள் மதம் சம்பந்தப்பட்ட குற்றங்கள் அரசுக்கு எதிரான குற்றங்கள் என பலவகைக் குற்றங்கள் பற்றி 15 க்கும் மேற்பட்ட கட்டுரைகளை ஏற்கனவே எழுதி உள்ளேன்.

சட்டம் என்றால் என்ன ? சமூதாயத்தில் வாழும் ஒரு நபர். அவர் தனது வாழ்வாதாரத்திற்காக பல்வேறு செயல்களைச் செய்ய வேண்டும். சில நடவடிக்கைகள் நல்லவையாக இருக்கும் அல்லது சில மோசமானவையாக இருக்கும் வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சில சமூகத்திற்கு நன்மை பயக்கும், சில சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும். மனித நடத்தைகளின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக, ஒழுங்குமுறை அதிகாரிகளால் ஒரு குழு நடவடிக்கைகள் / விதிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன, இதனால் ஒருவருடைய செயல்கள் மற்றவர் யாரும் தீங்கு விளைவிக்காது, இந்த விதிகள்தான் சட்டம் என்று அழைக்கப்படுகிறது. சட்டத்தின் வரலாறு பற்றி சற்று பார்ப்போம்.

சட்டத்தின் வரலாறு சட்டத்தின் வரலாறு என்பது நாகரிகம் என்ற சொல்லுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. பண்டைய எகிப்திய சட்டம் (கிமு 3000 இல்) மாட் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிவில் கோட் 12 புத்தகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது (உண்மை, சமநிலை, நல்லிணக்க சட்டம், அறநெறி மற்றும் நீதி ஆகியவற்றைக் குறிக்கிறது). இந்த கருத்துக்களைக் காட்டும் தெய்வம் மற்றும் மனிதர்களின் நட்சத்திரங்கள், பருவங்கள் மற்றும் செயல்களை ஒழுங்குபடுத்துகிறது.

பண்டைய சுமேரிய ஆட்சியாளர் உர்–மம்மி முதல் சட்டக் குறியீட்டைவகுத்தார். கிமு 1760 ஆம் ஆண்டில், மன்னர் ஹம்முராபி புதிய சட்டம் பாபிலோனிய சட்டம் அதை ஸ்டீலே வடிவத்தில் கல்லில் குறியிட்டு விவரித்தார். இது 19 ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷாரால் கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் ஆங்கிலம், இத்தாலியன், ஜெர்மன் மற்றும் பிரஞ்சு உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

நீதி தேவதை சட்டம் / நீதி என்பது, மார்ட் என்ற ஒரு பெண்தெய்வம்.நாம் அதனைநீதிதேவதைஎன்கிறோம். அவர் தீர்ப்பு அளவீடுகளின் கட்டாய சக்தியைக் குறிக்கும் வகையில் ஒரு வாளை அணிந்துள்ளார்,

இதன் மூலம் போட்டி உரிமைகோரல்கள் குறைகின்றன, பணம், செல்வம், அதிகாரம் மற்றும் அடையாளத்தைப் பொருட்படுத்தாமல் நீதி பாரபட்சமற்றதாக இருக்க வேண்டும் என்பதைக் காட்ட கண்களைக் கட்டிக் கொண்டு இன்னொரு கையில் தராசை ஏந்தி இருப்பார் இது இந்திய சட்டத்தில் ஒரு அடிப்படைக் கொள்கையாகும்.

சட்டத்தின் வகைகள்

நம்முடைய நாட்டு சட்ட முறைகளை கீழ்க்கண்ட நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்

1. குற்றவியல் சட்டம் கிரிமினல் சட்டம்

காவல்துறையினர் அமல்படுத்தும் சட்டம் இது. கொலை, தாக்குதல், கொள்ளை, கற்பழிப்பு ஆகியவை இந்த சட்டத்தில் வரும் குற்றங்களுக்கான எடுத்துக்காட்டுகள் ஆகும். குற்றவியல் சட்டத்தின் கீழ் வரவில்லை என்றாலும் அனைவருக்கும் எதிராக இருப்பதும் ஒரு குற்றமாகும்

உதாரணமாக, ஒரு கார் திருடப்பட்டால், திருட்டு தனிநபருக்கு எதிரானது, ஆனால் அது அனைத்து கார் உரிமையாளர்களையும் அச்சுறுத்துகிறது, ஏனெனில் அவர்கள் தங்கள் காரைத் திருடியிருக்கலாம். ஏனென்றால், எல்லோரும் குற்றத்தால் அச்சுறுத்தப் படுகிறார்கள் என்ற கருத்து எடுக்கப்படுகிறது, இந்த சட்டம் பொது சேவைகளுடன் கையாளப்படுகிறது, தனிப்பட்ட முறையில் அல்ல.

2. உரிமையியல் சட்டம் (சிவில் சட்டம்)

கல்விக்கான உரிமை அல்லது தொழிற்சங்க உறுப்பினர் உரிமை மற்றும் தம்பதிகளிடையே ஏற்படும் குழந்தைகள் பராமரிக்கும் பொறுப்பு போன்ற பல்வேறு சிவில் என்னும் உரிமையியல் சட்டத்தில் வரும். சிவில் சட்டத்தை விவரிக்க சிறந்த வழி என்னவென்றால், அது குற்றம் அல்லாத செயல்களைப் பார்க்கிறது. ஆனால் தனிநபர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதன் மூலமோ அல்லது ஒரு வழக்கறிஞரிடமோ தங்கள் சொந்த பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இது தனிநபர்களுக்கும் அமைப்புகளுக்கும் இடையிலான மோதல்களைக் கையாளும் சட்டத்தின் ஒரு பிரிவு. எடுத்துக்காட்டாக, ஒரு கார் விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் விபத்தில் ஏற்பட்ட இழப்பு அல்லது காயம் குறித்து ஓட்டுநரிடமிருந்து உரிமைகோருகின்றனர் அல்லது ஒரு நிறுவனம் வர்த்தக தகராறு தொடர்பாக மற்றொரு நிறுவனம் மீது வழக்குத் தொடர்கிறது.

3. பொதுவான சட்டம்

இது நீதித்துறையின் முன்மாதிரி அல்லது நீதிபதி உருவாக்கிய சட்டம் அல்லது வழக்குச் சட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. இது நீதிமன்றங்கள் மற்றும் இதே போன்ற தீர்ப்பாயங்களின் நீதித்துறை முடிவிலிருந்து பெறப்பட்ட ஒரு சட்ட அமைப்பு. பெயர்கள் விவரிக்கையில் இது அனைவருக்கும் பொதுவானது. இன்று உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கு பொதுவான சட்ட அதிகார வரம்புகளில் அல்லது அமைப்புகளில் வாழ்கிறது.

இது சட்ட விதிகளின் ஒரு அமைப்பாக வரையறுக்கப்படுகிறது, இது சட்டமன்றத்தால் அல்லது உத்தியோகபூர்வ முறைகளில் செய்யப்பட்ட விதிகள் மற்றும் சட்டங்களுக்கு மாறாக வழக்குகளைக் கூறும் பிரச்சினையில் நீதிபதிகளால் செய்யப்பட்டுள்ளது. பொதுவான சட்டத்தின் எடுத்துக்காட்டு, ஒரு நீதிபதி மக்களுக்கு ஒப்பந்தங்களைப் படிக்க வேண்டிய கடமையைக் கொடுத்தார்.

10 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் இரண்டு பேர் ஒன்றாக வாழ்ந்தபோது ஒரு பொதுவான சட்ட திருமணத்தின் உதாரணம். இதனால் அவர்கள் தங்கள் சொத்துக்களைப் பகிர்ந்து கொள்ள சட்டப்பூர்வ உரிமைகள் உள்ளன.

சட்டரீதியான சட்டம் இது பொதுவாக ஒரு சட்டமன்றக் குழுவால்இயற்றப்பட்ட வருவாய்இழப்பைவரையறுக்கப் பயன்படுகிறது. இது ஒழுங்குமுறை அல்லது நிர்வாகச் சட்டங்களிலிருந்து பொதுவான சட்டம் அல்லது முந்தைய நீதிமன்ற தீர்ப்புகளால் உருவாக்கப்பட்ட சட்டத்திலிருந்து மாறுபடும். சட்டமன்றத்தில் ஒரு மசோதா முன்மொழியப்பட்டு வாக்களிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, வேக வரம்பை மீறியதற்காக உங்களுக்கு ஒரு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது, நீங்கள் ஒரு வாகனம் மற்றும் போக்குவரத்து சட்டத்தை மீறிவிட்டீர்கள் என்ற பொருளாகும்.

நாகரீகம் அற்ற சமுதாயத்தில் நாகரிகம் வளர்ச்சி அடையும் முன்பாக அந்த சமூகத்தில் குற்றவியல் சட்டம் என்று எதுவும் கிடையாது . ஒவ்வொரு மனிதனுக்கும் தான் உடல் ரீதியாக்வோ அல்லது சொத்து / பொருள் ரீதியாகவோ எந்த நேரத்திலும் யாராலும் தாக்கப்படுவதற்கு வாய்ப்பு இருந்தது. அவ்வாறு தாக்கப்பட்டால் "ஒரு பல்லுக்கு ஒரு பல், அல்லது ஒரு கண்ணுக்கு ஒரு கண், ஒரு வாழ்க்கைக்கு ஒரு வாழ்க்கை" என்று தாக்கிய எதிரியை பதிலுக்குத் தாக்குவதே நோக்கமாக இருந்தது.

ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, காயமடைந்த நபர் தனது எதிரியைக் கொல்வதற்குப் பதிலாக இழப்பீட்டை ஏற்க ஒப்புக்கொண்டார். பின்னர், சாதாரண குற்றங்களை தண்டிக்க ஒரு அளவுகோல் உருவாயிற்று.

இந்தியன் பீனல் கோடு என்னும் இந்திய தண்டனைச் சட்டத்தின் தோற்றம் மற்றும் வரலாறு பற்றி ஏதும் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டங்கள் அல்லது வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் டாப்பர்.காம், கோரா.காம், விக்கீபீடியா. ஓ ஆர் ஜி மற்றும் லீகல் பைட்ஸ்.இன் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுக்கப்பட்டது.

இணையத்தின் விளைவுகள்

இணையம் என்பது உலக அளவில் பல கணினி வலையமைப்புகளின் கூட்டிணைப்பான பெரும் வலையமைப்பைக் குறிப்பதாகும். இந்த இணையம் மனிதர்களின் உற்றத் தோழனாக மாறிவிட்டதை யாராலும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது. இந்நவீன உலகில் பாலமாய் இருப்பது இணையமே ஆகும் என்றால் மிகையாகாது. அந்த இணையத்தின் ஆணிவேராக இயங்கும் பெரும்பாலான அடிப்படைத் தொழில்நுட்பங்களைப் புழங்குவது பற்றி இங்கு குறிப்பிட வேண்டும்.

மின்னஞ்சல் (Email), வலைத்தளங்கள் (Web Pages) வலைப்பூக்கள் (blogs), தேடுபொறிகள் (Search Engines), வலைக்கூடங்கள் அல்லது சமூக வலைத்தளங்கள் (Social Network such as Twitter, Facebook, Linkedin), வலைத்திரைகள் (Video sharing services such as you-Tube), மின்னாட்சி (e-governance), மின்வணிகம் (e-commerce), வலையூடகங்கள் (Web versions of electronic media), மின் தரவுத் தளங்கள் (online encycopedia such ad Wiki Pedia), மின்கலைக் கூடங்கள் (Electronic Art galleries), இணையக் கல்விக் கூடங்கள் (web based Learning, e-learning) என்பவை இவற்றில் அடங்கும்.

ஆக கல்வி, தொழிற்துறை, விளையாட்டு, மருத்துவம், அறிவியல், பொருளாதாரம், சமூகம் என அனைத்து துறைகளிலும் இந்த இணையத்தின் "மாயமும் மகிமையும்" தேவைப்படுகிறது. இதற்கு முக்கிய சான்று நம் கல்வி அமைப்பால் அறிமுகப்படுத்திய Pembelajaran Maya. தற்போது, இணையத்தின் வழி மாணவர்கள் இல்லத்தில் இருந்தவாறே, பாடத்தை ஒட்டிக் கலந்துரையாடலோ, கருத்துப்பரிமாற்றமோ செய்யலாம். இவ்வாறு கற்க முயலும் மாணவர்கள் கல்வியில் புடமிட்ட வைரமாய் பிரகாசிப்பர் என்பது திண்ணமாகும்.

இது மட்டுமின்றி, இணையத்தின் உதவியால் பல மருத்துவ சிகிச்சைகள் வெற்றிகரமாக நடந்து வருகின்றன. பல நாடுகளில் மருத்துவ வல்லுனர்கள் இந்த முறையை கையாளுகின்றனர். இதற்குச் சான்று அண்மையில் இங்கிலாந்து நாட்டில் இணையத்தின் வழி பிரசவம் நடைபெற்றதைக் குறிக்கலாம். மேலும், "இன்டெர்நெட்" எனப்படும் இணையத்தின் வரவு நம் அன்றாட வாழ்க்கையில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. விரல் நுனியில் தகவல்கள், செய்திகள், புள்ளிவிவரங்கள், விரல் சொடுக்கும் நேரத்தில் தகவல், செய்திப் பரிமாற்றம், தரவிறக்கம், பதிவேற்றம், பூமிக் கோளத்தில் நாடுகளின் எல்லைகள் மறைந்து போய் "எல்லையில்லா உலக" உருவாக்கம், தொலைவு என்பது மறைந்து போய், உள்ளங்கைக்குள் உலகம் சுருங்கிப்போன அதிசயம்! அதற்கு முக்கியச் சான்று எம்.எச்.17, ஏர் ஆசியா விமானம் கண்டுபிடிக்க இந்த இணையத்தின் பயன்பாட்டினை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

தொடர்ந்து, இணையத்தின் ஆதிக்கம் மக்களின் அன்றாட வாழ்விலும் மேலோங்கியே நிற்கின்றது. இன்றைய பரபரப்பான வாழ்வில் மக்கள் நேரத்தை சிக்கனப்படுத்துவதிலும், வேலைகளை எளிமையாக விரைவாக முடிப்பதிலும் குறியாக இருக்கின்றனர். அந்த வகையில், கட்டணங்களை செலுத்துவது, பொருள்கள் வாங்குவது, வேலைக்கு மனு செய்வது, மற்றவருடன் தொடர்பு கொள்வது என அத்துணை வேலைகளையும் விரல் சொடுக்கும் நொடியில் முடித்து விடலாம். இந்த நேரத்தில் காலத்தேவனின் தேவை அதிகம் நமக்குத் தேவையில்லையே எனலாம். மேலும், அடையாள அட்டை, கடைப்பிதழ் அட்டை, வங்கி அட்டை என ஒவ்வொரு மனிதனின் முக்கிய பத்திரங்கள் மற்றும் அட்டைகள் செய்ய இணையம் மிக அவசியம்.

இப்படி பல நன்மைகளை வாரி வழங்கும் பாரி வள்ளலான இணையத்தினால் கெடுதல்களும் விளைகின்றன என்பதை ஒப்புக்கொள்ளதான் வேண்டும். இணையத்தின் மிகப்பெரும் சிக்கலே நம்பகத்தன்மை இன்மைதான். சொல்வதைச் சரியாகப் பிழையில்லாமல் சொல்வது மட்டுமல்லாமல் தக்க சான்றுகளையும் காட்ட வேண்டும். இணையத்தில் கிடைக்கும் பெரும்பாலான செய்திகளை நாம் "கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்" என்ற பார்வையில்தான் அணுக வேண்டும். யார் வேண்டுமானாலும் எழுதுவதால் உண்மை எது, பொய் எது என்று புரியாமல் தடுமாறுகிறோம். அதனால், பல வகைகளில் தனி மனிதருக்கும் மற்றும் ஒரு நாட்டிற்கும் பிரச்சனைகள் வந்து கொண்டிருப்பதை கண்கூடாக காண முடிகிறது. இதற்கு தக்கச்சான்று, வாட்ஸ்ஆப், முகப்புத்தகம் இன்னும் பல. தொடர்ந்து, இணையத்தில் வன்முறை சம்பவங்கள் அளவுக்கு அதிகமாக பெருக்கெடுத்து வருகின்றன.

மின்னியல் திருடர்கள், இணையம் மூலம் வங்கிக்கொள்ளை,நாட்டின்ரகசியங்களைத்திருடுதல், இணையம்மூலம்வைரஸ்பரப்புதல்எனதீயவழிகளிலும் தன் செல்வாக்கை வளர்த்துள்ளது இணையம். இதற்குத் தக்க சான்று, நம் நாட்டின் வலையகம் இணைய Hacker முடக்கப்பட்டது. கத்தியின் கூர்மை பழம் நறுக்கவும் பயன்படுத்தப்படுகிறது; ஒருவரை காயம் விளைவிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. ஆக இது கத்தியின் தவறு இல்லை, அதனைப் பயன்படுத்துவோரின் கையில் உள்ளது. ஆகவே கற்றறிந்த மானிடராகிய நாம் அன்னப் பறவையாய் உருமாறி இணையத்திலிருந்து நல்லதைப் பருகி அல்லதை ஒதுக்கி பயன் அடைவோம்.

– அர்ச்சனா சுவேதாரண்யம், சென்னை–90.
செல் : 9943702054

அன்றும் இன்றும்

"அன்று நாடு முழுவதும் போக்கவேண்டியது பஞ்சம்
இன்று நாடு முழுவதும் போக்கவேண்டியது லஞ்சம்"

"அன்று ஓடினோம் வயிற்றை நிறைக்க
தொழிற்சாலைக்கு
இன்று ஓடுகின்றோம் வயிற்றை
குறைக்க கடற்கரைச்சாலைக்கு"

"அன்று அரசியல் தியாகிகள் நாட்டை மாற்றினர்
சுதந்திரமாக
இன்று அரசியல் வாதிகள் நாட்டை
ஏமாற்றுகின்றனர் தந்திரமாக"

"அன்று அரசியல் கட்சிகள் நின்றது நாட்டு
மக்களுக்கு துணையாக
இன்று அரசியல் கட்சிகள் நிற்கிறது
நாட்டு மக்களுக்கு வினையாக"

"அன்று வெற்றி அடைந்தோம் நாட்டின் ஒற்றுமையால்
இன்று வெறி அடைகின்றோம்
சாதி மத வேற்றுமையால்"

"அன்று ஒற்றுமைக்காக வீதியெங்கும் ஒரே புரட்சி
இன்று வேற்றுமைக்காக வீதியெங்கும் ஓர் கட்சி"

அன்று நமக்காக
தலைவர்கள் நடத்தினர் யுத்தம்
தியாகிகள் சிந்தினர் இரத்தம்
விதவைகள் அழுகைச் சத்தம்
இறுதியில் பெற்றோம் பாரதமாதாவின் முத்தம்
இதையெல்லாம் மறந்துவிட்டோமே
அதுதான் வருத்தம்.....

– மு.ஆ. ஜெயகீர்த்தி

கடலூர் கார்காத்தார் சங்கம்

நம்பர்.6, இராதாநகர் விரிவு,
வண்ணாரப்பாளையம், கடலூர்–607001

நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்திய சென்னை கார்காத்தார் சங்கத்திற்கு கடலூர் கார்காத்தார் சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடலூர் கார்காத்தார் சங்கம்,
நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்.

R R PHARMACY
R R பார்மஸி
155, East Car Street, Chidambaram - 1.
155, கீழரத வீதி, சிதம்பரம் – 1.

₹ 750/-க்கு மேல் 15% தள்ளுபடி
15% DISCOUNT*
ON PURCHASE OF MEDICINES ABOVE ₹ 750/-
"பார்மஸியில் அனுபவமுள்ள பெண்கள் / ஆண்கள் தேவை"
10% தள்ளுபடி வழக்கம்போல்
10% DISCOUNT on Normal Purchase
Free Door Delivery
Ph : 04144 - 222099, 94871 41258

கண்ணீர் அஞ்சலி

விருதுநகர் திரு. **அ. பாண்டி** B.A.,

விருதுநகர் திரு. **அ. பாண்டி** B.A., அவர்கள் விருதுநகர் சங்க செயல்பாடுகளில் பெருந்துணையாக இருந்தார்கள். அவரது பெற்றோர் திரு. **அம்மையப்ப பிள்ளை** திருமதி. **முத்தாச்சி அம்மாள்** ஆகியோர் ஆவார். அவரது இல்லத்தரசி தெய்வத்திருமதி. **சரோஜா** ஆவார்

அவரது தந்தையார் தமிழாசிரியராக இருந்த போதிலும் சிறந்த ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் நல்ல புலனம் பெற்று அனேக சிறார்களுக்கும், மாணவர்களுக்கும் படிப்பித்தார்கள். அவரது வழியில் திரு. அ. பாண்டி அவர்கள் மிகச்சிறந்த பேச்சாளராகவும், ஆன்மீகவாதியாகவும் திகழ்ந்தார்கள். அவர் ஆயுள் காப்பீட்டு கழகத்தில் பணிபுரிந்த காலத்தில் சிறந்த தொழிற் சங்கவாதியாகவும் சேவையாற்றினார்கள். எதிலும் நேரம் தவறாமை, கணக்கு விஷயத்தில் மிக நேர்மை ஆகியவை அவரது தனிச் சிறப்புகளாகும்.

பல வெளி ஊர்களுக்குச் சென்று ஆன்மீகத் தலைப்புகளில் அதிகமான பட்டிமன்றங்களில் பங்கு பெற்று, சிறந்த பேச்சளாராகவும், பல மேடைகளில் நடுவராகவும் இருந்தார்கள். விருதுநகர் கார்காத்தார் சங்கத்தில் ஆரம்ப காலத்திலிருந்து செயற்குழு உறுப்பினராகவும், 1979-1980 களில் பொருளாளராகவும் பொறுப்பேற்று சிறப்பித்தார்கள். கார்காத்தார் மாநிலசங்கம் உருவாவதற்கு உழைத்தவர்களில் இவரும் ஒருவராவர். மாநில சங்கத்தின் வளர்ச்சிக்காக தாசில் பண்ணை திரு. இராஜசேகரன் அவர்களுடன் இணைந்து பல ஊர்களுக்குச் சென்று வந்தார்கள்.

மாநில சங்கத்தில் 1978 முதல் 2002 வரை பொதுச் செயலாளராகவும், 2002 முதல் 2005 வரை மாநிலத்துணைத்தலைவராகவும் 2005 முதல் தொடர்ச்சியாக கௌரவத்தலைவராகவும் செயலாற்றினார்கள். அந்தக் காலக்கட்டத்தில் மாநில சங்கம் நல்லமுறையில் செயலாற்ற பெருந்துணைபுரிந்தார்கள். மாநில சங்க பொறுப்புக்குச் சென்ற பின்பு, விருதுநகர் சங்கத்தின் கௌரவத் தலைவராக இருந்து பல ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கினார்கள். விருதுநகர் குறள் நெறி கழகத்தின் செயலாளராக பல ஆண்டுகள் அரும்பணியாற்றினார்கள். சங்க கூட்டங்களில் பொறுப்பில் உள்ளவர்களை, உறவினர்களோ மற்றும் வயதில் சிறியவர்களாக இருந்தாலும் அவர்களது பதவிப் பெயரை சொல்லும் பண்புடையவர். அவரது கூடுதல் சிறப்பு ஒலிவாங்கி இல்லாமல் உரத்தகுரலில் அதிக நேரம் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள். அவருக்கு ஒரு புதல்வியும், ஒரு பேத்தியும் உள்ளனர். அவரது தொண்டு மிகவும் பாரட்டத்தக்கது.

என்றும் நினைவுகளுடன்

V.முனியப்பன்	**S.நடராஜன்**	**S.சுப்பிரமணியன்(எ)மனோகரன்**	**S.இராமகிருஷ்ணன்**
ஸ்ரீவில்லிபுத்தூர்	விருதுநகர்	விருதுநகர்	விருதுநகர்

எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
24.07.1942

மறைவு
28.02.2015

ஆ. மருதவாணன் பிள்ளை, M.A., B.Ed.,

(ஆசிரியர் பணிநிறைவு, ப.ரா.கு.மே.நி.பள்ளி, காட்டுமன்னார்குடி)

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டம், கொத்தவாசல் கிராமம், எரவுட S. ஆறுமுகம் பிள்ளை – சிந்தாமணி ஆச்சி ஆகியோர் மகனும், தெய்வத்திருமதி. கு. கஸ்தூரி, B.Lit., B.Ed., (ஆசிரியை பணிநிறைவு) அவர்களின் அன்பு கணவரும், எங்களின் அன்புத் தந்தையுமாகிய ஆ. மருதவாணன் பிள்ளை அவர்களின் நினைவோடு வாழும்.

மருமகன்கள்

சு. ராதாகிருஷ்ணன், ஆசிரியர்
ம. தாமரைச்செல்வி ராதாகிருஷ்ணன்,
ஆசிரியை, V. குமாரமங்கலம்

ப. மதி, ஆசிரியர்
ம. விஜயராணி மதி, பிரிவு அதிகாரி,
தலைமை செயலகம், சென்னை–19

வை. சங்கர்,
துறை கண்காணிப்பாளர், அ.ப.கழகம்
ம. கலைவாணி சங்கர்,
தலைமை ஆசிரியை, காட்டுமன்னார்கோயில்

மகன்கள்

ம. ஞானசபாபதி, ஆசிரியர்
ச. ஞானஜோதி ஞானசபாபதி,
தலைமை ஆசிரியை

ம. விஜயகுமார், த.நா.காவல்துறை
ந. வள்ளி விஜயகுமார், ஆசிரியை

ம. செந்தில்குமார், அ.ப.கழகம்
கி. அபிராமவல்லி செந்தில்குமார்,
ஆசிரியை, கொத்தவாசல்

மற்றும் **பேரக்குழந்தைகள்**

தொடர்புக்கு : 94427 80675, 94422 78510, 99769 97251

CREW PUBLIC CHARITABLE TRUST

பதிவு எண் 290/2010

40, சப்தகிரி காலனி, சென்னை–600083.

மாணவ, மாணவிகளுக்கு இரண்டு கோடியே தொண்ணூறு லட்சம் உதவித்தொகை.

2022–2023 ஆம் கல்வி ஆண்டில், CREW அறக்கட்டளை சார்பாக 1480 மாணவ, மாணவியர்க்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 2,90,00,000/– (இரண்டு கோடியே தொண்ணூறு லட்சம் ரூபாய் மட்டும்) வழங்கப்பட்டு, அவர்களின் விபரங்கள் உள்ள பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் கணவனை இழந்த 3 மகளிர்க்கு 36 ஆயிரம் ரூபாய்க்கு தையல் இயந்திரங்கள் மற்றும் 5 நபர்களுக்கு 40 ஆயிரம் ரூபாய் மருத்துவ உதவியாக வழங்கபட்டன.

CREW அறக்கட்டளையால், வழங்கப்பட்ட தொகையை வங்கியில் இருந்து தாங்கள் பெற்ற தொகையுடன் சரிபார்த்துக்கொள்ளுமாறு மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எனவே பட்டியலில் குறிப்பிட்ட தொகையில் ஏதெனும் வித்தியாசம் இருந்தால் உடனே தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

மாணவ, மாணவிகளிடமிருந்து தொகை எழுதாமல் கையெழுத்திட்டு பெறப்பட்ட ரசீதுகளில், அவர்களுக்கு வங்கி மூலமாக வழங்கப்பட்ட தொகை மட்டுமே இவ்வலுவலகத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாணவ, மாணவிகளின் விண்ணப்பங்களை பரிசீலித்து, தேர்ந்தெடுத்து, அறக்கட்டளைக்கு அனுப்பி உதவிய அனைத்து சங்க நிர்வாகிகளுக்கும், எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

திி.நெ. முத்துகுமாரசாமி,
கௌரவ ஆலோசகர்,
CREW அறக்கட்டளை.
9445451604

ச. வெங்கடேசன்,
தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர்,
CREW அறக்கட்டளை

வரிசை எண்.	மாணவ/ மாணவி பெயர்	வகுப்பு	பெற்றோர் பெயர்	ஊர்	உதவித்தெகை
1.	மு. சௌமியா	DGNM IIIrd year	நா. முரளிதரன்	விருத்தாச்சலம்	50000
2.	R. யோகேஷ்வரன்	B.Com IIIrd year	சு. அன்னபூரணி	சென்னை–78	17000
3.	H. லோகேஷ்	XIIth Std	T. ஹரிஹரன்	கீழ்க்கட்டளை	12000
4.	K. ஷர்மிலி	B.Tech IVth year	K. குலோத்துங்கன்	மன்னம்பந்தல்	25000
5.	M. ஹேமா	VIIIth Std	K. மதியழகன்	சிதம்பரம்	20000
6.	தி. ஜெயஸ்ரீ	XIIth Std	தி. அலமேலு	சிட்லபாக்கம்	12000
7.	தி. பிரதீப்	Xth Std	தி. அலமேலு	சிட்லபாக்கம்	10000
8.	P. விக்னேஷ்	XIth Std	P. புவனேசுவரி	தஞ்சை	10000
9.	வே. சுவாதி	B.Sc. Nursing IInd year	நா. வேல்முருகன்	லக்கூர்	25000
10.	மு. ஆனந்த்	B.com IInd year	எஸ்.வி. முரளி	குரோம்பேட்டை	17000
11.	வெ. சுவாதி	B.com IInd year	வெ. சந்தியா	செம்பாக்கம்	17000
12.	ச. மோனாஷாலி	B.Com IInd year	ச. ரேய்ச்சல்	சென்னை–73	5000
13.	P. மேசக்	XIIth Std	பிரபாகரன்	சென்னை–73	5000
14.	E. ஒலிவியா	MBA Ist year	S. எலிசர்	சென்னை–73	10000
15.	வெ. மகாராஜா	IXth Std	வெ. மாரியம்மாள்	திருநெல்வேலி டவுன்	10000
16.	N. பர்வத்கணேஷ்	C.A. Final	G. நெல்லையப்பன்	திருநெல்வேலி டவுன்	30000
17.	க. யோகப்பிரியா	B.Tech IIIrd year	ச. கந்தசாமி	கோவில்பட்டி	25000
18.	A. சங்கரசுப்பிரமணியன்	B.Sc IIIrd year	S. அருணாசலம்	திருநெல்வேலி டவுன்	5000
19.	G. வேலம்மாள்	B.E. IIIrd year	K.N. கோமதிசங்கர்	திருநெல்வேலி டவுன்	25000
20.	அ. ரவிசங்கர்	B.Com IIIrd year	மு. அருணாசலம்	திருநெல்வேலி டவுன்	17000
21.	மா. ஆறுமுகம்	B.Com IIIrd year	மு. மாணிக்கவாசகம்	திருநெல்வேலி	17000
22.	சே. மகேஷ்	B.Com IIIrd year	சேதுரவி	திருநெல்வேலி	17000
23.	I. மாரியம்மாள்	B.A. IIIrd year	S. ஐயப்பன்	திருநெல்வேலி	5000

24.	G. குமுதா	B.Com IInd year	A. கணேசன்	திருநெல்வேலி	17000
25.	S. சுபா	B.Com IIIrd year	M. செந்தில்வேல்	திருநெல்வேலி	17000
26.	M. சாரதா பிரபா	B.Com IIIrd year	S. முத்துசாமி	திருநெல்வேலி	17000
27.	N. ஷியாம்	B.B.A. IInd year	S. நாராயணன்	திருநெல்வேலி	17000
28.	ச. தமிழரசன்	B.Com IIIrd year	சந்திரசேகரன்	கோடம்பாக்கம்	10000
29.	V. ஆகாஷ்	XIIth Std	S. வடிவேல்	திரிசூலம்	5000
30.	A.K. நட்சத்ரா	Vth Std	M. கலா	மண்ணிவாக்கம்	10000
31.					
32.	N. ஜனார்த்தனன்	B.Sc IInd year	M. நடராசன்	பழனி	25000
33.	R. ஹரிஹரன்	XIth Std	V. இராசதுரை	குன்றத்தூர்	12000
34.	R. விக்னேஷ்	Vth Std	V. இராசதுரை	குன்றத்தூர்	10000
35.	பொ. ஸ்வேதா	B.E. IIIrd year	பா. பொன்னம்பலம்	சேலம்	30000
36.	பொ. மணீந்தராம்	Xth Std	பா. பொன்னம்பலம்	சேலம்	10000
37.	S. செல்வமுத்துகுமரன்	B.Sc IIIrd year	S. சிவசங்கரன்	கடலூர்	17000
38.	கோ. ஸஞ்சிதா லட்சுமி	XIIth Std	கோபாலகிருஷ்ணன்	திருவல்லிக்கேணி	12000
39.	கை. தங்கமணி	B.Sc IInd year	ச. கைலாசம்	நன்னிலம்	15000
40.	J. ஹரிஷ்	B.Sc IInd year	கமலா	நங்கநல்லூர்	10000
41.	C.V. சாய்சரண்	IVth Std	R.S. வித்யா	எடயார்பாளையம்	7000
42.	K. தர்ஷா	VIIIth Std	R. கலைமதி	மயிலாடுதுறை	10000
43.	K. பிரீத்தா	B.Com IInd year	S. கந்தசாமி	திருமுல்லைவாயல்	17000
44.	B. நவீன்கார்த்திக்	B.Com IInd year	S. பாலமுருகன்	கோவை	17000
45.	B. யசோவர்மன்		S. பாலமுருகன்	கோவை	25000
46.	B. பிரதியக்ஷா சங்கரன்	B.E. IIIrd year	S. பாலசுப்ரமணியன்	திருநெல்வேலி	25000
47.	T. கற்பகசெல்வி	B.A. IInd year	M. தங்கசுந்தரராஜ்	களக்காடு	10000
48.	T. ஹரிஷ்	B.Com IInd year	K. திருவேங்கடம்	திருநெல்வேலி டவுன்	17000
49.	K.S. ஜெயசுந்தரி	B.E. IVth year	S. சுப்புலட்சுமி	திருநெல்வேலி டவுன்	25000
50.	S. செல்வமுத்துகுமார்	B.Com IIIrd year	M. செல்வகணபதி	சங்கர் நகர்	17000
51.	S. மகாராசன்	B.E. IIIrd year	A. சரவணன்	நான்குநேரி	25000
52.	K.G. சங்கர்	MBBS IInd year	K. பாபநாசம்	திருநெல்வேலி	40000
53.	வெ. வலதி	XIIth Std	வெ. மாரியம்மாள்	திருநெல்வேலி	5000
54.	P. ஐஸ்வர்யா	VIIth Std	R. பிரபு	ஆதம்பாக்கம்	5000
55.	M. சுவேதா	B.Com IIIrd year	K. முருகன்	ஆதம்பாக்கம்	5000
56.	எம். ரத்னா	VIth Std	எம். பானு	ஆதம்பாக்கம்	5000
57.	M. அரீஸ்	BCA Ist year	S. மணிவாசகம்	ஸ்ரீமுஷ்ணம்	30000
58.	S. செல்வஸ்ரீநிதா	DGNM IInd year	M. செல்வராஜ்	மேலையூர்	20000
59.	நா. அரவிந்த்	B.Sc IInd year	நா. விஜி	மானாமதுரை	17000
60.	கு. அனு	B.Com IIIrd year	ச. குமரன்	மேடவாக்கம்	17000
61.	N. பரத்குமார்	MBA Ist year	M. நடராசன்	பழனி	30000
62.	S.V. கிருஷ்ணகுமார்	IXth Std	V. வேம்பு	மீஞ்சூர்	12000
63.	S.V. ராமகிருஷ்ணன்	B.Com IInd year	V. வேம்பு	மீஞ்சூர்	17000
64.	B. வருண்	VIth Std	S. சுஜித்ரா	கோவூர்	15000
65.	B. முகில்	IIIrd Std	S. சுஜித்ரா	கோவூர்	15000
66.	K.S. சுஷாந்த்	Xth Std	உமாமகேஸ்வரி	லால்பேட்	12000
67.	K.S. தேஜேஷ்வர்	VIth Std	உமாமகேஸ்வரி	லால்பேட்	12000
68.	M.S. பிரவீன்	XIIth Std	M. சுசிலா	விருத்தாச்சலம்	10000
69.	நா. சதீஷ்குமார்	BCA Ist year	ஆ. நாகராசன்	ஆதம்பாக்கம்	10000
70.	M. அவிந்தகா	BE IIIrd year	P. முத்துகுமார்	திருநெல்வேலி	25000
71.	M. சுமித்ரா	B.E. IVth year	C. அகிலாண்டம்	திருநெல்வேலி	25000
72.	தி. துர்க்கா பரமேஸ்வரி	B.E. IIIrd year	சி. திருமலையப்பன்	கோவில்பட்டி	25000
73.	N. ஸ்ரீராம்	B.E. IInd year	S. நாராயணன்	திருநெல்வேலி	25000
74.	V.S. ஷியாம்	B.E. IIIrd year	A. வீரபத்திரன்	திருநெல்வேலி	25000

75.	கோ. முத்துசெல்வி	XIth Std	மு. சுசீலா	திருநெல்வேலி	12000
76.	கோ. வேல்முருகன்	VIIIth Std	மு. சுசீலா	திருநெல்வேலி	10000
77.	விஸ்வசந்தோஷ்	B.E. IIIrd year	K. செல்வம்	திருநெல்வேலி	25000
78.	நா. ஸ்ரீநாத்சங்கர்	B.Com IIIrd year	நாராயணபெருமாள்	திருநெல்வேலி	17000
79.	சி. பாலவிசாக்	BBA IInd year	பா. சிதம்பரம்	திருநெல்வேலி	17000
80.	R. நங்கலட்சுமி	BA IIIrd year	V. ராமசுப்பிரமணியன்	திருநெல்வேலி	17000
81.	R. நந்தினி	B.E. IVth year	S. ரவிசந்திரன்	அரியலூர்	25000
82.	N. முத்துசங்கர்	B.E. IIIrd year	நித்யாநந்தர் பாஸ்கர்	மேடவாக்கம்	25000
83.	N. சிவதிலீபன்	B.Com IIIrd year	நித்யாநந்தர் பாஸ்கர்	மேடவாக்கம்	17000
84.	க. வேல்முருகன்	B.Com IIIrd year	செ. கணேஷ்	புழுதிவாக்கம்	17000
85.	S. சூரியா	XIIth Std	S. சோலையப்பன்	ஆதம்பாக்கம்	5000
86.	A. எப்சிபா கார்டர்	VIIth Std	J. ஆண்டனிகார்டர்	ஆதம்பாக்கம்	5000
87.	K. சாய் காவ்யா	Ist Std	S. சரஸ்வதி	பொன்னேரி	10000
88.	D.V. ஹர்ஷவ்	Ist Std	S. சரஸ்வதி	பொன்னேரி	10000
89.	ச. வளர்மதி	M.Sc. IInd year	வா. சங்கர்	வடலூர்	30000
90.	S. யுவராஜ்	B.E. IVth year	S. செந்தில்நாதன்	சீர்காழி	25000
91.	செ. அரவிந்த்குமார்	M.Sc IInd year	ரெ. செல்வராஜ்	திருவிடைமருதூர்	30000
92.	அ. புவனேஷ்வரன்	B.E. IIIrd year	வ. அறிவொளி	சீர்காழி	25000
93.	ரா. பார்கவி	B.Com IIIrd year	ச. ராஜேந்திரன்	முத்துசேர்வாமடம்	17000
94.	V. திவ்யா	B.Sc IIIrd year	S. வேலாயுதம்	முத்துசேர்வாமடம்	17000
95.	M. குருபிரசாத்	B.E. IIIrd year	G. முருகன்	ஸ்ரீமுஷ்ணம்	25000
96.	N. தேவிஸ்ரீ	XIth Std	N. மஞ்சுளா	ஒண்ணுபுரம்	12000
97.	ரா. சூரியா	BCA IInd year	ராசா	ஆதம்பாக்கம்	5000
98.	பிரிதிவிஜய்	BCA IInd year	சாந்திவிஜய்	சென்னை–19	5000
99.	சு. சுருதி	BCA IIIrd year	சு. மாலதி	மயிலாடுதுறை	17000
100.	செ. சஞ்சய்	B.Com Ist year	செந்தமிழ்செல்வன்	மயிலாடுதுறை	17000
101.	S. தனலட்சுமி	மருத்துவ உதவி	செந்தில்குமார்	கா.ம. கோயில்	10000
102.	வி.பு. பவித்ரன்	B.Sc Ist year	வி. புனிதா	குடவாசல்	17000
103.	சாய்கிரிஷ். வ	PP2- UKG	வி. வசந்த்	இரும்புலியூர்	10000
104.	A. ஆதித்யராசன்	Xith Std	N. அருள்முருகன்	குத்தாலம்	12000
105.	B. சௌந்தர்யா	B.E. IIIrd year	A.B. விமலா	ஆலப்பாக்கம்	30000
106.	V.S. கவிநாஷ்	VIth Std	R. வேல்முருகன்	கீழ்கட்டளை	22000
107.	R. பாலமுருகன்	B.E. IInd year	S. ஆனந்தகுமார்	பெருங்களத்தூர்	25000
108.	B. வெற்றிசெல்வன்	Vth Std	B. ஆனந்தி	சேந்தங்குடி	7000
109.	M. கார்த்திகேயன்	M.Sc IInd year	K. முருகன்	மயிலாடுதுறை	25000
110.	S. ஜெயஸ்ரீ	B.Com IIIrd year	M. சுரேஷ்	மயிலாடுதுறை	17000
111.	B. விஷ்ணு	B.E. IIIrd year	G. பாலசுப்பிரமணியன்	மயிலாடுதுறை	25000
112.	V. ரேவதி	B.Com IIIrd year	C. விஜயன்	மயிலாடுதுறை	17000
113.	பா. அ. அர்விந்	B.A. LLB IIIrd year	பா. அறிவழகன்	மயிலாடுதுறை	30000
114.	K. புவனேஷ்குமார்	XIIth Std	புவனேசுவரி	மயிலாடுதுறை	12000
115.	V. வினோதினி	B.E. IVth year	V. விஜயகுமார்	மயிலாடுதுறை	25000
116.	A.R. வருண்	B. Tech. IInd year	T. ஆடியபாதம்	மயிலாடுதுறை	25000
117.	V.S. நவீன்குமார்	B.Sc Ist year	R. செந்தில்குமார்	மயிலாடுதுறை	17000
118.	சோ. தர்ஷினி	B.Sc Ist year	B----. சோமநாதன்	மயிலாடுதுறை	17000
119.	M. ஷியாம்	Xth Std	M. மேரி	நந்தனம்	5000
120.	D. கவிப்பிரியா	XIth Std	S. வனிதா	குத்தாலம்	12000
121.	G. ஹரிஷ்	B.E. IIIrd year	N. கோவிந்தராசன்	முருகமங்கலம்	25000
122.	M. ஆதித்யா	XIIth Std	C. மாறன்	விருத்தாச்சலம்	12000
123.	S. மணிநாதன்	B.Com IInd year	K. சாமிநாதன்	பெரம்பூர்	17000
124.	V. கிரண்குமார்	XIIth Std	V. சந்தியா	செப்பாக்கம்	12000
125.	N. சினேகா	B.E. IIIrd year	V. நடராசன்	சேலம்	25000

126.	V. ரம்யா	XIth Std	V. சௌந்தரவள்ளி	பூலாமேடு	12000
127.	M. மானிஷா	B.Com Ist year	S. முருகவேல்	ஆதம்பாக்கம்	5000
128.	B. சாலமன்குரூஷ்	BBA IInd year	பெர்னார்ட் ஆரோக்கியராஜ்	கிண்டி	5000
129.	R. கவிபான்	DEEE IIIrd year	R. வள்ளி	ராமாபுரம்	17000
130.	செ. திவ்யாசாய்	B.E. IVth year	இ. செந்தில்நாதன்	பெண்ணாடம்	25000
131.	செ. ரூபலதா	B.Tech IIIrd year	கோ. செந்தில்வேலன்	நன்னிலம்	25000
132.	வா. ஞானஷ்கந்தன்	B.Com IIIrd year	தி. வாசு	சிதம்பரம்	17000
133.	ரா. காயத்ரி	MBA Ist year	ரா. ஜெயந்தி	சிதம்பரம்	30000
134.	ச. அமிர்தலேகா	B.Sc Agri IVth year	ரா. சந்திரகுமார்	சிதம்பரம்	25000
135.	S. வேல்முருகன்	BCA IIIrd year	R.M. சண்முகம்	சிதம்பரம்	17000
136.	N. நிகிதாசத்ரின்	B.Tech Ist Year IT	D. நந்தகுமார்	ஆதம்பாக்கம்	5000
137.	P. செரில்ஜோஸ்	IX Std.	J. பிரபாகரன்	ஆதம்பாக்கம்	5000
138.	S. ஷங்கரபாலாஜி	DECE IIIrd year	A. சிவகுமார்	சிதம்பரம்	17000
139.	K. ஹரிபிரசாத்	B.E. IIIrd year	N. குமார்	சிதம்பரம்	25000
140.	K. லோகேஸ்வரன்	DME IInd year	C. கொளஞ்சிநாதன்	முத்துசேர்வாமடம்	17000
141.	S. பிரவீன்	XIth Std	C. செந்தில்குமார்	விருத்தாச்சலம்	40000
